www.tamilarangam.net

சமர்

17

ஆடி-ஆவணி-புரட்டாசி

## இனசுத்திகரிப்பு சிறிலங்கா இனவெறி

# சாம்பல் மேடு நடவடிக்கையும், தமிழினத் துரோகிகளின் காட்டிக் கொடுப்பும்

இன்று தமிழ்த் தேசியம் அழிக்கப் படுகின்றது. தமிழ் கலாச்சாரம் கற்பழிக்கப் படுகின்றது. தமிழ் பொருளாதாரம் சாம்பலாக்கப் படுகின்றது. தமிழ் உயிர்கள் விளையாட்டுப் பொம்மைகளாக சுட்டு விளையாடப் படுகின்றது. ஆம்! இன்று ஒரு தேசிய இனம் தனது உரிமைக்காகப் போராடுவது என்ற ஒரு சாதாரண மனித உரிமை கூட பந்தாடப் படுகின்றது. ஒரு இனத்தின் அழிவில் தான், இனவெறி அரசு கொள்ளையடித்து சுகபோகம் அனுபவிக்க முடியும் என்பதை இன்றைய நிகழ்வுகள் மீளவும் பறைசாற்றி நிற்கிறது.



யாழ் குடாநாடு இடிபாடுகள் கூடிய ஒரு பரந்த சமவெளியாக மாறிவரும், இனவெறி ‘சந்திரிகா முற்போக்கு(?) அரசுநடத்தும் காட்டு வெறியாட்டத்தை முற்போக்கென பறைசாற்றும் எட்டப்பர் கூட்டம் இன்று துரோகத்துக்காக பதக்கங்கள் பெற சந்திரிக்காவின் முன் அணிவகுக்கின்றனர். ஏகாதிபத்தியங்கள் ஆசி வழங்க, சந்திரிகா பதக்கங்கள் வழங்க இவர்கள் சாம்பல் மேடுகளில் நின்று துப்பாக்கியுடன் துரோகப் பதக்கம் அணிந்து ஒரு கொள்ளைக்காரக் கூட்டமாக பவனிவர உள்ளனர். இதில் ஒரு பகுதியினர் மட்டும் பதவிகளுடன் அலைய, மற்றவர்கள் இவர்களின் எடுபிடிகளாக ஒரு குண்டர் படையாக, காடையர்களாகப் பவனி வருவர். இதுதான் எப்பொழுதும் ஒரு துரோக வரலாற்றின் வரலாறாகும். ➢ **பக்கம் 5 ல்..**

‘SAMAR’
87,Rue de colombes
92600 Asnieres sur seine
FRANCE


**உயிர்ப்பின் மீது விமர்சனம்**

அன்பளிப்பு-10

வெளியீடு : தமிழ் அகதிகள் வட்டம்　　பதிவு செய்யப்பட்டது 3-16956

www.tamilarangam.net

# பிஞ்சுகளின் ரத்தத்தின் மீது யுத்தத்தை ஏவாதீர்!




## உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா? இந்த சத்திய வசனங்கள்!

**"சமாதானத்துடன் அமைதியாக ஓய்வு எடுங்கள்: இன்னொரு முறை இந்தவாறு நிகழாதிருக்கட்டும்."**



இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னர் அதாவது 1945ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதாம் 10ம் நாள் ஜப்பான் நாகசாகி, ஹிரோஷிமா நகரங்களின் மீது ஈவிரக்கமின்றி அமெரிக்கா அணுக்குண்டை வீசியெறிந்த போது கொல்லப்பட்ட லட்சக்கணக்கான மக்களின் நினைவுச் சின்னத்தில் பொறிக்கப்பட்ட வாசகம் தான் இது.

அன்று வீசப்பட்ட இந்த அணுக்குண்டுகளோ வெறும் ஊசிக் குண்டுகள். இக் குண்டுகள் 10-15 கிலோ தொன் வெடிப்புச் சக்திகளை மட்டுமே கொண்டிருந்தன. ஒரு ரீ.என்.ரீ வெடித்தாலே, ஒரு மனிதனை 2,000 பீரங்கியால் ஒரே நேரத்தில் சுடுகின்ற அளவு வெடிப்பு சக்தி பிறந்து விடும். ஆனால் இன்றோ இவற்றை விட 300 மடங்கு வெடிப்பு சக்திகளைக் கொண்ட பிரமாண்டமான அணுவாயுதங்கள் தயாரிக்கப்பட்டு விட்டன.

கணக்கிடப்பட்ட மனிதகுல வரலாற்றில் இன்னுமே மனிதன் 300 வருடங்களைக் கூட யுத்தமின்றிக் கழிக்க முடியவில்லை. போரிலே தோன்றிய இதிகாசங்கள் கூட இன்று போரை வழிநடத்துகின்றது. உலகைத் தமது கைக்குள் சுருட்டிவிட நினைக்கின்ற ஏகாதிபத்தியங்கள் இன்னொரு உலகப் போருக்கு நட்சத்திர மண்டலங்களையும் தயாராக்கி விட்டன. இனி நாம் என்ன செய்யப் போகிறோம்? இந்த சத்திய வசனங்களை மறந்து விடப் போகின்றோமா? அல்லது யுத்தத்தைத் தலைமுழுகப் போகின்றோமா? அப்படியானால் மக்களின் கைகளுக்கு அதிகாரத்தை எப்பொழுது மாற்றுவது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ்.குடாநாட்டின் மீதான இராணுவ ஆக்கிரமிப்பும், புலிகளின் தோல்வியும்!

கடந்த 15 வருட யுத்தத்தில் மிக மோசமான ஓர் இன அழிப்பு இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்த சிறிலங்கா இனவெறி அரசு, புலிகளை யாழ்.குடாநாட்டில் தோல்வியுற வைத்துள்ளது. இதைப் புலிகள் 'பின்வாங்கல்' என்பதற்குப் பதில் தோல்வியாவே மதிப்பிட வேண்டியுள்ளது.

ஒரு யுத்தத்தில் முன்னேறுதல், பின்வாங்குதல், நிரந்தரப் படையாக இருத்தல், கெரிலாக் குழுக்களாக மாறுதல் என பல்வேறு இராணுவச் செயற்பாடுகள் சாத்தியமானதே. ஒரு யுத்தத்தின் நோக்கம், அதன் மீதான தெளிவான பார்வை, மக்கள் பற்றிய சரியான பார்வையென பல கூறுகள் மீது ஓர் விடுதலை அமைப்பு தன்னை மாற்றி ஒழுங்கமைத்துக் கொள்வதில் தான் ஒரு யுத்தத்தின் இறுதி வெற்றியே தங்கியுள்ளது. ஆனால் புலிகளின் இன்றைய நிலை இவைகளுக்கு உள்ளானது அல்ல.

அரசு, மாநில அரசு இவ் இயக்கங்களை செல்லப் பிள்ளைகளாகத் தத்தெடுத்த இந் நிகழ்வுகளில் இயக்கங்களின் ஒருவித வளர்ச்சிப் போக்கை, அம்பலப்படாத வகையில் கொண்டும் இருந்தனர்.

இதேநேரம் முஸ்லிம் மக்கள் பங்காளிகளாக இயக்கத்தில் இணைந்து நின்றதும், சிங்கள பொதுமக்களின் முன் ஒரு விரோதமற்ற நிலை இருந்ததும் சிங்கள இயக்கங்கள் சில தமிழ் இயக்கத்திடம் உதவிகள் சிலதைப் பெற்றதும், என பல்வேறு பரந்த ஆதரவுத் தளத்தை தமிழ் தேசிய விடுதலை கொண்டும் இருந்தது. சர்வதேசிய ரீதியாக தமிழ் மக்களின் பூரண மனமொத்த பங்களிப்பைப் பெற்றதும், இன வெறித் தாக்குதலை எல்லோரும் எதிர்த்து நின்றனர்.
1987ல் தனித்துப் புலிகள் என்ற நிலையில் கூட, சிறு இயக்கங்கள் இந்தியாவுக்கு

**1983 களில் மக்கள் பங்காளிகளாக இல்லாத நிலையில் பார்வையாளராக இருந்தபடி ''எங்கட பெடியள்'' என்ற அடைமொழியின் ஊடாக, இயக்கங்களை புனித வழிபாட்டுக்குரிய தெய்வங்களாக வணங்கினர்! அன்று இயக்கத்தின் மீதான ஏதிர் விமர்சனத்தை: மக்களை எதிர் விமர்சனம் செய்து இயக்கத்தைப் பாதுகாத்தனர்.**

இந்தியாவிலேயே இந்திய அரசுக்கு எதிராக போராட்டங்கள் வெடித்தன.

இந்தியா 83, 87களில் ஒரு பின்தளமாக இருந்தது. 87ல் சிங்களப் பகுதிகளில் இந்திய எதிர்ப்புணர்வு எழுச்சி பெற்றதும், இலங்கை அரசே இந்தியாவை எதிர்க்க புலிகளிடம் ஆயுதம் வழங்கியதும் எனப் புலிகள் தளங்களை எல்லாப் பக்கத்திலும் கொண்டிருந்தனர்.

துரோகியாக இருந்தவர்கள் யாழ் வந்ததும், அவர்களின் ஆடாவடித் தனங்கள் இந்திய அரசுடன் இணைந்து நின்ற போது மக்கள் கொதித்து வெறுத்து ஒதுக்கினர். புலிகளைப் பொறுத்த வரையில் ஆயுதங்களைப் பெறுவதோ, எதிரியை அம்பலப் படுத்துவதோ எப்பொழுதும் ஒரு பெரிய பிரச்சனையாக அவர்களுக்கு இருந்ததில்லை.

ஆனால், இன்று இராணுவம் யாழ் குடாநாட்டைப் பிடித்து விடும் என்ற நிலையில், புலிகள் மீளவும் யாழைக் கைப் பற்றுவது, அல்லது தம்மை ஒரு சக்தியாக மீளவும் மீளமைப்பது என்பது முற்றிலும் சாத்தியமற்ற ஒன்றே! ஏனெனில்:

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், அதுவும் இன்று புலிகளின் நிலையில் புலிகளின் தோல்வி என்பது, அவர்கள் மீளவும் பழைய நிலையை அடையமுடியாது இட்டுச் சென்றுள்ளது. ஏனெனில்: இது 83,87 அல்ல என்பதையும், புலிகள் மிகவும் தனிமைப்பட்ட ஒரு நிலைக்குள் வகையாக மாட்டிப்போயும் நிற்கின்றனர்.

1983 களில் மக்கள் பங்காளிகளாக இல்லாத நிலையில் பார்வையாளராக இருந்தபடி ''எங்கட பெடியள்'' என்ற அடைமொழியின் ஊடாக, இயக்கங்களை புனித வழிபாட்டுக்குரிய தெய்வங்களாக வணங்கினர்! அன்று இயக்கத்தின் மீதான ஏதிர் விமர்சனத்தை: மக்களை எதிர் விமர்சனம் செய்து இயக்கத்தைப் பாதுகாத்தனர். இதேநேரம் இந்தியாவில் தமிழக மக்கள் தங்கள் ஒருமித்த ஆதரவை வழங்கியதும், இந்திய மத்திய

எதிராக ஓரளவு போராடியும் இருந்த காலமாகும். மற்றைய பெரிய இயக்கங்கள் மீதான புலிகளின் அடக்கு முறையும், அதனால் ஒரு பகுதி மக்கள் புலிகளின் விடுதலைப் போராட்டத்தை எதிர்த்த நிலைகளில், அவ்வியக்கங்கள் துரோகம் இழைத்து இந்தியா, இலங்கை அரசுகளின் கால்களில் தவம் கிடந்தன.

இந்தியா பற்றிய மாயையைக் கொண்ட தமிழ் பேசும் மக்கள் மத்தியில், புலிகள் சில நடவடிக்கைகள் மூலமாக இந்திய எதிர்ப்பு உணர்வை ஓரளவிற்கு ஏற்படுத்தினர். இந்நிலைகளில் எழுந்த யுத்தம் இந்திய ஆக்கிரமிப் பாளர்களது கொரூர முகத்தை மக்கள் நேரடியாகவே உணர்ந்து, புலிகளின் போராட்டத்திற்கு தம்மால் இயன்ற வரை உதவினர். இதேநேரம் இந்தியாவில்-தமிழ் நாட்டில் ஒரு பரந்துபட்ட ஆதரவைக் கொண்டும் இருந்த புலி

1990களுக்குப் பின் புலிகள் தமது பிரதேசத்திற்கு உள் முழுமையான பேச்சு, எழுத்து, கருத்துச் சுதந்திரத்தை மறுத்ததும், சில ஆயிரம் பேரை சிறையிலடைத்தும், அல்லது கொன்று போட்டதும் என்ற நிலை யென்பது சுயமான செயற்பாடுகள் முற்றாகவே தடைப்பட்டது. குறைந்தது சரி, பிழைகளைக் கூட வெளியிலோ, புலி அமைப்பினுள்ளோ கதைக்க - வெளியிட - முடியாத வகையில் ஒரு சூனிய நிலையை அடைந்தது. இந்நிலை யென்பது எப்பொழுதும் செயல்கள், அதன் மீதான தியாகங்கள் என்பனவற்றின் மேலிருந்து திணிக்கப் பட்டது. இதையொட்டி புலி உறுப்பினர் ஒருவரின் கருத்தை இங்கு முன்வைப்பது இவற்றை எளிதாகப் புரிய உதவும்.

நாட்டில் நடந்த ஒரு சம்பவம் தொடர்பாக ஒரு புலி உறுப்பினரிடம் கருத்துக் கேட்டோம். அப்பொழுது அவர் கூறினார்:
*''எனக்கு அதுபற்றி உடனடியாகக் கருத்து இல்லை''* என்றார். ஏன்? என்றோம். *''நாம் ஒவ்வொருவரும் கருத்துக் கூறின் அது தவறு!*

www.tamilarangam.net

*தலைவன் என்ன நினைக்கின்றார் என்பது தெரிந்த பின்னே, அதுவே எனது கருத்து" என்றார்.* இதிலிருந்து புரிவது என்னவென்றால்: ஒரு பிரச்சனை மீதான கருத்துக்கள் ஒரு அரசியல் அடிப்படையில் கூட சொல்ல முடியாத நிலையும், மேலிருந்து திணிக்கப்படும் நிலையும், இது இயல்பில் செயலை ஒரு சூனிய நிலைக்குள் தள்ளி மட்டுப் படுத்துவதுடன் மௌனமான சூனியப் பார்வையையும் ஏற்படுத்துகின்றது.

ஓர் இடத்தில் ஒரு நிகழ்வை எதிர் கொள்ளக் கூட ஒரு புலி உறுப்பினரால் முடியாத நிலையை அதாவது தலைமை என்ன நினைக்கும்? என்ற நிலையில் தயங்கும் போக்கு இயல்பில் முன்னேறு வதற்குப் பதில் பின்னடைவே ஆகும்.

அதாவது ஒரு தாக்குதலில் தலைமை யின் உத்தரவின்றி, தனித்து விடப்பட்டால், தலைமையைக் கண்டு மிரளும் போக்கு முன்னேற முடியாத தோல் விக்கு இட்டுச் செல்லும். இந்த நிலை மை என்பது புலிகள், மற்றும் மக்களை ஒட்டு மொத்தமாகவே சுயமான செயற் பாட்டைத் தவிர்த்து நிற்கின்றது. இந்த நிலையில் தான் இன்று சிங்கள இராணு வம் முன்னேறிச் சென்றது.

மற்றும் இதிலிருந்து மீளுவது என்பது தலைமை தனது அணிகளுக்கும், மக்க ளுக்கும் ஒரு பரந்த ஜனநாயகத்தை வழங்குவதுடன், தீர்க்கமான மாற்றத்தை ஏற்படுத்தவும் முடியும். இதை இன்றுகூட புலிகள் உணரவில்லை என்பதை நாம் காணமுடிகிறது.

1995களில் இந்தியா என்பது ஒரு மௌனமான, சிங்க இனவெறி ஆககிர மிப்பை அங்கீகரித்து நிற்கின்ற வகை யில் செயற்படுவது உலகில் தமிழ்த் தேசியம் அழிக்கப்படும் போது அங்கீக ரிக்கப்படுவதாகவே அமைகிறது. ராஜீவ் கொலை (இவர் ஒரு குற்றவாளியே) என்பது ராஜதந்திரம் அற்ற, எதிர்கால போராட்டத்தின் ஒரு பின் தளம் பற்றிய எந்த முன்னோக்கின்றியும் செய்யப் பட்டதே. இந்தியாவில் ஒரு பரந்த எதிர்ப்புத் தளத்தைக் கொண்டுள்ள அதே நேரம், பின்தளத்தை முழுமை யாகவே புலிகள் இழந்தனர். சிங்கள இனவெறி ஆக்கிரமிப்பில் இருந்து மீள, தன்னைப் புணரமைத்துக் கொள்ள, இன்று முன்பிருந்த பின் தளங்கள் இல்லாமற் போயுள்ளது.


மற்றும் முஸ்லிம் மக்களை குடாநாட்டி லிருந்து வெளியேற்றியது, மன்னார் முஸ்லிம்களை வெளியேற்றியது, பல முஸ்லிம்களை கிழக்கு மாகாணத்தில் தாக்கி அழித்தது, தமது சொந்த இயக் கத்திலிருந்த முஸ்லிம் உறுப்பினர்களை ஒழித்துக்கட்டியது, அன்மையில் திரு கோணமலையின் ஒரு பகுதியில் முஸ் லிம் மக்களை வெளியேற்றியது, என முஸ்லிம் மக்கள் மீதான தொடர்ச்சியா ன எதிர் நடவடிக்கை புலிகளை விடுதலை வீரர்களாகப் பார்ப்பதற்கு பதில் வெவ்வேறு கோனத்தில் சர்வதேசி ய ரீதியில் பார்க்கப்படுகிறது. இது உள் நாட்டில் முஸ்லிம் மக்களின் பக்கம் எந்த அனுதாபத்தையும் 83, 87 களில் பெற்றதைப் போல பெறமுடியாத நிலையை இன்றடைந்துள்ளது.

மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் புலிகள் 83,87 களில் பெற்றுவந்த ஓரளவு ஆதரவு, தார்மீக ஒத்துழைப்பை இன்று இழந்து விட்டனர். பல்வேறு சிங்களக் கிராமங்களில் குழந்தைகள், பெண்கள் என கொல்லப்பட்டதும், பேச்சு வார்த்தையில் ராஜதந்திரம் அற்ற முந்திக் கொண்டு முன்னேறித் தாக்குதல் எனப் பல்வேறு சாதாரண சிங்கள மக்கள் மீதான தாக்குதல் புலி களின் செயல்கள் மீது தார்மீக ஆதரவைக் கூட புலிகள் சிங்கள மக்கள் மத்தியில் இழந்துள்ளனர்.

பரந்துபட்ட மக்கள் இன்று ஒரு விடுதலைப் பிரதேசத்தில் விடுதலைக் குரிய எந்த விடுதலையையும் (சிங்கள இனவெறி அடக்குமுறையைத் தவிர) பெறாத நிலை என்பது சுதந்திரம், மற்றும் ஒரு பொருளாதார வாழ்வியலை இழந்துள்ள இன்றைய நிலை என்பது, இனவெறி அரச ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடுவ தற்குப் பதில், ஒரு மௌனத்தை, சூனியத்தை இன்று ஏற்படுத்தியுள்ளது. இது எதிர்காலத்தில் புலிகளை தற்கொ லைக்கே இட்டுச் செல்லும்.

இதுபோன்ற பல்வேறு காரணங்கள் 1995ல் மீளவும் தமிழ் மண்ணை மீட்க புலிகளால் முடியாத நிலை தோன்றியுள் ளது. இன்றைய நிலையை ஒட்டி பல் வேறு புலி உறுப்பினர்கள் 83, 87களை இன்று நினைவு படுத்தும் இன்றைய நிலையில், அவர்கள் 83, 87, 95 க்கு இடையில் மாறி வந்த பல்வேறு நிகழ்ச் சிப் போக்குக்களையோ, தாம் தம்மில் மட்டுமென சுருங்கி தனிமைப்பட்டு சுற்றி வளைக்கப் பட்டிருப்பதையும் இன்னமும் காணமுடியாது பால் குடிக்கும் பூனையா க கண்களை இறுக மூடி நிற்கின்றனர். இதன் மீதான இயலாமை நகரும் போது ஒரு வெற்றிடத்துக்கு தொப்பென விழுவ தற்குள் புலிகளை இட்டுச் செல்லும்.

மற்றும் சர்வதேசிய ரீதியில் பார்க்கும் போது 83, 87களை விட இன்று மேற்கு நாடுகளில் பாரிய சமுக நெருக்கடிகளை இவ்வரசுகள் எதிர் கொள்கின்றன. 2 - 3 லட்சம் இடம் பெயர்ந்த தமிழ் அகதிக ளை ஒரு பாரிய சுமையாகக் கருதும் இவ்வரசுகள், இவ் அகதிகளை திருப்பி அனுப்பவும், ஓர் அவசர முடிவை அடையவும் விரும்புகின்றனர். எனவே அரசைப் பலப்படுத்தவும், அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றி அவர்களின் பாணியில் அழுவதுடன், புலிகளை



அதேநேரம் புலிகள் அதிகளவு உற வையும், நம்பிக்கையையும் கொண்ட தி.க போன்ற அமைப்புக்கள், பல்வேறு பிழையான அரசியற் கட்சிகளைப் போல இதுவும் ஒன்றாகும். பார்ப்பான எதிர்ப்பு எனக் கூறியபடி ஜெயலலிதாவின் முந் தானையைப் பிடித்துத் திரியும் வீரமணி போன்ற சந்தர்ப்ப வாதிகளை புலிகள் அதிகளவில் இந்தியாவில் நம்புவது என்பது புலிகள் எதிர்காலத்தில் தம்மை மீள நிலைநிறுத்துவது என்பது முடியா த தோல்விக்கு இட்டுச் செல்லும்.

ஒரு சூனியமான மயான பூமியில் வாழ்ந்த வாழ்வும், இன்று ஒரு பரந்த வெளியில் கஸ்ரப் பிரதேசத்திற்கு நகர்ந் ததென்பதுவும்,அவர்கள் பூர்வீக வாழ் வியல் இயல்பில் போராட்டத்திற்கு எதிர் நிலையைப் பெற்று வேகம் பெறும்.

1983க்கு முன் தமிழ் பேசும் மக்கள் சிங்கள இனவெறி அடக்கு முறையைத் தவிர மற்றப்படி பெற்றுவந்த ஓரளவுக் கான கருத்து, பேச்சு, எழுத்து

அழிக்கவும் கங்கனம்கட்டியும் நிற்கின் றனர். சாதாரண மனிதாபிமான மக்களின் மன நிலையை வென் றெடுப்பதற்கு இவ்வரசுகள் புலிகளின் மக்கள் விரோத சிங்களக் கிராமப் படுகொலைகளை பிரச்சாரத்துக்கு முன்தள்ளிச் செல்கின் றனர். எதிர் காலத்தில் புலிகளின் செயற்பாடுகள் மேற்கு நாடுகளில் கடின மாக மாறவுள்ளதை அன்மையில் புலி உறுப்பினரை நாடு கடத்த கனடா சமர்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

➢ அரசு எடுத்த முடிவு பறைசாற்றுகின்றது. இந்த வகையில் எதிர் காலத்தில் புலிகளுக்கு எதிராக சர்வ தேசிய ரீதியில் ஒரு பாரிய தடைகள் ஏற்படவுள்ளது. புலம் பெயர்ந்த தமிழ் பேசும் மக்கள் மத்தியில் புலிகளின் மிகைப் படுத்தப்பட்ட பிரச்சார வடிவம் ஊதிப் பெருத்த நிலையில் அண்மைய யாழ் குடாநாட்டு இழப்பு பாரிய வீழ்ச்சியை தமிழ் பேசும் மக்கள் மத்தில் ஏற்படுத்தி உள்ளது.

இது போன்ற பல்வேறு நிலைகள் புலிகளுக்கு பாதகமான, எதிர் காலங்களில் மீள முடியாத சிக்கலுக்குள் சிக்கிப் போய் உள்ளனர். ஆயுதம், பணம், நபர் எண்ணிக்கை என்ற எல்லைக்குள் மட்டும் தம்மை மீள அமைக்கின்ற என்ற புலிகளின் நிலைப்பாடு கற்பனையாக இன்றுள்ள புலிகளின் நிலையே இட்டுச் செல்லும். ○



# இனசுத்திகரிப்பு.....

## முன்பக்கத் தொடர்ச்சி

இந்த வகையில் துரோகப் பதவிகளைப் பெறுவதில் உள் முரண்பாடுகளுடன் போட்டியிட உள்ளவர்கள் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்கள், PLFT யின் ஒரு பகுதியினர், PLOTE, TELO, EPRLF, EROS, EPDP, ENDLF, TULF, தமிழ் காங்கிரஸ் என பல்வேறு குழுக்களும், பல்வேறு பட்டம் பெற்ற புத்திஜீவிகளும் இதற்காக குரல் கொடுக்கின்றனர்.

ஆம், துரோகப் பதக்கம் ஒரு தமிழ் தேசிய இனத்தின் அவமானச் சின்னமாகும். தமிழ் தேசிய இனத்தை அழிக்க தமது எல்லா வித துரோகங்களுக்கும் ஆன காரணத்தை இவர்கள் புலிகளின் மீது வீசி எறிகின்றனர். புலிகள் மக்களின் அடிப்படை உரிமைகளை நசுக்கினாலும், சாதாரண அப்பாவி மக்களின் மீது கண்மூடித் தனமான படுகொலைகளையும், எதிரி யார்? நண்பன் யார்? என்பதைக் கூட அடையாளம் காண முடியாத ஒரு பாசிச இயக்கம் தான்.

ஆனால் இவை எல்லாவற்றையும் இந்த துரோகிகள் கூறவோ, இதைச் சொல்லி தங்கள் இன அழிப்பு துரோகத்தை மூடி மறைத்து விடவோ முடியாது. புலிகளின் செயல்களை எதிர்ப்பவன் யாராக இருந்தாலும் அவன் நிச்சயமாக சொநத மக்களைச் சார்ந்திருக்க வேண்டும். மாறாக இத் துரோகிகள் இனவெறி சிறிலங்கா இனச்சுத்திகரிப்பு அரசுடன் கூடிக் குலாவி, இந்தியா, மற்றும் ஏகாதிபத்தியங்களுடன் கூத்தடித்தும் தமிழ் இனத்தை அழிக்கும் இவர்களின் செயல் மன்னிக்க முடியாத வரலாற்றுத் துரோகமே ஆகும்.

வரலாறு இவர்களை துரோகிகளாக, எட்டப்பராக வரையறுத்துள்ளது. இவர்களை மக்கள் தங்கள் வரலாறுகளில் ஒழித்துக் காட்டுவர். புலி எதிர்ப்பில் தனிநபர் பயங்கர வாதத்தை புலிகளுக்கு எதிராக என்று கூறி அங்கீகரிக்கும் பல்வேறு ஜனநாயக வேடம் கொண்ட ஒரு சேர் கூட்டம் ஐரோப்பா, இலங்கையென்று அலைந்து திரிகின்றது.

நாங்கள் புலிகளின் சித்திர வதைகளை நேரடியாகவே அனுபவித்தவர்கள். சொந்த இயக்கத்தின் அராஜகத்தை எதிர்த்து வெளியேறிய, பல்வேறு ஜனநாய போராட்டங்களில் ஈடுபட்ட நபர்களை அருகிலே வைத்து சுட்டக் கொன்ற நடைமுறைச் சம்பவத்தைக் கூட சந்தித்தவர்கள் தான் நாமும். ஆனால் ஒருபோதும் நாம் புலிகளை தனிப்பட்ட ரீதியில் அழிக்க வேண்டும் என்றே, அல்லது ஏதோ ஓர் விதத்தில் புலிகள் அழிந்தால் போதும் என்றோ மனதளவால் கூட சந்தோஷப் பட்டவர்களோ அல்ல. மாறாக நாம் இவற்றை புலிகின் அரசியலோடு மட்டும் இனம் கண்டு, அரசியல் வழியில் மட்டும் எதிர்த்துப் போராட விளைகின்றோம்.

ஆனால் ஐரோப்பாவிலும், இலங்கையிலும் முற்போக்கு வேடமிட்ட பலர் தமது புலி எதிர்ப்பில் தலைகால் புரியாமல், இன்று இனவெறி அரசு புலிகளை அழிக்கும் போது, தமிழ் மக்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கும் போது



சந்தோஷப்படுவது என்பது ஒரு தனிநபர் பயங்கரவாத புலி எதிர்ப்பே ஆகும்.

தொடர்ச்சி ➢ பக்: 31 இல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ் குடாநாட்டு ஆக்கிரமிப்பால் இடம் பெயரும் அகதிகள்..

யாழ் குடாநாடு 83களில் 9 லட்சம் குடிமக்களைக் கொண்டிருந்தது. இது இன்று 4 லட்சங்களாகக் குறைந்த நிலையில் மிகுதிப் பேர் கொழும்பு, இந்தியா, மேற்கு நாடுகளென இடம் பெயர்ந்தும் உள்ளனர்.

இன்ற இனவெறி அரசின் தமிழ்ப் பிரதேசத்தை சாம்பல் மேடாக்கும் 'சூரிய பிரகாச' நடவடிக்கை வட- தென்மராட்சி தவிர்ந்த அனைத்து மக்களையும் அகதிகளாக ஓட வைத்துள்ளது. இன்று யாழ் குடாநாட்டில் எஞ்சியுள்ள 4 லட்சம் மக்களில் 50 வீதத்திற்கு மேல் தாழ்த்தப்பட்ட மக்களும், மிகவும் அடிநிலையில் இருந்த நடுத்தர கீழ்ப் பிரிவுகளுமேயாகும்.

இராணுவத்தின் சாம்பல் மேடாக்கும் முன்னெடுப்பு யாழ் மக்களின் இயல்பான கலாச்சாரமாக இருந்த வீடு என்ற தமது வாழ்வையே அர்ப்பணித்து உருவாகும் வீடு இன்று சாம்பல் மேடாகியுள்ளது. 60 வருட மனித வாழ்வை வீடு என்ற ஒரு குறிக்கோளுடன் தின்னாமற் குடிக்காமல் மீதப்படுத்திக் கட்டிய வீடு இன்று சுடுகாடாக்கப் பட்டுள்ளது. யாழ் குடாநாட்டிலுள்ள 2 அறைகளுக்கு மேலுள்ள ஒரு லட்சம் கல்வீடுகளை இராணுவம் இடித்துத் தள்ளி தரைமட்டம் ஆக்கிய படியே முன்னேறுகின்றது. ஒரு தொங்கலில் இருந்து மறுதொங்கல் தெரியும் வகையில் சுத்தம் செய்யும் இராணுவமானது பனை, தென்னை, பலா, வாழை, மா ......என அனைத்துத் தாவர வளங்களையும் கூட விட்டுவிடவில்லை. அழித்துத் துலைத்து வருகிறது. இதன் மூலம் எதிர் காலத்தில் யாழ் குடாநாட்டை ஒரு பாலைவனமாக, செல்வம் கொழித்த பூமியை ஒரு வனாந்தரக் காடாக்க வெறியோடு முன்னேறி வருகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களின் ஓலைக் குடிசைகள் தீயிடப்பட்டு அது சாம்பலாக எஞ்சும் அளவுக்கு ஒரு தமிழ் இன அழிப்பு உயிர், பொருள், நிலம்... அனைத்தின் மீதும் துவசம் செய்யும் இனவெறியர்களின் கொட்டம் தொடர்கிறது.





இன்று யாழ் குடாநாட்டின் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகிய பகுதியில் வெளியேறும் லட்சக்கணக்கான மத்திய தர, மற்றும் கீழ்ப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு பரந்த வெளிக்கு நகர்கின்றனர்.

கிளிநொச்சி நோக்கி நகரும் மக்கள், அங்கு எந்த விதத்திலும் ஒரு ஒதுக்கு இடத்தைக் கூடப் பெறமுடியாமல் பரந்த காடுகளைச் சென்றடைகின்றனர். இது மத்தியதர வர்க்கத்தின் இயல்பான குணாம்சம் மீது பாரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். தமது காலம் பூராவுமான உழைப்பை இழந்து அகதியாக வானமே முகடாகக் கொண்ட பொட்டல் காட்டு வெளியில் இவர்களின் தார்மீக பலம் தகர்ந்து விடுவது தவிர்க்கமுடியாது. இவர்கள் இனவெறிக்கு எதிராகப் போராடுவதற்குப் பதில், புலிகளுக்கு எதிராக உணர்வைப் பெற்றுவதில் வேகம் பெறுவர். ஏனெனில் அவர்கள் எந்த சொந்த உணர்வையும் சுயமாகக் கொண்டிருக்க முடியாத படியான புலிகளின் ஆட்சி என்பது இன்றைய நிலைக்கான காரணத்தை புலிகளின் மீதே தேடிக் காண முயல்வர்.

இங்கு மிக வறுமையில் எல்லாவித உழைப்பையும் இழந்து அகதியாகிப் போன தாழ்த்தப்பட்ட மக்களின், இந்த இடம் பெயர்வு அவர்களின் சமூகப் பொருளாதார வாழ்வில் பாரிய மாற்றத்தை எதிர்காலத்தில் இது ஏற்படுத்தியே தீரும். அவர்களின் இயல்பான உழைப்பும், பரந்த வவுனியா, மன்னார் முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற இடங்களிலுள்ள பொட்டல் காட்டுப் பகுதியில் அவர்கள் நிரந்தரமாகவே நிலைகொள்ள வாழ்ப்பை வழங்கும்.

யாழ் குடாநாட்டில் ஒவ்வோர் உயர் சாதி கிராமப்புற குடியிருப்புக்களின் பின்புறத்தைச் சூழவும் ஒதுக்கி விடப்பட்ட வளமற்ற நிலங்களில் வாழ்ந்த இந்த மக்கள் அந்த நிலங்களைக் கூட சொந்தமாகக் கொண்டவர்கள் அல்லர். இன்று ஒரு பரந்த வெளியை, மக்களின்றி உள்ளதைக் காணும் இவர்கள் இதைப் பயன்படுத்திக் கொள்ள தமதாக்கிக் கொள்ள இயல்பிலேயே முன்வருவர். இதில் இன்று புலிகளின் பங்களிப்பு ஒத்துழைப்பு இருப்பின் அவர்கள் தமிழ் தேசியத்தின் ஒரு மாபொரும் ➢



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







பொருளாதார முன்னேற்றத்திற்கு இப் புலம் பெயர்வின் ஊடாக இம் மக்கள் பங்காளியாக மாறுவர். மற்றும் இது சாத்தியமான (புலிகள் தடைசெய்யாவிடின்) கலாச்சார, பண்பாட்டுத் துறையில் பொருளாதாரப் பலம் பெற்று இம் மக்கள் தம்மீதான சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்ட உணர்வில் உரம் பெறுவர்.

இனச் சுத்திகரிப்பில் இன்னொரு புறத்தில் பாரிய பொருளாதாரத் தடையை விரித்து, பட்டினி போட்டு சாகடிக்கப்படுகிறது. இந்த வகையில் முன்பே இருந்த பொருளாதாரத் தடையுடன் புதிதாக அகதிகள் கிளிநொச்சி நோக்கி நகர, அங்கு முன்பு பொருளாதாரத் தடைக்கூடாக லொறியில் வந்த பொருட்களைத் தடுக்க புதிய பொருளாதாரத் தடைகளை ஜனநாயக சந்திரிகா அரசு ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் பட்டினியிட்டு தமிழ் இனத்தை சரணடைய வைக்க சிங்கள இன வெறியர்கள் எல்லாவற்றையும் இழந்து வரும் அகதிகளைக் கூட கொடுமை யாக ஒடுக்குகிறது.

இன்று வெட்டவெளிகளுள் நகர்ந்து வரும் இம் மக்களை எதிர்காலத்தில் முழுமையாக காட்டுக்குள் நகரும் வகையில், இனவெறி இராணுவத் தாக்குதலை இப் பிரதேசத்திலும் தொடுக்கலாம். இதன் மூலம் காடுகளில் வைத்து பட்டினி இட்டும், காடுகளை நெருப்பிட்டு அழிக்கும் ஓர் இனச் சுத்திகரிப்பை இந்த இனவெறி அரசு செய்ய முயலலாம் என்பதை தமிழ் பேசும் மக்கள் முன்னெச்சரிக்கையாகவே இருந்து கூட்டாக எதிர்காலத்தில் போராட வேண்டும் ○

## முடமாகிக் கிடக்கும் பூகம்ப நிவாரணம்

மகாராஷ்டிரா மாநிலத்தில் லட்டூர் பகுதியில் பூகம்பம் தாக்கி இரண்டு வருடங்கள் ஓடி மறைந்து விட்டன. நிவாரணப் பணிகளை மேற் கொள்ள அரசு 1084 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருந்தது. அரசின் நிதி உதவியோடு பல்வேறு சமூக நலன் அமைப்புகளும், தனி மனிதர்களும் கூட நிவாரணப் பணிகளுக்காக அரசுக்குப் பண உதிவி அளித்தனர். சமீபத்தில் மகாராஷ்டிரா மாநில உயர் நீதி மன்றம் நிவாரணப் பணிகள் பற்றி ஆய்வு செய்ய கமிஷன் ஒன்றை நியமித்தது. இக் கமிஷன் தனது அறிக்கையில் ''கடந்த ஒன்றரை வருடங்களில் பாதிப்புக்குள்ளான எந்தவொரு பகுதியிலும் அரசு ஒரு ஓலைக் குடிசையைக் கூட கட்டிக் கொடுக்கவில்லை'' எனக் குறிப்பிட்டுள்ளது. பல அமைப்புக்கள் நிவாரண உதவி குறித்து கொடுத்த மனுக்களை விசாரித்த பொழுது தான் இந்த அலட்சியப் போக்கு அம்பலமாகியது.

நன்றி: புதிய ஜனநாயகம்

## மொஸ்கோவில் மாபெரும் எழுச்சி பேரணி!

கடந்த மே மாதம் மொஸ்கோவில் இரண்டாம் உலகப் போரின் 50ம் ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி 3 லட்சத் திற்கும் அதிகமான மக்கள் கைகளில் செங்கொடியை ஏந்திக் கொண்டு, ''சோவியத் அதிகாரம்'', ''சோவியத் யூனியன்'' என முழக்கமிட்டு பிரமாண்டமான பேரணியினை நடத்தினர். அதே நாளில் அதிபர் யெல்ட்சின் இதனைக் கொண்டாட அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி அதிபர்களுடன் கைகோர்த்துத் திரிந்ததைக் கண்டித்தும் முழங்கினார்கள். இவர்கள் ஊர்வலத்தில் வந்த இரண்டாம் உலகப் போர் வீரர்கள் யெல்சின் தங்களுக்கு அளித்த யுத்த நினைவுப் பதக்கங்களை கழற்றி வீசி எறிந்தனர். முன்னாள் சோவியத் யூனியனில் அங்கம் வகித்த உக்ரேயன், தாஜிக்சிஸ்தான், பால்டிக் குடியரசுகள் உள்ளிட்ட பல நாடுகளிலும் செங்கொடியுடன் மக்கள் இத்தகைய ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தியுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

நன்றி: புதிய ஜனநாயகம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# யாழ் குடாநாட்டு இராணுவ நடவடிக்கையின் மூல உபாயம் யாரால் வழி நடாத்தப்பட்டது?

யாழ் குடாநாட்டை கைப்பற்றும் முயற்ச்சியில் இனவெறி இராணுவம் தனது காட்டுமிராண்டித் தார்ப்பாரை நடத்தும் இன்றைய நிலையில் இது எப்படி இராணுவ ரீதியில் சாத்தியமானது? புலிகளின் இராணுவக் கண்ணோட்டம் சுயமானதாக இருந்து இருப்பின் ஒருக்காலுமே உடனடியாக யாழ் குடாவைக் கைப்பற்றும் இராணுவ முயற்ச்சி சிறிலங்காவுக்கு வெற்றி அளித்திருக்க முடியாது.


யாழ் குடாநாட்டைக் கைப்பற்றும் முயற்ச்சியில் இராணுவமானது மிகவும் திட்டமிட்ட முறையில் செயற்பட்டு வருகிறது. இதன் பின்னணியில் சர்வதேச சக்திகளின் முறைப்படியான தெளிவான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. யாழ் குடாநாட்டைக் கைப்பற்ற,






அங்கிருந்த புலிகளின் படைப்பிரிவுகளை வேறு இடங்களுக்கு நகர்த்துவது இராணுவத்திற்கு அவசியமாகவே இருந்தது. இதை சர்வதேச சக்திகள் தான் புலிகளின் மூலம் அரசுக்குச் செய்து கொடுத்துள்ளது.

ஈழப் போர்-3 ஆரம்பித்தவுடன் இதன் மூல உபாயங்கள் திட்டமிட்ட முறையில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.



புலிகள் பெருமளவில் கிழக்கை நோக்கி நகர்ந்ததும், பல முகாம்களை தாக்கி அழிக்கத் தொடங்கிய நிலையில், இராணுவம் பல முகாங்களை தாமாகவே கைவிட்டு படைகளை யாழில் குவித்தும் ஒரு சீரன வகையில் இரு பக்க படை நகர்வை எப்படிச் செய்ய முடிந்தது? இந்த படை நகர்வு புலிகள் கிழக்கை நோக்கியும், இராணுவம் வடக்கை நோக்கியும் நகர்ந்த நகர்வு ஒரு தற்செயலான நிகழ்வாக இன்று யாருமே பார்க்க முடியாது. இதன் பின்னணியில் ஒரு சக்தியே இரண்டு பக்கங்களுக்கும் ஆலோசனை வழங்கி ஆட்டிப் படைத்துள்ளது என ஊகிக்க முடியும். கிழக்கில் இராணுவ முகாம்களை புலிகள் கைப்பற்றிய போதும், இராணுவம் முகாம்களை விட்டுவிட்டு நீங்கிய போதும் புலிகளின் பிரச்சார சாதனங்கள் பலமாக அதை மறுபக்கம் சிந்திக்க முடியாத வகையில் அவர்களையே நகர்த்திச் சென்றது. அதில் ''தலைவர் உத்தரவு கிழக்கைக் கைப்பற்று'' என்ற கூற்று புலிகளின் கண்களைக் கூட மறுபக்கம் பார்க்க விடாது கட்டி வைத்துள்ளது.

இந்நிலையில் தான் சிறிலங்கா கடற்படை மீது புலிகளின் தாக்குதல் கூட இதே மாதிரிப் பிரச்சாரத்திற்கு உள்ளானது. யுத்த தந்திர ரீதியில் ஒரு படையும் அதன் ஆயுத பலமும் ஒன்றை முறியடிக்கும் போது அதை மீறி ஆயுத தளபாடம் பெறுவது என்பது ஒரு வழமையான விடயமாகும். ஆனால் சில கப்பல்கள் தாக்கப்பட்டவுடன் முழுமையாக ஒழிக்க உத்தரவு என்ற பிரச்சாரங்கள், எதிரி நவீன ராடர் வசதியுடன் தாக்குவான் என்பதை சொல்லாத புகழ் உரைகள் நம்பிக்கை யீனத்தை பின் ஏற்படுத்தி விடுகின்றது.

இன்று புலிகளின் விமானப்படை, கடற்படை, ''கிழக்கைக் கைப்பற்றல்''; ''யாழ்ப்பாணத்தை விடமாட்டோம்'' என்ற தொடர்ச்சியான மிகைப் படுத்தப்பட்ட, ஊதி வீங்கிய பிரச்சாரங்கள் இன்று தகர்ந்து விடும் என்ற நிலைமை புலி உறுப்பினர்களைக் கூட நம்பிக்கையீனத்திற்கு நகர்த்திச் சென்று விடுகின்றது. இது அவர்களின் பல்வேறு கட்டுரைகளிலும் தென்படுகின்றது.

3ம் கட்ட ஈழப்போரின் ஆரம்பத்தில் முல்லைத்தீவு - கிழக்கில் புலிகளின் கூர்மையான விடாப் பிடியான தொடர்ச்சியான தாக்குதல்கள் இன்று இல்லையென்னும் அளவிற்குச் சென்றுள்ளது. இதன் மூலம் அரசு புலிகளின் பலவீனத்தை இனம் கண்டுள்ள நிலையும், புலிகளின் படைப் பிரிவுகள் வடக்கு நோக்கி மீள நகர்ந்ததையும் அரசு அவதானித்தது - உணர்ந்தது. இந்நிலையில் தான் புலிகள் சிங்களக் கிராமங்கள் மீது தாக்குதலைத் தொடுத்தனர். சாதாரண சிங்கள கிராம மக்கள் அன்றாட வயிற்றுப் பிழைப்புக்காக ➢ சமர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## அமெரிக்க நீதி மன்றத்தில் நிற வெறி

அமெரிக்காவில் ஒரே மாதிரியான குற்றங்களுக்கு வெள்ளையர்களுக்கு குறைந்த காலத் தண்டனையும் கருப்பு இனத்தவருக்கு கூடுதல் தண்டனையும் வழங்கப்பட்டு வருவது அம்பலமாகி உள்ளது. 80,000 ஒரே மாதியான குற்ற வழக்குகளில் வெள்ளையருக்கு 33 மாதகால தண்டனையும் கருப்பருக்கு 36 மாதகால தண்டனையும் வழங்கப் பட்டுள்ளது. "போதை மருந்துப் பழக்கம் மற்றும் கடத்தல் தொடர்பான வழக்குகளில் இப்பாரபட்சம் வெளிப்படையாகத் தெரிவதாக" இனப்பிரச்சனையை ஆய்வு செய்த வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர். "சட்டத்தின் முன் அனைவரும் சமன்" எனப்படும் ஜனநாயக மாண்பு எப்படிக் கேலிக்கூதாகிவிட்டது பாருங்கள்.

நன்றி: புதிய ஜனநாயகம்

வாழ்கின்ற அப்பாவிகள் மீது புலிகள் தாக்கியதன் மூலம் என்னத்தைச் சாதிக்க முனைந்தனர்.

இத் தாக்குதல் மூலம் சிங்களப் பகுதிகளில் இருந்த அரசுக்கு எதிராக, புலிகளின் போராட்டத்தை ஆதரிக்கும் சிலரைக் கூட மௌனமாக்கியதும், சர்வதேச ரீதியில் தேசிய விடுதலைக்கு எதிரான பாரிய பிரச்சாரத்திற்கு இது இட்டுச் சென்றுள்ளது. குறிப்பாக BBC, CNN, மற்றும் ASIA செய்திச் சேவைகள் அனைத்தும் இவற்றை மீள மீளக் காட்டுவதன் மூலம் புலிகளுக்கு எதிரான ஒரு பாரிய பிரச்சாரத்தைச் செய்து வருவதன் மூலம், தமிழ் தேசம் எரிக்கப் படுவதை சாம்பலாக்கப் படுவதை திட்டமிட்டே மூடி மறைத்துள்ளனர்.

சிங்களக் கிராமத் தாக்குதலில் சுரண்டும் அரசுக்கு இதுபற்றிய எந்த வித கரிசனையோ, அல்லது தனது இனம் அழிந்தது என்ற அக்கறையோ இருப்பது இல்லை. சுரண்டவதற்காக தனது இனத்தைச் சேர்ந்த ஒருலட்சம் பேரைக் கொன்று குவித்த இவ்வரசு, ஒரு சிங்களக் கிராமத் தாக்குதலை இட்டு ஒருபோதும் அலட்டிக் கொள்வதில்லை. ஒரே ஒரு நெருக்கடி என்னவென்றால் மற்றைய இன வெறியர்களுக்கு ஒருக்கால் பதில் அளிப்பது மட்டுமே இவர்களுக்குப் பிரச்சனையாக இருக்கும். மற்றும் படி தனது ஒடுக்குமுறைக் கரங்களை லேசாகத் துடைத்து மறைப்பதற்கே இதை ஒரு பிரச்சாரக் கைக்குட்டையாகப் பாவிக்கும்.

பலம் - பலவீனம் இவைகளில் இருந்து யுத்தத்தைத் திட்டமிடவும், எதிரியை அழித்த ஒழிக்கவும் சொந்த முடிவுகளை சார்ந்து இருக்கவும், பரந்துபட்ட தமிழ்பேசும் மக்களைச் சார்ந்து இருக்கவும், சிங்கள முஸ்லிம் பிற இன மக்களின் பரந்துபட்ட ஐக்கியத்திற்கு உழைக்கும் கொள்கையைக் கொண்டு இருப்பதும் தான் இராணுவ ரீதியில் யுத்தத்தை வெற்றி பெற வைக்கும் ஒரே ஒரு வழியாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாழ்நிலை தான் உணர்வுகளைத் தீர்மானிக்கிறதே ஒழிய: உணர்வுகள் வாழ்நிலையைத் தீர்மானிப்பவை அல்ல!





மீண்டும் மார்க்சிய விரோதக் கருத்துக்களைத் தாங்கியபடி உயிர்ப்பு -5 வெளிவந்துள்ளது. அவர்களின் கருத்துக்களுக்கு எதிராக சரியான மார்க்சிஸத்தை உயர்த்திப் பிடிக்கும் நாம், உயிர்ப்பைப் பெற்றுக் கொள்ளவதற்கே ஒரு பெரும் முயற்ச்சி தேவைப்படுகிறது. ஏனெனில் எதிர் விமர்சனத்தை முன் வைத்து வரும் எம்கைகளில் உயிர்ப்புக் கிடைத்த விட்டால், அது தங்கள் திணிப்பை எங்கே கேள்விக்கு உள்ளாக்கி விடும் என்பதால், எதிர் விமர்சனத்தைத் தடுக்கும் நோக்கில் பத்திரிகையைக் கிடைக்காமல் செய்து விடுவதில் இவர்கள் மிகவும் கவனமாகவே இருந்து வருகின்றார் கள்.

நாம் உயிர்ப்பை விமர்சிக்க முன்பு, இவர்கள் தம்மை பகிரங்கமாகவே வெளிக்காட்டிய, லண்டனில் இருந்து வெளியிட்ட புத்தகமாகிய 'மார்க்சிய மும் தேசியமும்' என்ற புத்தகத் தைப் பற்றிச் சிறிது பாாப்போம்:

இப் புத்தகத்திற்கு யமுனா ராஜேந் திரன் முன்னுரை எழுத, அதில் மூன்று பேருடைய கட்டுரைகள் வெளி யாகி உள்ளது. சிவசேகரம், செ.சிவ சோதி, கேசவன் ஆகிய மூவரின் கருத்துக்களைத் தாங்கி அந்தப் புத்தகம் வெளியாகி இருந்தது. இப் புத்தகத்தில் மார்க்சுக்கு அமெரிக்கத் தொப்பி போட்ட ஒரு கேலிச் சித்திரத் துடன் மார்க்சிசத்தின் மீதான கிண் டல் அட்டையிலிருந்தே தொடரப்படுகி றது. இவ் அட்டையின் மூலம், உள் கட்டுரையின் மூலம் அமெரிக்காவுக்கச் சேவை செய்ய அழைக்கின்றார்கள் இவர்கள். இப் புத்தகத்தில் வெளி வந்த சிவசோதி, கேசவன் ஆகியோ ரின் கருத்துக்கள் முன்னர் மனிதம், உயிர்ப்பில் வெளியானவையே. அதே வாக்கிய ஒழுங்குகளுடன் இக் கட்டு ரைகள் உள்ளதுடன், இதற்கு சமர் முன்பு விமர்சனம் செய்தும் இருந்தது. அவ் விமர்சனத்துகக் எல்லாம் பதில் சொல்ல வேண்டும் என்ற அறிவு, நேர்மை, இவர்களிடம் இப் புத்தகத் தை வெளியிட்ட போதும் இருக்க வில்லை.

அட்டைப் படம் உள்ளிட இப் பெயர் ஒழுங்கில் (முன்னுரை உள்ளிட்டு) மார்க்சிசத்தைக் கொச்சைப் படுத்த வும், திரிபு படுத்தவும் இயன்றவரை முயன்றுள்ளது. இதை இக் கட்டுரை ஒழுங்குப் படிமுறையில் தொகுத்து ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது.

இப்புத்தகத்தில் சிவசேகரம் தனது கருத்தக்களை இவ் வெளியீட்டாளர் கள் திரித்து, தமக்குச் சாதகமாக மாற்றியுள்ளனர் எனச் 'சுவடுகள்' - 66ல் ஒரு சிறு குறிப்பை எழுதியுள்ளார்.

சிவசேகரம் தனது சில கட்டுரைகளி லும், விமர்சனங்களிலும் மார்க்சிசத் தின் சில பொது உண்மைகளைக் கடைப்பிடித்து வருபவர். ஆனால் அது அவரின் இன்றைய வாழ்நிலையில் மற்றும் அரசியலுக்கு ஏற்ப குறுகிவிடுவ தால்தான் நாம் எதிர்த்து வந்தோம். சாதாரணமாக கூட்டங்களில் மாற்றுக் கருத்து மீது (உயிர்ப்பு போன்றவர்கள் உள்ளிட்ட மாற்றுக் கருத்து) பல்லிளித் துப் போகும் அவரின் குணம், மார்க்சி சத்தின் பொது உண்மைக்கு முரணாக வே கூட்டம் போனாலும் அவர் எதிர்க்க மறுப்பர். இதைப் பயன்படுத்தி யே 'மார்க்சிசமும் தேசியமும்' என்ற புத்தகத்தில் சிவசேகரத்துக்கு உயிர் உள்ள போதே திருத்தம் கொடுக்க முயன்றனர், இவ் வெளியீட்டாளர்கள்.

'மார்க்சிசமும் தேசியமும்' என்ற புத்தகம் நூற்றுக் கணக்கில் விநியோ கிக்கப்பட்டு வருகின்றன. இதை விநி யோகிக்கும் பலரிடம் இதை ஏன் விநி யோகிக்கிறீர்கள்? எனக் கேட்டோம். ''மாற்றுக் கருத்துக்கள் மீது விவாதத் தைத் தூண்ட'' எனப் பதிலளித்தனர். இக் கருத்துக்கு சமர் மட்டுமே பதில் அளித்த நிலையில், அதற்குப் பதில் அளிக்க முடியாதவர்கள் - மாற்றுக் கருத்து மீதான விவாதம் எனக் கூறிய படி தம்மைத் தாமே கேலிசெய்தபடி ஒரு திணிப்பை நிகழத்துகின்றனர்.

இதில் வரும் மூன்று கருத்தில் எது உங்களுடையது? எனக் கேட்க: அவர்கள்- ''எல்லாம் மாாக்சியமே!'' எனக் கூறி தமது மாாக்சிச விரோத முக மூடியை இன்னும் இறுகப்போட முனைந்நனர்.

இவ் விநியோகத்தில் ஈடுபட்ட உயிர்ப் பு உறுப்பினரும், ஐரோப்பியப் பொறுப் பாளருமான இவரின் கடந்த காலங்கள் இதே அமைப்புக்கு வேட்டு வைப்பதாக வே இருந்து வந்தது. எப்பொழுதும் உறுதியான சொந்தக் கருத்து இல்லாத இந்த உயிர்ப்பு உறுப்பினர், முன்பு 'தீப்பொறி' PLOTE இல் இருந்து உடைந்து உயிருக்காகப் போராடிய போது - இவர் அவர்களை எச்சரித்தவர்.

யாழ்.மண்ணிலிருந்து தீப்பொறி உறுப் பினர் உயிருக்குப் பயந்து PLOTE யிடம் தப்பி, பிரான்சுக்கு வந்து... இங்கு PLOTE யைச் சந்தித்து... அதன் அராஜகம் பற்றி 1986களில் விமர்சித் தார். அப்பொழுது, இன்றைய உயிர்ப்பு உறுப்பினர் அவரிடம் ''வாயை மூடிக் கொண்டிரு! இல்லையெண்டா மண்டை யில்தான் போடுவோம்.'' என எச்சரித்து அனுப்பினார். இன்று அவர் அதே அமைப்பில்! எவ்வளவு வேடிக்கை யென்று பாருங்கள்.

அத்துடன் இந்த உயிர்ப்பில் உள்ளவர் கள் உள்ளிட்ட ஒரு பெண்கள் கூட்டத்தை பிரான்சில் நடத்தினர். இவ் பெண்கள் கூட்டம் பெண்களையே கேலி செய்தது என்பது ஒரு புறமிருக்க, ➢

www.tamilarangam.net

அக் கூட்டத்தில் உயிர்ப்பின் ஐரோப்பிய மற்றுமொரு பொறுப்பாளர், மாரக்சிசம் தொடர்பான பெண்கள் பிரச்சனையை கூட்டத்தில் பாரவையாளர் எழுப்ப, அவர் அதை யொட்டி "அந்தச் சிவப்புப் புத்தகமா!?" எனக் கேலி செய்து மார்க்சிசத்தை வளர்க்கும் பணியில்(?) அதை அத்துடன் முடித்து வைத்தார். இன்று உயிர்ப்பில் கேசவன் என எழுதுபவரும், 'மார்க்சிசமும் தேசியத்தி'லும் கேசவனாக உள்ளவரும் மார்க்சிசத்திற்குத் திருத்தம் கொடுக்க முனைவதுடன், தீப் பொறிக் கேசவனுக்கு அவரின் பெயரிலேயே வேட்டு வைக்கும் முயற்சியாகும். தீப்பொறிக் கேசவன் புலிகளால் கைது செய்யப் பட்டபின் அவரின் அரசியல், மற்றும் அவரின் பெயரைப் பயன்படுத்தி மார்க்சிசத் திரிபை அரங்கேற்றுவது, சிவ சேகரத்திற்குத் திருத்தம் கொடுத்ததைப் போன்று, ஒரு மாபெரும் மோசடியாகும்!

இது கடந்த கால தீப்பொறி யின் அரசியல் முற்போக்குப் பாத்திரத்தை சிதைத்து அழித்து வரும் முயற்சியாகும். மூன்று கட்டுரைகளைக் கொண்ட 'உயிர்ப்பு'-5 வெளியாகி இருந்தது. இதில் நாம் 'அழகியலும் அரசியலும்' என்ற கட்டுரையே எமது விமர்சனத்தின் முக்கிய பகுதியாகவுள்ள அதேநேரம்- மற்றைய கட்டுரைகள் பற்றியும் சில கருத்துக்க ளைக் கூற முனைகின்றோம்:

**உயிர்ப்பு ~ 5 மீது எமது விமர்சனம்**

# தன்னியல்பு வாதமல்ல, திரிபு வாதமே இன்று பிரதான தடை!

"தன்னியல்பு வாதம் குறித்து..." என்ற கட்டுரை 68 பக்கங்களை உள்ளடக்கி உள்ளது. இக்கட்டுரை ஒரே விடயத்தை மீள மீள சொல்லுவது டன், அதன் குவிய மையம் தன்னியல்பு வாதமும், அது சார்ந்த கோட்பாட்டையும் முறியடிக்க ஒரு புரட்சிகர மாற்றைக் கோரி நிற்கின்றது.

இன்று பொதுவில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் எழுந்த பல் வேறுபட்ட சூழ்நிலையில், பல் வேறுபட்ட தனிநபர்கள், சிறு குழுக் கள் என பல வகையில் தத்தம் சக்திகளுக்கு ஏற்ப ஏதோ ஒன்றைச் செய்ய முனைந்துள்ளனர். இது புலம் பெயர்ந்த நாடுகள், இலங்கை யென எல்லா இடங்களிலும் காணப்படுகிறது

இச் சூழ்நிலையைக் கவனத்தில் கொண்ட உயிர்ப்பு பிரச்சனையின் மையத் திசையைத் திருப்பி விடும் வகையில், தனது திரிபுவாதக் கோட் பாட்டுக்கு இதைச் சாதகமாகப் பயன்படுத்தும் வகையில் இக் கட்டு ரையை முன்வைத்துள்ளனர். இன்று தமிழ்த் தேசிய விடுதலைப் போராட் டத்தில் ஏற்பட்ட பின்னடைவுக்கான சூழ்நிலையில், தன்னியல்பு வாதமா ஒரு புரட்சிகர மாற்றை உருவாக்கத் தடையாக உள்ளது? உயிர்ப்பு அப்படி யென அடித்துக் கூறுகிறது. **நாம் அதைத் தெளிவாக மறுக்கின்றோம்.**

சமுதாயத்தில் எழுகின்ற பல்வேறு பட்ட தன்னியல்பு போராட்டங்கள் என்பதுக்கும்: எம்மவர்களின் இன் றைய செயற்பாட்டுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உண்டு.

உயிர்ப்பு தன்னியல்பு வாதமே இன்று புரட்சிகர மாற்றுக்குத் தடை எனக் கூறும் காரணமும், இன்று எம்மவர்கள் ஒன்றுசேர முடியாததற்கு- புலிகளே காரணம் எனக் கூறுவதும்- அடிப்படையில் ஒன்றேயாகும்.

இன்று எம்மவர்கள் மாற்றுத் தலைமையை உருவாக்க முடியா மைக்குப் புலிகள் காரணமல்ல! ஏனெனில் புலிகள் எப்பொழுதும் செயல் ரீதியில் வரும் போது அதை முற்றாக அழித்து ஒழித்து விடுவது வழமை. எம்மவர்கள் மாற்றுத் தலைமையை உருவாக்க முடியா மைக்கு புலிகள் காரணமல்ல. மாற்றுத் தலைமையை உருவாக்க முடியாமைக்கு நிச்சயமாக தன்னியல் புவாதம் காரணமல்ல. ஏனெனில் எம்மவர்கள் ஒன்றுபட முடியாததற்கு குறிப்பிடக் கூடிய பின்வரும் காரணங்கள் உண்டு

1 **மார்க்சிசம் மீதான நம்பிக்கையீனம்**

2 **அவநம்பிக்கை வாதம்**

3 **புலிகள் பற்றிய பயத்துடன் கூடிய தப்பியோடல்**

4 **திரிபுவாத அடிப்படைகள்**

இவைகளை விதைப்பதில், வளர்ப்ப தில் கடந்த காலத்தில் உயிர்ப்பு, மனிதத்தில் சில எழுத்தாளர்கள், நிறப்பிரிகை என்பன பங்காற்றி யுள்ளன. இன்று ஒரு புரட்சிகரத் தலைமையை உருவாக்க முடியாமல் அதைப் பின்தள்ளியதில் உயிர்ப்பு, மனிதம், நிறப்பிரிகைக்கு கணிசமான பங்கு உண்டு.

இந்த நிலை ஏற்பட இவர்கள் பொதுவில் மார்க்சிசம் மீது பாரிய தாக்குதலை நடாத்தினர். உதாரணமாக- சோவியத், சீனாவில் முதலாளித்துவ மீட்பை இல்லை யென மறுதலித்தனர். பின்பு அதை சோசலிச சமூகமாகக் காட்டி, அதன் முதலாளித்துவ குணம்சங்களை, செயல்களை சோசலிசக் குணாம்சங் கள் எனக் கூறி மார்க்சிசம் மீது தாக்குதலைத் தொடுத்தனர். அதே நேரம் புரட்சியை நடந்தவுடன் அந்நாடுகளில் எல்லாம் மாறிவிட்ட தாகப் படம் காட்டி, ஆனால் அது நடக்கவில்லை என பின் மார்க்சிசத் தின் மீது சேறடித்தனர். ஒரு பிரச்ச னையின் இயங்கியல் வளர்ச்சியை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிராகரித்த இந்தப் போக்கை பல சந்தர்ப்பங்களில் பல இடங்களில் கையாண்டனர். உதாரணமாக: பெண் விடுதலை பரட்சி நடந்தவுடன் முழுமை பெற்றிருக்க வேண்டும் எனக் காட்டி, பின் அதன் குணம்சரீதியான செயல்களை இனம் காட்டி மார்க்சிசத்தின் மீது தாக்குதலைத் தொடுத்தனர்.

இது போன்ற எண்ணற்ற திரிபுவாதக் கருத்துக்கள் போராட்டத்தில் அன்னியப்பட்டு, மார்க்சிசம் பற்றிய பிழையான அரசியலுடன் புதிதாகத் தேடியவர்களை வேகமாகப் பற்றிக் கொண்டது. இது அவர்களு டைய இயலாமையுடன் சேர்ந்து அவநம்பிக்கை வாதத்திற்கு உள்ளாகி, மார்க்சிசம் பற்றிய ஒரு மயக்கத்தையும், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தி உள்ளது. இதைச் செய்வதில் மனிதம் எழுத்தாளர் கள், உயிர்ப்பு, நிறப்பிரிகை, மற்றும் ஒரு சில எழுத்தாளர்கள் கடந்த காலத்தில் முடிந்தவரை செய்துள்ளனர். இவைகள் எல்லாம் இணைந்த நிலையில் புலிகள் வர்க்கமற்ற ஒரு குழுவாக இனம் காட்டி புலி எந்த வர்க்கம், நான் எந்தவர்க்கம் என்ற பிரக்ஞையை இழக்க வைத்துள்ளது இவை மொத்தத்தில் புலி பற்றிய பயத்துடன் கூடிய ஓர் ஓடித்தப்பும் போக்கு விரவி நிற்கின்றது.



இந்நிலையில் தான் தன்னியல்பு வாதம் மற்றும் அது சார்ந்த கோட்பாடுகளையும் விவாதிக்கின்றனர். அதை ஒட்டி கோட்பாட்டை வளர்க்கக் கோருகின்றனர். முதலில் இன்று எம் முன் உள்ள பணி திரிபுவாதத்தை முறியடிப்பதாகும். மாக்சிசத்தின் அடிப்படைகளை, பொது உண்மைகளை பாதுகாப்பதாகும். இது மட்டுமே எதிர் காலத்தில் புரட்சிகர அமைப்புக்கான ஓர் அடிப்படையாகும்.

இன்று பல்வேறு செயலில் உள்ளவர்கள் ஒரு பொதுக் கோட்பாட்டை, அதன் சரியான அடிப்படை யை ஏற்றுக்கொண்டவர்கள் அல்லர். அப்படி ஏற்றுக் கொண்டவர்கள் மத்தியில் தன்னியல்பு வாதம் தான் தடையெனக் குறிப்பிடின் அது சரியானதாக இருக்கும். உதாரணமாக:
மார்க்சிக்கு அமெரிக்கத் தொப்பியை இட்டவரும், கேசவனும், சிவசோதியும், சிவசேகரமும், சமரும், சுவடுகளும், சுமைகளும், சஞ்சீவியும், மௌனமும், சக்தியும்..... ஒன்றிணைய முடியாமைக்குக் காரணம் தன்னியல்புவாதமா? இல்லை. மாறாக மார்க்சிசம் எது என்பதே அடிப்படைப் பிரச்சனை. இன்று உயிர்ப்பும்- சமரும் இணைய முடியாமைக்கான காரணத்தை உயிர்ப்புத் தெளிவாக அறிந்திருந்தும், வாசகர்களை ஏமாற்றி திரிபைப் புகுத்திவிட- தன்னியல்பு வாதமே பிரச்சனையெனக் காட்ட முயல்வது ஒரு மோசடியாகும்!

நாம் ஒன்றிணைவை எப்பொழுதும் வலியுறுத்தி வந்தோம். அது மார்க்சிச அடிப்படை உண்மைகள் மீது மட்டுமே சாத்தியமென்றும் கூறிவந்தோம். இதை உயிர்ப்பு நிராகரிக்கும் வரை, இது தன்னியல்புவாதம் அல்ல என்பதைச் சுட்டிக் காட்டுவதுடன், வாசகர்களை ஏமாற்றி திரிபைப் புகுத்த முயலும் உங்களின் மோசடிகளையும் வாசகர் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.
உதாரணமாக:
இக் கட்டுரையில் உயிர்ப்பு ''......பேரினவாத அரசிற்கும், புலிகளுக்கும் மாற்றாக மட்டுமின்றி, எமது கடந்த கால முயற்சிகளுக்கு மாற்றான ஒரு வழியைப் பேசுகின்றோம். இது தவிர்க்க முடியாமல் எமது கடந்தகால சிந்தனை முறைகளில் இருந்தும், வேலை முறைகளிலிருந்தும் முறித்துக் கொள்வதை ....'' எனத் தொடர்கின்றனர்.

இது கடந்த கால எமது மார்க்சிச அடிப்படை மீதான முறிவை, அதன் சிந்தனை வழி மீதான முறிவை, அதன் புரட்சிகர வேலைத் திட்டத்தின் மீதான முறிவைப் பறைசாற்றுகின்றனர். அந்தவகை யில் தேசியம் என்பது எந்த வர்க்கமும் சார்ந்தது அல்ல. அதுபோல் புலியும் எந்தவர்க்கமும் சார்ந்தது அல்ல என்ற புதிய சிந்தனை, அதன் மீதான செயலைக் கோருகின்றனர். இதுதான் இவர் கள் தன்னியல்பு வாதம் எனக்கோரி உங்கள் முன் வைக்கும் சொகுசு வேலைத் திட்டம்.

இதை அவர்கள் வேறு ஓர் இடத்தில் இப்படிக் கோருகின்றனர்.

''......... மாறாக சமுகத்திலுள்ள பல்விதமான உறவுகள் காரணமாக மக்கள் மத்தியில் பல்வித மான பிரிவுகளும், வேறுபாடுகளும் காணப்படு கின்றன. வர்க்கம் என்பது அவற்றில் ஒன்றாகும்.'' உறவுகள் வர்க்கங்களைக் கடந்தும் இருக்க முடியும் என்கின்றனர். இதிலிருந்தே புலிக்கு வர்க்கமில்லை என்கின்றனர். தலித்துக்கு வர்கமில்லை என்றனர். தேசியத்துக்கும் வர்க்கமில் லை என்றனர். பெண்ணியம் வர்க்கம் கடந்தது என்றனர். அரசு வர்க்கம் சார்ந்தது அல்ல என்றனர். இதுதான் இவர்களின் தன்னியல்புவாத முறிவு. இது தான் கடந்தகால முயற்சிக்குப் பதிலாக வைக்கும் மாற்றுச் சிந்தனை: வேலை முறையாகும். வாசகர்களே! இவர்களின் கபடத்தைப் புரிந்து கொள்ள இக்கட்டுரையில் இவ்வளவுமே போதும். மேற் கூறியதைத் தான் கோட்பாட்டுப் பணி என வகுத்துக் கொள்கிறார்கள். அதாவது அடிப்படை மார்க்சிசத்தைத் திருத்தி- மார்க்சுக்குத் திருத்தம் கொடுப்பது ஒரு முதன்மையான கோட்பாட்டுப் பணி - இது தன்னியல்பு வாதமாக உங்கள் முன் காட்டி உங்களை ஏமாற்ற முனைவதாகும்.

என்தான் அழகான திட்டமும், கொள்கையும் என எல்லாவற்றையும் உயிர்ப்பு எதிர்காலத்தில் பிரகடனம் செய்ய முயன்றாலும், ஒன்றை அவர்கள் மறந்து விடுகின்றார்கள். அதாவது இது போன்று முதலாளித்துவ கட்சிகளும் இவற்றை வைத்திருக்க முடியும் என்பதை. அழகானவை எல்லாம், அது அடிப்படை மாக்சிசத்தை சரியாக வகுத்துக் கொண்டால் மட்டுமே, அது மக்கள் புரட்சியைச் செய்யும். இல்லாத வரை அது ஏகாதிபத்தி யத்துக்கே சேவகம் செய்யும்.

அடுத்து தமிழ் நாட்டில் சிரழிந்து செல்லும் குழு ஒன்றின் புரட்சிக்கனல் பத்திரிகையில் தன்னியல்பு வாதம் தொடர்பாக அவர்களின் கருத்துக்களை உயிர்ப்பு எடுத்துக் காட்டி, அவர்களின் செயல்க ளையும் பாராட்டி உள்ளனர். இதன் மூலம் அவர்களின் வழியில் உயிர்ப்பு சீரழிய பிரகடனம் செய்கின்றனர்.

இவர்கள் தமிழ் நாட்டு அமைப்புக் கமிட்டியாக இருந்த காலத்தில் கேடயம், மனஓசையை வெளி யிட்டவர்கள். இவர்கள் 1983 இறுதியில் வெளியிட்ட 'இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கான தீர்வு என்ன' என்ற சிறு பிரசுரத்தில் எமது தேசிய விடுதலைப் போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரானது அல்ல. ஏனெனில்:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியாவில் எழும் பரட்சி உலகை மீளவும் ஒரு முறை குலுக்கும். அந்த வகையில் தான் ஏகாதிபத்தியங்கள் முதல் அதன் தொங்கு தசை ஆளும் வர்க்கங்கள் வரை, மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறிவரும் புரட்சியாளர்களையும், அதன் மக்கள் பிரிவுகளையும் ஒழித்துக் கட்டி வருகின்றன.

# இந்தியாவில் எழுச்சி பெற்று வரும் புரட்சியாளர்கள்

இதை விட இனம், மதம், சாதி என பலவாக மக்களை மோத விட்டு வேடிக்கையாக தங்கள் கொள்ளை போகத்தை பாதுகாக்க முனைகின்றனர். இன்று இந்நியாவில் பல பாகங்களில் எழிச்சி பெற்று வரும் புரட்சியாளர்களில் பீகார் புரட்சிகர மார்க்சிச அமைப்பினர் வெற்றிகரமாக சாதி, மத எல்லைகளைத் தகர்த்தெறிந்து முன்னேறி வருகின்றனர்.

பீகாரில் 25 லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகளை அமைப்பாக்கி, அவர்களை பீகார் மாநில உழவர் அவையாகக் கட்டி அமைத்ததுடன், இவர்கள் ஒரு தற்காப்பு குழுக்களாக ஆயுதமயப் படுத்தப்பட்டும் உள்ளனர். இலங்கைத் தமிழர்களின் மொத்தத் தொகை அளவிற்கு மக்களை அமைப்பாக்கியதுடன், அவர்கள் சாதி, மத, வயதுகள் கடந்து ஆயுத மேந்திய அமைப்பாகியும் உள்ளனர்.

அப் பிரதேசங்களில் பெருங் கூட்டங்கள், ஊர்வலங்கள், நிலவுடமையாளர்களின் களஞ்சியங்களைச் சூறையாடல், நிலவுடமையாளரிடம் இருந்து கட்டணம், அபராதங்கள் வசூலித்தல், கிராமத்திலிருந்து வெளியேற்றல் போன்ற பல சட்டபூர்வ சட்டவிரோத நடவடிகையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தியா எங்கிலும் பரட்சியை இவ் எழுச்சிகள் நகர்த்திச் செல்ல முனைவதுடன், கிராமத்திலிருந்து நகரத்தை மீட்க்கும் போராட்டத்திற்கு, இவை முன்னோடியாக, ஒரு நம்பிக்கையின் கீற்றாக இன்றுள்ளது. ○

இலங்கை ஒரு பெரு முதலாளித்துவ நாடு எனக் கூடக் குறிப்பிட்டனர். தேசிய விடுதலைப் போராட்டத்தை எதிர்த்தனர். இன்று அவர்கள் தலை கீழாக மாறி இந்தியாவில் தமிழ் நாட்டுக்கு தனிநாடு கோருகின்றனர். இது அவர்களின் சீரழிவுடன் கூடிய நேர் எதிரான குத்துக்கரணமே! அன்று 'இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கான தீர்வு என்ன' என்ற புத்தகத்திற்கு விமர்சனத்தை 'இலக்கு' - 1 செய்திருந்தது. இவர்கள் தலை குப்புற விழுந்து செல்கின்றனர். இனி, இவர்களின் மீட்சி என்பது கிடையாது. அதை மூடிமறைக்கக் கோரி தன்னியல்பு வாதம் இருந்தது என புரட்சிக்கனல் பந்தல் போட்டனர்.

இவர்கள் குத்துக்கரணம் அடித்தவுடன் என்ன செய்கிறார்கள் எனின்: புலிகளுடன் இரகசியமாகக் கூடிக் குலாவிவிட முயல்கின்றனர். இவர்கள் எம்முடன் தொடர்பு இருந்த காலத்தில் எம்மூடாகப் பிரன்சுப் புலிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பினர். அம் முகவரி புலிகளுடையது எனத் தெரிந்ததும், அதை உடைக்காது அனுப்பி வைத்தோம். இவர்களின் செயல் மீது நாம் சந்தேகம் கொள்ளவில்லை. நேர்மையான ஒரு தொடர்பாகவே கருதினோம். ஆனால் பின் வேறு சிலர் இது தொடர்பாக எழுதியபோது, "அப்படி நாங்கள் தொடர்பு கொள்ள வில்லை" என அடித்துச் சத்தியம் செய்து விட்டனர். ஆனால் அக்கடிதம் எமக்கூடாக அனுப்பப்பட்ட போது, எமக்கு கேடயத்துக்காக செல்வம் 14.5.93ல் எழுதிய கடிதத்தில் அது பற்றி ஒரு தகவலை விட்டுச் சென்றுள்ளார். அதில் செல்வம்:

"மேலும் ஒரு சில உதவியைத் தங்களிடம் எதிர்பார்க்கின்றோம். இத்துடன் உள்ள கடிதத்தை அந்த உறையிலுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். தமிழகத்திலிருந்து நேராக அனுப்புவது சற்று சிக்கலாக உள்ளது. இந்த உதவியைச் செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றோம்." எனக் கேட்டிருந்தார். இது தமிழகத்திலிருந்து அனுப்ப முடியாதிருந்தது புலிகளுக்கு மட்டுமே என்பதை குறிப்பிடத் தேவையில்லை. இப் பிரச்சனை தொடர்பாக இங்கு ஒரு விவாதத்தில் எமக்கு எதிராக, இது நடக்க வில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் இக்கடித வாசகந்தான் அந்நேரத்தில் எமது நேர்மையைப் பாதுகாக்க ஒரு சான்றாக இருந்தது. இவர்கள் தமது புதிய நிலைப்பாட்டை விமர்சிக்கக் கோரினர். இவர்களின் புதிய நிலைப்பாட்டை நாம் ஏற்க்க மறுத்து, அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கையை விமர்சனம் செய்தவுடன், எம்முடனான தொடர்பை நிறுத்தினர். நாம் புத்தகம் பெற அனுப்பிய பணத்தைக் கூட தரவேண்டு மென்ற நேர்மையை இழந்தவர்கள்.

தமிழ்நாட்டு அமைக்கக் கமிட்டியின் சீரழிந்து போன அரசியலுடன் தம்மை ஒப்பிட்டு, உயிர்ப்பு சிபார்சு செய்து, தன்னியல்புவாத விளக்கத்தைத் தருவது என்பது- இவர்கள் எவ்வளவு போலியான அரசியலைக் கொண்டுள்ளனர் என்பதை, நாம் தமிழ்நாட்டு அமைப்புக் கமிட்டியின் அரசியல் வரலாற்றுடன் ஒப்பிட்டுக் காண முடியும்.

இனி உயிர்ப்புத் தன்னியல்பு வாதத்தை எப்படி தம்மளவில் தகர்த்துள்ளனர் எனப் பார்ப்போம். இன்று தன்னியல்புவாதமும், கோட்பாட்டுப் பணியும் முக்கியமென அழகான, நீண்ட கட்டுரை எழுதும் இவர்கள், சமருக்குப் பதிலளிக்கத் தவறுவதன் மூலம், வெறும் போலியாகவே தன்னியல்பு வாதமே பிரச்சனை என்ற தங்கள் கருத்தைத் திணிப்பவர்களாக உள்ளனர்.

உயிர்ப்பின் ஊழியர்கள் மார்க்சிசத்திற்கு எதிராக பல்வேறு கூட்டத்தில் குரல் எழுப்புகின்றனர். அந்த வகையில் சிவப்புப் புத்தகத்தைப் பற்றி கதைக்கக் கூடாது என பிரகடனம் செய்கின்றனர். மாக்சிசம் பேசும் எல்லோரும் மார்க்சிச வாதிகளே என முதலாளிக்கும் மார்க்சிச முலாமை உயிர்ப்பு அங்கத்தவர் பூசுகின்றனர். சிவசேகரத்திற்கு வேறு உயிருடன் திருத்தம் கொடுத்து, தமது திரிபைச் சீராகப் பெற அறிமுக ஏறுவரிசைக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்தனர். இவர்கள் தான் தன்னியல்பை உடைத்து புரட்சியைச் செய்யப் போகிறார்களாம்! மாற்றுக் கருத்தை மதிக்க, விமர்சிக்க முடியாதவர்கள் எதையும் சாதிக்க மாட்டார்கள். மாறாகத் திணிபைச் செய்து புரட்சியைச் சீரழித்தே தீருவர். ➤



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அழகியல் குறித்த, உயிர்ப்பின் முதலாளித்துவ வக்காலத்துத் தொடர்பாக..


அழகியல் என்பது எப்பொழுதும் ஒரு வர்க்கம் சார்ந்தே இயங்குகின்றது. அழகியலை பாட்டாளியும், முதலாளியும் பயன்படுத்த முடியும். ஆனால் பாட்டாளி வர்க்கம் தனது சொந்தப் படைப்புகளில், தெளிவான நிலையில், அதாவது பொருளாதார அடிக்கட்டுமானம் மீதான விமர்சனத்தின் மீது மட்டுமே அழகியல் அதற்கு சேவை செய்யும். இல்லாத எல்லா அழகியற் கோட்பாடும் இந்த பூர்சுவா சமுதாய நலன்களையே பெறும். நாம் இதை நடைமுறை ரீதியாகப் பார்ப்போம். எங்கள் மண்ணில் நாம் அதிகளவு கடற்கரையைச் செந்தமாகக் கொண்டவர்கள். அதற்குச் சென்றுவர பெரிய செலவும் கூடக் கிடையாது. ஆனால் நாம் ஒரு கடற்கரைக் காட்சியை, அதில் குளித்தல் என அனைத்தையும் செய்தவர்கள் அல்லர்.

பொதுவில் எம் மக்களில் 95 வீதம் பேர் அதைச் செய்ய முடியாத வகையில், வறுமை, வாழ்வுடன் போராட்டம் என்ற எல்லையைத் தாண்டி இதை அனுக முடிவதில்லை. அதேநேரம் 5 வீதமானோர் அதை ரசிக்கின்றனர். அவர்கள் யாரெனப் பார்க்கும் போது சமுகத்தில் உயர்ந்த அந்தஸ்தில், உழையாமல் வாழும் பிரிவினராக உள்ளனர். அழகியல் என்பது சாதாரண இயற்கையில் கூட எவ்வளவு ஆழமாக வர்க்கம் சார்ந்து பயன்பாட்டுத் துறையில் பிரிந்துவிடுகின்றது.

இக் கட்டுரையை எழுதுகின்றவர்கள் உள்ளிட, பெண்கள் பிரச்சனை என்றவுடன் சில குத்துக் கரணம் அடிப்பவர்கள்: பெண்கள் கூறுகின்றனர் அழகியல் ஆணாதிக்கம் சார்ந்தது என்று. எவ்வளவு ஆழமான உண்மை. இதையே பாட்டாளிகள் அழகியல் பூர்சுவா வர்க்கம் சார்ந்தது என்று கூறுகின்றனர். ஆனால் இதைக் கேட்டவுடன் துள்ளிக் குதித்து இம் மாக்சிச விரோதிகள் மறுத்து விடுகின்றனரே!

எனது மூன்று வயது மகள் தனது இரண்டரை வயது முதல் தனது அறிவைப் பெறத் தொடங்கிய நிலையில் எனது அவதானத்திற்கு வந்த ஒரு சில தரவுகளைத் தர முயற்சிக்கின்றேன்.

எனது மகள் ஒரு நாள் அரைகுறைக் கைப் பாஷையிலும், செய்கை மூலமும் கடற்கரையை விளங்கப் படுத்தியும், அதில் கால்மேல் கால் போட்டு கால் நீட்டிப் படுத்திருக்க விரும்புவதாகவும், ஒரு கருப்புக் கண்ணாடி அணிந்து அதை ரசிக்க முடிந்தால் எவ்வளவு சுகமாவும் ரசனையாகவும் இருக்குமென குறிப்பிட்டாள்! இது வரை எனது மகள் கடற்கரைக்குச் சென்றதுமில்லை ஆனால் அதைச் செய்யாமலேயே அதன் மீது ரசிக்கவும் சுகமாக இருக்க முடியுமெனவும் கூறுவது என்னை ஆச்சரியப்பட வைத்தது. இக் கருத்தை அவள் எப்படிப் பெற்றிருப்பாள் எனப் பார்க்கும் போது விளம்பரம், தொலைக் காட்சி நிகழ்வுகள் மட்டுமே இதற்குக் காரணமாக இருக்க முடியும்.



இங்கு அழகியல், கருத்தியல், செயல்கள் அதை அனுபவிக்காமலேயே அதன் நோக்கிலேயே இரண்டரை வயதில் நகர்த்தப்பட்டு விடுகின்றது. இதை விட்டு விலகுவது என்பது ஒரு பெரிய போராட்டமே ஆகும்.

இதை நான் பிரஞ்சு சமுகத்துடன் ஒப்பிடும் போது, பிரஞ்சுத் தொழிலாளியின் மாடு மதிரியான உழைப்பு 5 கிழமை லீவு நாட்களுக்கான கனவுகளை உள்ளடக்கியதாகவே உள்ளது. அவன் அதற்காக மேலதிகமாக வேலை செய்யத் தயாராக உள்ள அதேநேரம், அந்தக் கடற்கரைக் காட்சி என்ற எல்லையே அவனின் குறிக்கோளாக, சென்று விடுகின்றது. இது எப்படி இந்த சுரண்டும் சமுகத்திற்குச் சேவை செய்கின்றது என்பதை நாம் கூறித் தெரியத் தேவையில்லை. இது சிறு குழந்தையில் இருந்தே அனுபவிக்காது வளத்தெடுக்கப் படுகின்றது. இதைச் சிறப்பாக முதலாளித்துவ அழகியல் வளர்த் தெடுக்கின்றது.

எனது இரண்டாவது அவதானக் குறிப்பையும் தருகின்றேன்.- பிரான்சின் சுதந்திர தினத்தன்று எங்கும் பிரஞ்சுக் கொடி பறந்துகொண்டிருந்தது. அதைக் கண்ட எனது மகள் கொடியைக் காட்டி ''பொலீஸ்'' என்றாள். இது ஆச்சரியப் படக்கூடியதான, கொடியின் வகைப் படுத்தலை அக் குழந்தை 3 வயதில் பெற்றுவிடுவது ஒரு சின்ன விடயமல்ல! பிரஞ்சுக் கொடி பிரஞ்சு மக்களின் என்பதை விட பொலீசினது என்பதன் மூலம் அக் கொடியை ஆளும் வர்க்கச் சின்னமாக இக் குழந்தை 3 வயதிலேயே இனம் காண்கிறது.

அதேநேரம் தன்னைப் பெரிசாகக் கற்பனையும் செய்கின்றது. தான் பொலீஸ் எனக் கூறி கையைக் காட்டும் நிகழ்ச்சி எவ்வளவு ஆழமானது. ஒரு கொடி அதன் செயல், அதன் கருத்து, அதன் அழகியல் என அதன் அனைத்தும் சாதாரணமாக ஒரு கொடி பறக்கும் போது ஒரு கருத்தை அக் குழந்தைக்குக் கொடுத்து விடுகிறது. கொடி இருக்குமிடம் பொலீஸாக அதன் அழகியல் மூலம் தொலைக் காட்சி அதை அவளுக்குக் கூறி விடுகின்றது. அதனால் அவள் பொலீசாக மாற ஆசைப் படுகின்றாள்.

இரண்டரை வயதுக் குழந்தை தனது அவதானத்தில், ஒரு சிறு அசைவில் கூட ஒரு கருத்தைப் பெறுகின்றது. அது இந்த சமுதாயத்தில் எந்த வர்க்கம் சார்ந்து இயங்குகின்றதோ அதற்கு இசைவாக்கம் அடைந்துவிடுகின்றது. இவைகளில் விமர்சனத்தைக் காணவிடாது அழகியல் தடுத்து நிறுத்துவதுடன் அதை இக் குழந்தையானது ஏற்றும் கொள்கின்றது. பெண் அடிமையை யாரும் தினித்துக் கூறுவதை விட இயல்பாக அது பரவுகின்றது ➢



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனின்: அங்கு கருத்து, செய லென அனைத்தும் ஆணாதிக்கம் சார்ந்துள்ளது. இதை மூடி மறைப்பதாகவே அழகியல் உள்ளது.

உதாரணமாக: ஈழத்துக் கவிஞர்கள் என இன்று பலர் இனம் காட்டும் கவிஞர் களுக்குள் ஜெயபாலனின் கவிதைகளை எடுப்பின், அதன் வர்க்க மூலத்தை ஆய் வதை விட ஆணாதிக்க அடிப்படையில் அதை ஆய்வு செய்யின், கவிதை முழுவ தும் புரிந்துவிடும். ஜெயபாலனின் கவி தைகள் ஆணாதிக்கம் சார்ந்தவை. பெண் களின் மீதான அடக்குமுறைக்குள் உட்ப் பட்ட இக் கவிதைகள், அழகியல் மூலம் அவ் ஆணாதிக்கம் மூடி மறைக்கப்படு கின்றது. இவ் அழகியல் கோட்ப்பாட்டை உயர்த்தியே, அதில் கவித்துவம் உண் டெனக் கூறி ஆணாதிக்கம் மூடி மறைக் கப்படுகின்றது. இக் கவிதையின் பின்ன ணியில் பல பெண்களின் கண்ணீர் கதை களுண்டு! ஆனால் அக் கண்ணீர் அழகி யல் மூலம் கவித்துவம் பெற்று ஆணா திக்க ஒழுங்கு இசைவாக்கப் படுகின்றது.

சாதாரணமாக நாம் போடும் உடுப்புக் கள், ஏற்ற தொப்பி, சப்பாத்து என அனைத்தையும் கலா் இசைவான வகை யில் பயன்படும். அழகியல் சாதாரண ஏழைக்குச் சாத்தியமில்லை. இந்த வகையில் இது தொடர்பான அழகியல் மேல் தட்டுப் பிரிவுக்கு மட்டுமே சேவை செய்கின்றது.

தாகம் உள்ளவன் தண்ணீரைக் குடிப் பான். ஆனால் குடிக்க வேண்டுமென்று சொகுசாக வாழ்பவன் குளிர்பானத்தை (யூசைத்) தேடுவான். இது போன்றுதான் அழகியல். மக்கள் வாழ்வைச் சொல்லாத கலை தூக்கி எறியப்பட வேண்டும்.



அதை மூடிறைக்கும் அழகியல் நொருக் கப்பட வேண்டும். வாழ்நிலைதான் உணர் வையும் அது சார்ந்த அழகியலையம் தீர் மானிக்கின்றதே ஒழிய: உணர்வும் அது சார்ந்த அழகியலும் வாழ்நிலையைத் தீர் மானிப்பதில்லை! வாழ்நிலை என்பது எமது உழைப்பும் அது சார்ந்த வாழ்வும் தான். இதுதான் படைப்புகளாக மாற வேண்டுமே ஒழிய மாறாக உழைப்பில் ஈடுபடாத சுரண்டும் பிரிவின் அரிப்புக் கலைகள் நொருக்கப்பட வேண்டும்.

இன்று உலகில் 80சத வீதமான மக்கள் உலக செல்வத்தில் 17சத விகிதத்தை மட்டுமே அனுபவிக்கின்றனர். மொத்த மக்கள் தொகையில் 20சத விகிதத்தி னர் மொத்த உலக செல்வத்தில் 1.5 விகிதத்தையே அனுபவிக்கின்றனர். உலக மக்கள் தொகையில் 25 சத விகிதம் பேர் உணவும், குடிநீருமின்றி அலைகின்றனர். ஆம், ஒடுக்கப்பட்ட இந்த வர்க்கத்தின் சார்பாக கலை இலக்கியம் மலரட்டும்! மீறுபவன் மீது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பாய வேண்டும். உலக செல்வத்தில் 83 வீதத்தைப் பயன்படுத்தும் 20சத விகித ம் பேருக்காக கலை இலக்கியம் படைக்கப் படுவதையும், அதன் அழகியலையும் உயிர்ப்பு உயர்த்து கின்றது. இவர்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவின் எதிரிகள்! வர்க்கம் தாண்டிய படைப்பு என்பது ஒடுக்கும் வர்க்கம் சார்ந்த அதன் சுகபோகத்தை அனுபவிக்கும், அதன் அரிப்புக் கலை யாகும். இதை நாம் எப்படி உதைக்க வேண்டும்? அதாற்காக வாதாட முயலும் உயிர்ப்புக்கும் தான் எப்படி உதைக்க வேண்டும்?

இனி, நாம் உயிர்ப்பினரின் வார்த்தை களை எடுத்து என்ன சொல்கின்றனர் எனப் பார்ப்போம்:

"இது காறும் மார்க்சிசமாக அறியப் பட்ட அறிவுத் தோற்றம் குறித்து பிரதி பலிப்புக் கொள்கை- அடித்தளம் மேல் கட்டுமானம் என்கிற உருவக வகைப் பட்ட அணுகல் முறை ஆகியவற்றின் அடியாக உருவாக்கப்பட்ட மார்க்சிய இலக்கிய விமர்சனக் கோட்ப்பாடுகள் மேலை நாடுகளில் சுமார் முற்பது ஆண்டுகளுக்கு முன்பே மறு பரிசீல னைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளன." என உயிர்ப்பு பிரகடனம் செய்கின்றனர். மார்க்ஸ் அடிக்கட்டுமானம் மேல் கட்டுமானம் என்ற அடிப்படையில் இருந்தே தனது தத்துவத்தை, அதாவ து மார்க்சிசத்தை உருவாக்கினார். அத னால்தான் மார்க்சின் பெயரால் இத் தத்துவம் 'மார்க்சிசம்' என அழைக்கப் படுகின்றது.

இதை நிராகரித்த எந்தக் கோட்பாடும் மார்க்சின் மார்க்சிசமல்ல என்பது உடன் புரிந்து கொள்ள முடியும். அது மார்க் சியம் அல்லாத பூர்சுவாக் கோட்பாடே ஆகும். அதுவும் முப்பது ஆண்டுக ளுக்கு முன் மறு பரிசீலனைக்கு வந் தது எனின்: உங்கள் எல்லோருக்கும் தெரியும் அது குருசேவின் வருகை யைக் குறித்ததே! அன்றுதான் மார்க்சி சத்தை குருசேவ் சேறு அடித்துத் திருத் தினான். வெறுமனே கிராம்சி, அல்தூசர் வாதங்களுடன் பொருத்துவது பின் இனம் காட்டி இட்டுச் சென்று விட முடி யாது கிராம்சி 30களில் இறந்து போனார். அல்தூசர் வாதம் 70களில் மேற்கு நாடுகளில் அம்பலப்படுத்தப்பட்டு அதன் அடிப்படையே தகர்க்கப்பட்டது. இதை 70களில் பிரஞ்சு மாணவர் எழுச் சியுடன் நடைபெற்றது. பொருளாதாரம் என்ற அடிக்கட்டுமானம் மீதே மேல்கட் டுமானமான அரசியல், மதம், கலை, அழகியல்... என அனைத்தும் இயங்கு கின்றது. அடிக்கட்டுமான மாற்றமின்றி, மேல்கட்டுமானம் மாறிவிடாது. அடிக் கட்டுமானமானம் மீதான சரியான விமர்சனம் மட்டுமே மேல்கட்டுமானத் தில் புதியது ஒன்றை விமர்சிக்க முடி யும். அடிக்கட்டுமானம் பற்றிய பொ ருள்முதற் பார்வையின்றி, மேற்கட்டுமா னம் சரியான பொருள்முதற் பார்வை யைப் பெற முடியாது. அப்படியல்தாத பார்வைகள் கருத்துமுதல் பார்கைளா கவே இருக்கும். இது பூர்சுவா கருத்து மூலமே ஆகும்.



லெனின் மார்க்சியத்தின் மூன்று தோற்று வாய்களும்... என்ற நூலில் தெளிவாகக் குறிப்பிடுவது என்னவெ னில்: "பொருளாதார அமைப்பு முறை என்ற அடித்தளத்தின் மீதுதான் அரசி யல் மேல்கட்டுமானம் கட்டப்படுகிறது என்று ஏற்றுக் கொண்டவுடன் மார்க்ஸ் தனது பெரும்பாலான கவனத்தை இந் தப் பொருளாதார அமைப்பு முறையின் மீது செலுத்தினார். .... நீதி, மதம், அரசியல், சமுதாயம் சம்மந்தமான எல்லாவிதச் சொல்லடுக்குகளுக்கும், பிரகடனங்களுக்கும், வாக்குறுதிகளுக் கும் பின்னே ஏதோவொரு வர்க்கத்தின் நலன்கள் ஒளித்து நிற்பதைக் கண்டு கொள்ள மக்கள் தெரிந்து கொள்ளாத வரையில் அரசியலில் அவர்கள் முட் டாள் தனமான, ஏமாளிகளாகவும் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வோ ராகவும் இருந்தனர் எப்போதும் இருப் பார்கள்." (அடிக்கோடு லெனின்) என்ற லெனினின் தெளிவான கருத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று உயிர்ப்பு மார்க்ஸ் - லெனினி டம் இருந்து மேலும் மார்க்சிசத்தை வளர்ப்பதாகக் கூறுவதை லெனினின் இக் கூற்றுடன் ஒப்பிட்டுப் பார்கையில் அது எவ்வளவு பொய்யெனத் தெரியும் நாம் ஒன்றை லெனினின் கூற்றுடன் வைத்து உயிர்ப்பின் பின்னுள்ள வர்க் க நலன் என்ன? என்பதை நாம் தெளி வாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இல்லாத வரை நாம் உயிர்ப்பின் அரசியலை ஒட்டி முட்டாள் தனமான ஏமாளிகளாகவும், எம்மை நாமே ஏமாற்றிக் கொள்பவர்களாகவும் இருப் போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்து உயிர்ப்பு "நவீன சிந்தனைகள் இன்னமும் தமிழ்ச் சிந்தனையில் சரிவரச் சுவறவில்லை என்பதையும் கூறத்தான் வேண்டும். இதனை நம் சிந்தனையாளர்கள் பலரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அத்தோடு பலரும் விமர்சனம் எதுவுமின்றி கண்மூடித்தனமாக இச் சிந்தனைகளை நிராகரிப்பதையும்...." எனத் தொடர்கின்றனர். உயிர்ப்பின் திரிபுவாதம் இன்னும் முற்றாக அரங்கேறி விட முடியவில்லை என அங்கலாய்த்து அழும் இவர்களையிட்டு, நாம் ஏதோ பலமாக இருக்கிறோம் என சந்தோசப்பட முடியாது. தமிழ் தேசிய விடுதலைப் போரின் அவலம், திரிபுவாதத் திற்கு கம்பளம்விரித்துச் செல்கின்றது. ஒவ்வொரு தோல்வியும் புரட்சியைக் கைவிட்டு ஓட, தத்துவத்தைத் தேடும் என்பது துரோக வரலாறாகவே உள்ளது.

அதாவது விமர்சனமின்றி என்பது: அப்பட்டமான பொய்! அவர்கள் நிராகரிக்கின்றனர் எனின்: ஓர் அரசியல் நிலையில் நின்றேயாகும். நாம் சரியாக விமர்ச்சிக்கின்றோம். அதை முறியடித்து உங்கள் கருத்தை வெற்றி பெறச் செய்யும் வல்லமை உண்டா? எனச் சமர் அறைகூவல் விடுகின்றது. இந்த லட்சனத்தில் இவர்கள் தன்னியல்பைக் கூறவர, தமது நவீன சிந்தனையை ஏற்றுக்கொள்ள வேணடுமாம்! வசகர்களே நிதானமாக கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தாலே இவர்களின் பம்மாத்துப் புரிந்து விடும். இவர்கள் நவீன சிந்தனை எனப் பிரகடனம் செய்வது: நவ மார்க்சிசத்தையும் அதன் கோட்பாடுகளையும், புதிய இடதுகளையும், மார்க்சிசத்தின் பெயரால் அரங்குக்குக் கொண்டு வரச் செய்யும் முயற்ச்சியாகும். இந்தத் திரிபுவாதத்தை இட்டு நாம் எச்சரிக்கையாக இல்லா விட்டால், மேலும் எமது புரட்சிகர பாதை இன்னும் பல பத்தாண்டுகளுக்குப் பின் தள்ளப்பட்டுவிடும்.

உயிர்ப்பு இதை மேலும் "பிரதிபலிப்புக் கொள்கை - அடித்தளம் - மேற்கட்டுமானம் ஆகியவற்றை நேரடியாகப் பொருத்தப் பார்த்தல், பொருளாதாரவாதம், குறுகிய பயன்பாட்டுவாதம். 'ஸ்தாநோசியப்' பார்வை போன்றவற்றின் பாதிப்புக்களை நாம் காணமுடியும்.... இவர்கள் அரசியலுக்கு மிகை அழுத்தம் கொடுக்க இது தவிர்க்க முடியாத வகையில் கலை இலக்கியத்தின் அழகியல் அம்சங்களை மறுதலிப்பதில் போய் முடிந்தது." என்ற உயிர்ப்பின் இவ் வாதம் அடிப்படையில் சுரண்டும் வர்க்கத்தின் கூக்குரல் சார்ந்ததே. அடிக்கட்டுமானமான பொருளாதாரம் (அதாவது மக்களின் வறுமை பற்றிய காரணத்தை) பற்றிய விமர்சனமற்ற, எந்தப் படைப்பாளியும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தமது படைப்பை வழங்க முடியாது. ஏனெனில்: இன்று ஒருவன் உழைத்து பட்டினியுடன் வாழ, மற்றவன் உழைக்காமல் ஆடம்பரமாக வாழ இந்தப் பொருளாதாரம் என்ற அடிக்கட்டுமானமே காரணமாகும்.

இந்தப் பொருளாதார இடைவெளி ஏன் ஏற்பட்டது? எப்படி மனிதனானவன் சுரண்டப்படுகின்றான்? ஏன் மக்கள் பஞ்சத்தாலும் பட்டினியாலும் வாழ்கின்றார்கள் எனின் அதை ஒட்டி அவர்களின் வாழ்வின் சகல பிரிவுகளும் உள்ளது எனத் தெரிந்து கொள்ளாத எந்தப் படைப்பும் ஒடுக்கப்பட்ட மக்களின் படைப்புக்களே அல்ல. மாறாக ஒடுக்குபவர்களின் படைப்புகளே ஆகும். இந்த வகையில் பொருளாதாரப் பார்வையின்றி படைக்க கோரும் உயிர்ப்பு, மேல தட்டுப் பிரிவினரின் படைப்புக்களை அங்கீகரிக்கக் கோருகின்றனர். பூர்சுவா வர்க்க எழுத்தாளர்களை மகிழ்வியுங்கள்! எனக் கோருகின்றனர்.

# உலகில் இன்று முதல் வெற்றிகரமான புரட்சி மெக்சிக்கோவாக இருக்கலாம்!



ன்று உலகில் எழுச்சி பெற்று வீறு நடை போட்டுவரும் மெக்சிக்கோ புரட்சியாளர்களை கண்டு முதலாளித்துவ அறிவு ஜீவிகள் அலறத் தொடங்கியுள்ளார்கள். எந்த நேரமும் மெக்சிககோவில் எதுவும் நடக்கலாம் எனப் பீதி உறைய ஓலமிடத் தொடங்கியுள்ளனர். இங்கு எழுந்து வரும் எழுச்சி, அன்று காலனியாதிக்க வெள்ளை இன வெறியர்களின் இரத்தப் படுகொலை ஆட்சியை தெளிவாக அம்பலப்படுத்தும். பூர்வ குடி இந்தியர்கள் தங்கள் சொந்த மண்ணை மீட்டெடுப்பர்.

மெக்சிக்கோ மக்கள் குறிப்பாக அமெரிக்க ஆக்கிரமிப்பு, மற்றும் சுரண்டலை எதிர்த்து வருகின்றனர். இப்போராட்டம் என்பது அமெரிக்காவுக்கு எதிராக சுதந்திரப் பொருளாதாரக் கோரிக்கை ஒரு பலமான கோஷமாக உள்ளது. ஆனால் அமெரிக்கா கடந்த வரலாற்றில தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மூலம் மெகசிக்கோ மீது 14 ஆயுதம் தாங்கிய யுத்தத்தை நடத்தியிருந்தது. இதன மூலம் 1900 களில் அமெரிக்கா ஆக்கிரமிப்பாளர்கள் மெக்சிக்கோவில் அரைவாசிப் பகுதியை கைபற்றித் தம்முடன் இணைத்துக் கொண்டனர். அந்த வகையில் இன்று அமெரிக்காவின் பகுதியாகவுள்ள டெக்ஸாஸ் மற்றும் கலிபோர்னியா உட்பட மெக்சிககோவில் அரைவாசிப் பகுதியை அமெரிக்க ஆக்கிரமிப்பாளரிடம் மெக்சிக்கோ இழந்து போனது. இதன் பின்னணியில் தான் இன்றைய போராட்டத்தை நாம் பார்கக வேண்டும்.

1968ல் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வமைப்பு 83ல் தனது இராணுவப் பிரிவை உருவாககியது. 94 தை முதலாம் நாள் போராட்டத்தில் திடீர் எழுச்சி கண்டது. தை முதலாம் திகதி சிறைச்சாலைகளை உடைத்தும், ஆயுதங்களை கைப்பற்றியும், முன்னாள் கவனர் மற்றும் பெரும் நிலப்பிரபுகளையும் கைது செய்தனர். அத்துடன் 6 பெரிய நகரததைக் கைப்பற்றியும் பல கிராமங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதை எதிர்த்து தை 2 தொடக்கம் பத்து நாட்கள் 15,000 அரச படைகள் எதிர் தாக்குதலை நடததியது. 2,000 அப்பாவி மக்களை படுகொலை செய்து, பல ஆயிரம் மக்களைக் கைது செய்து சித்திரவதை செய்தது.

இததாக்குதல தொடங்கிய அதேநேரம் மெக்சிக்கோ எங்கிலும் புரட்சியாளர்களை ஆதரித்து, படு கொலைகளை நிறுத்தக் கோரி மககள் கிளர்ந்தெழுந்தனர். தலைநகரில் மட்டும் ஒரு லட்சம் பேர் ஆர்ப்பாட்டம் செய்தனர். இவர்களின் பிரதான தளம் மலைக்காடுகளை அண்டிய 15,000 சதுர கி.மீ பரப்பாகும். 94மார்கழி மெக்சிக்கோ ஸதம்பிதம அடைநது உடைந்தது. இதேவருடம் ஒரு லட்சம் மெக்சிக்கோ அகதிகள் அமெரிக்க எல்லையைக கடநதனர். இவர்களை வேட்டையாட விமானங்களையும், கெலிகளையும், விசேடரோநதுப் படைகளையும் அமெரிக்கா அமர்த்தியது.

மெக்சிக்கோவிலுள்ள மொத்த நிலத்தில் 40வீதம் சில பிரபுகளிடம மட்டும் குவிந்துள்ளது. அதேநேரம் மெகசிக்கோ மக்கள் 3.5 வீத நிலத்தை மட்டுமே பயன்படுத்துகின்றனர். மிகுதி 30 வீத நிலம் NAFTA என்ற அமெரிக்க வர்த்தக வலயத்துக்கு வழங்கபபட்டுள்ளது. இது இலங்கைபோல 2 மடங்காகும்.

புரட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள சியாபாஸின் 80 வீதமான மக்கள் வறுமையிலும், 30 வீதமானோர் எழுதப் படிக்கத் தெரியாதும் உள்ளனர். இதன் தலைவர் யாரெனத் தெரியாத நிலையில் மார்க்கோஸ் என்பவர் இவ் அமைப்பக்காக பகிரங்கமாக குரல் கொடுக்கின்றார். இவர் வழங்கிய பேட்டியில் இன்று உலகில் சோசலிஸ முகாம் எதுவும் கிடையாது என்கிறார். மார்க்சிட்டா? லெனினிஸ்டா? மாவோயிஸ்டா? கஸ்ரோயிஸ்டா? என்று பலர் கேட்பதாகக் கூறிய மார்கோஸ் தமக்கு இதில் எதுவெனத் தெரியாது எனவும் நாம் இவைகளிலிருந்து ஒன்றை உருவாக்கி உள்ளோம் எனப் பிரகடனம் செய்துள்ளனர். ஸ்டாலின் காலத்தில் பல வடிவங்களை அங்கிகரித்தது. இக் கட்சியினரை இட்டு உலக ஏகாதிபத்தியங்கள் அலறத் தொடங்கி விட்டன. அதன் தொங்கு அறிவுஜீவிகள் மீண்டும் கம்மினிசமா? என வேறு புலம்பத் தொடங்கி விட்டனர். ஆம் புரட்சி இந்த ஒட்டுண்ணிகளை நசுக்கும்! மக்கள் புரட்சியில் தங்கள் உரிமைகளை மீட்டெடுப்பர்! என்பதை மெக்சிக்கோ எழுச்சி மீளவும் ஒரு முறை பகைரற்றும்!

www.tamilarangam.net

அடுத்து குறுகிய பயன்பாட்டு வாதம் என்பது அடிக்கட்டுமான - மேற்கட்டு மான நோக்கில் அணுகப்படுவதாக குற்றம் சாட்டுகின்றனர். இங்கு உயிர்ப்பு தனது அரசியலில் பாட்டா ளி வர்க்கம் அல்லாத பிரிவுகளுக்கா ன தனது சேவையை அங்கீகரிக்கக் கோருகின்றனர். குறுகிய பயன்பாட்டு வாதம் என்பதை யதார்த்தப் படைப்பு களாக நாம் கணமுடியும். விலங்கிலி ருந்து மனிதன் தன்னை வேறு படுத்தி யது உழைப்பு என்ற பயன்பாட்டு நிலைமைகளில் தான். மனிதன் தனது உழைப்பும், அதன் வாழ்வியலின் போதே படைப்புக்களைப் படைக்கத் தொடங்கினான். இப் படைப்புகள் தனது உழைப்பின் மீதான பயன்பாட் டுத் தன்மையைப் பிரதிபலித்தது. சமு தாயத்தில் எப்பொழுது ஒருவன் உழையாமல் வாழத் தொடங்கின்ா னோ, அப்பொழுது பயன்பாட்டுப் படைப்புக்களுக்குப் பதில் அரிப்புப் படைப்புக்களை அவன் உருவாக்கி னான்.

இன்று படைப்புக்கள் ஒன்று மனித உழைப்பைச் சார்ந்தும், மற்றொன்று மனித உழைப்பைச் சாராமலும் உள்ளது. படைப்புக்கள் உழைப்பைச் சாராது உள்ளவைகள், பயன்பாட்டை இழந்துவிட்ட உழைக்காத பிரிவின் ஆபாச, அரிப்புக்களாக தங்கள் கொரூரங்களை இனம் காட்டாத, சொகுசாக அழகியல் 'மூலம் மூடி மறைக்கின்றனர். உதாரணமாக: ஆணாதிக்கத்தை அம்பலப்படுத்தாத பெண்ணிலைப் படைப்புக்கள் உருவா க முடியுமா? அவ்வாறு அம்பலப்படுத் தியது மட்டுமே பெண்ணிலைவாதப் படைப்புக்கள் எனக் கூறின்: அது குறுகிய பயன்பாட்டுத் தன்மை உடை யது என அழுது புலம்பும் எக்கருத் தும்- ஆணாதிக்கம் சார்ந்ததே!

ஸ்தாநோசியப் பார்வை என அழும் உயிர்ப்பு மேற் குறிப்பிட்டது போல் 30 வருடத்திற்கு முன் இவை தகர்க் கப்பட்டவையே. அதாவது ஸ்ராலினின் காலத்தில் அடிக்கட்டுமானம் - மேற் கட்டுமானம் என்ற மார்க்சிய அடிப்ப டைப் பொது உண்மைகளின் மீது விமர்சனம் அமைந்தன. இது 30 வரு டங்களுக்கு முன் தகர்ந்து போனது என பெருமைப்படும் உயிர்ப்பு, அதற்காக சந்தோசப் படுகின்றனர். ஆனால் நாம் வருந்துகின்றோம். ஏனெனில் 1950 களின் இறுதிகளில் ஸ்தாநோசியப் பார்வையை குருசேவ் தாக்கிய போது, வர்க்கமற்ற சமுதா யம் உருவானது எனக் கூறியபோது உயிர்ப்பு விரும்பியது போல குருசேவ் அனைத்து அரசுக்கான அடிக்கட்டுமா னப் பார்வையை நீக்கிய போது அங் கு படைப்புக்கள் ஒடுக்கும் வர்க்கம் சார்பாக மாறியது. சோவியத்தின் நிறமும் மாறியது.

அடுத்து அரசியலுக்கு மிகையான அழுத்தம் கொடுத்து அழகியலை புறக்க ணிப்பதில் இட்டுச் சென்றது என்கின் வாதம் தொடர்பாக: கீழே மேலும் விவா திக்கவுள்ளோம். இருந்த போதும் எல்லா விதமான சேர்க்கைப் படைப்புக்கள் மட்டு மே இந்த நிலையை அடையும். ஒரு படைப்பாளி பொருளாதாரம் மீதான தெளி வான விமர்சனத்தைக் கொண்டிருப்பின் அங்கு அரசியலும், அழகியலும் ஒருங்கே சேர்ந்து படைப்பைப் பெற முடியும். ஆனால் உயிர்ப்பு இங்கு அரசியலை நிரா கரிக்க அழகியலுக்கு அதி முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

**இன்று அடிக்கட்டுமானம் – மேற்கட்டமான அரசியலை ஏற்றவர்கள் தான் தாய் மற்றும் வீரம் விளைந்த நூல்களைப் படைத்து நின்றனர். அவற்றை இவர்கள் போற்று கின்றனர். அப் படைப்புக்கள் அரசியலைக் கூறுகின்றது. அதேநேரம் அது அழகியலையும் கொண்டுள்ளது.**

இன்று அடிக்கட்டுமானம் - மேற்கட்டமான அரசியலை ஏற்றவர்கள் தான் தாய் மற்றும் விரம் விளைந்த நூல்களைப் படைத்து நின்றனர். அவற்றை இவர்கள் போற்று கின்றனர். அப் படைப்புக்கள் அரசியலைக் கூறுகின்றது. அதேநேரம் அது அழகியலையும் கொண்டுள்ளது. எனவே படைப்பில் அரசியல் இல்லை யெனில் அது மக்களை ஏமாற்றும், மந்தையாக்கும் ஒரு போதைவஸ்தே ஆகும்-

உயிர்ப்பு மேலும் ''.... கலை இலக்கியம் செய்யாது கூடிக்கலையும் அரசியல் பேசிக் கொள்ளும் நிகழ்வாக மட்டும் மாறிக் கொள்ளும் போக்கையே இங்கு கேள்விக் குள்ளாக்க வேண்டியுள்ளது..... குறிப்பிட்ட ஒருவர் கலைஞராக இருப்பதா? அல்லது புரட்சியாளராக இருப்பதா? அல்லது இரண்டுமாக இருப்பதா? என்பது முற்றிலும் அவரைப் பொறுத்த விடயம்.'' என உயிர்ப்பு தனது தத்துவார்த்த வேர்களைத் தொட்டுக் காட்டுகின்றனர்.

இன்று பல்வேறு இடங்களில் கூடிக் கலையும் போக்கு என்பது தனித்து அரசியலோ, அல்லது கலையோ பேசிக் கொண்டால் மட்டும் அது கூடிக் கலை யாமல் போய்விடுமா? கூடிக் கலையும் போக்கின் அடிப்படை என்பது நம்பிக்கையீ னத்தடன் கூடிய விரக்த்தி மனப்பான்மை ஆகும். இங்கு இவர்கள் கூடிக்கலையும் போது கூட கலையையும் அரசியலையும் பேசிக் கொள்வதில் சரியான நிலையைக் கொண்டுள்ளனர். அந்த வகையில் கூடிக் கலையும் வரையிலும் கூட இது சரியாகத் தொடரப்பட வேண்டம்.

இன்று உயிர்ப்பு உட்பட அனைத்துத் திரிபுவாதிகளும் மார்க்சிசத்தின் மீது தாக குதலைத் தொடுக்கும் போது சோவியத் தில் அரசுக்கும் மக்களுக்கும் இடை வெளி அதிகரித்துச் சென்றது எனவும், அரசு உதிர்ந்து போகமல் இறுக்கமா னது எனவும், பல்வேறு பல்வேறு பிரிவு களுக்கு இடையில் இருந்த வேறுபாட் டை சோவியத் - சீனாவில் சுட்டிக்காட் டித் தாக்குகின்றனர். இப்படித் தாக்கிவிட்டு சோம்பல் முறித்த படியே அரசியலையும் கலையையும் வேறு வேறாக்க, இடைவெளியை அதி கரிக்க வைக்க, அரசியலா? கலையா? என்பது அவரவர் சொந்தப் பிரச்சனை யாகக் காட்டி இரண்டையும் தனியாக ஒன்றிலிருந்து ஒன்றை ஓரங்கட்டுகின் றனர்.

முதலாளித்துவ சமுதாயத்தில் இருந்து சோசலிச சமுதாய மாற்றமும், பின் கம்மினிச சமுகத்தை நோக்கிய பாதையில் இவைகளுக்கு இடையிலான வேறுபாடு இல்லாது போக வேண்டும். ஓர் அரசி யல்வாதி, ஒரு கலைஞன், ஒரு தொழி லாளி என்ற அளவில் அவர்களின் சிந் தனை, செயலென எல்லாமே ஒன்றாக மாற வேண்டும். தொழில் ரீதியான சிறப்பான வேறுபாடு என்பது வேறு. ஆனால் சிந்தனையில் ஒவ்வொரு மனி தனும் அரசியல் வாதியாகவும், கலை ஞனாகவும், தொழிலாளியாகவும் அவன் எல்லாமாக இருக்க வேண்டும். இது மட்டமே புரட்சியைப் பாதுகாக்கவும், எல்லா நேரமும் விழிப்பைக் கொண்ட சமூகமும் , தொழில் ரீதியாகவுள்ள வேறுபாட்டை ஒழித்துக் கட்டவும் வேண்டும்.

இதைவிடுத்து அரசியல்வாதி, கலைஞ னுக்கு இடையில் இரு வேறுபட்ட வேலையை அதன் அரசியல் நிலையை நியாயப்படுத்தி ஒன்றிலிருந்து ஒன்றை அகற்றுவது, அதை நியாயப்படுத்துவது என்பது இந்த முதலாளித்தவ சமுதாய இருப்பின் மீதான தீராத காதலேயாகும். இவ் முதலாளித்தவ சமுகத்தில் மட்மே வேலைப் பிரிவினையும், அதற்கு இடை யில் இடைவெளியும் அகட்டிச் செல் கின்றனர். இதை உயிர்ப்பு நியாயப்ப டுத்தவும், கோரவும் செய்வது என்பது மார்க்சிசமே அல்ல. இன்று ஒரு மனி தன் அரசியலையும் கலையையும் பேசு வது ஒரு சரியான நிலை. அவர்கள் எதையும் படைக்கவில்லை என்பது, இன்றுள்ள எமது சூழ்நிலையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையாகும் என்பதை உயிர்ப்பு திசை திருப்ப முனைகின்றது.

ஒரு கலைஞனின் வேலை அரசியற் தீர்வு வைப்பது இல்லை: அது அரசியல்வாதியின் வேலை என்ற கூற்று இந்த உயிர்ப்பின் சொற் தொடர்களில் உள்ளடங்கியதே. இதே கருத்தையே 'மார்க்சிசமும் தேசியமும்' என்ற புத்தகத்திற்கு முன்னுரை எழுதிய யமுனா ராஜேந்திரன் பல்வேறு சந்தர்ப்பத்தில் தெளிவாகக் கூறியுள்ளார்.

குறிப்பாக அவர் ரோஜா, பம்பாய், இந்திரா போன்ற படங்களின் மீது முன்வைத்த விமர்சனங்களில், மணிரத்தினத்தை நேர்மையானவர் எனப் பிரகடனம் செய்த போது அதற்கு எதிரான விமர்சனத்தில் அவர் தீர்வு வைப்பது கலைஞனின் வேலையல்ல. அரசியற் தீர்வு வைப்பது அரசியல் வாதியின் வேலையென மீள மீள கூறியுள்ளார். பம்பாய் சினிமா பற்றிய நியாயப் படுத்தலில் பல்வேறு விமர்சகர்களும் இக்கருத்தைப் பிரதிபலித்து நின்றனர். இதனுடன் உயிர்ப்புக்கும் உடன்பாடும் ஏற்படும். ஏனெனில் அது தான் உயிர்ப்பினதும் அடிப்படையாகும்.

இப்படித் தம்மை மார்க்சிய வாதிகள் எனப் பிரகடனம் செய்யும் மார்க்சியப் போலிகள் இக்கருத்து மணிரத்தினத்தையும், அதன் ஆதிக்க வெறிகளையும் நியாயப் படுத்துகின்றனர். இதற்குத்தான் நவீன சிந்தனையை எல்லோரும் சிந்திக்க வேண்டும் என உயிர்ப்புக் கோருகின்றது. இந்த சீரழிவு, சந்தர்ப்பவாத மார்க்சியர்கள் ஒரு புறம் *தீர்வு வைப்பது கலைஞனின் வேலையல்ல* எனப் பிரகடனம் செய்ய *மணிரத்தினமோ அதை நிராகரித்துள்ளார். மணிரத்தினம் ஓர் அரசியல் தீர்வை இப் படத்தின் மூலம் மௌனமாகவே முன்வைத்துள்ளார்.*

இதை இந்த மார்க்சிய விரோதிகள் மூடி மறைக்க எல்லாவித சொல்லடுக்குகளையும் மாறி மாறிப் பயன் படுத்துகின்றனர். மணிரத்தினம் என்ற பார்ப்பான் இந்தியா விஸ்தரிப்பு வாதத்தை, பிராந்திய வல்லரசு நோக்கை, தேசிய - இன - மத - சாதி ஒடுக்குமுறைகளை தனது படத்தின் மூலம் நியாயப்படுத்தி நிற்கின்றார்.

இவை இப்படங்கில் வெளிப்படாமல் இருக்கவே அழகியலை உயர்ந்த அளவில் எல்லாத் துறைகளிலும் கையாள்கின்றார். மக்களின் நாளாந்த வாழ்வில் இப்படமும், அதன் அடிப்படை யதார்த்தமும் எழுந்தால் மட்டுமே, அழகியலை மீறி நேரடியாக பாதிக்கப் பட்டவர்கள் இப்படங்களை எதிர்த்தனர். மற்றவர்கள் படத்தைப் பார்த்து விட்டு அழகியலில் கவரப்பட்டு விசிலடித்துவிட்டுச் சென்றனர். 1991 இலும், 93 இலும் முறையே மத்திய கிழக்கு, மற்றும் சோவியத் பாராளுமன்றம் மீதான தாக்குதலை சினிமாவாகக் காட்டிய தொலைக் காட்சிகள், மக்களை அழகியல் மூலம் ரசிக்கும் பார்வையாளராக மாற்றினர். இதையே மணிரத்தினம் என்ற பார்ப்பான் மிகத் திறமையாக அழகியல் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களை, எதிர்ப்பை கொச்சைப் படுத்தி ஒடுக்குபவனின் குரலாக ரசிகனை மாற்றி, படத்தை நியாயப்படுத்தி உள்ளார்.

கலையில் குறிப்பாக சினிமாவில் எப்பொழுதும் எல்லாவற்றுக்கும் தீர்வை முன்வைக்க வேண்டி ஏற்படுகின்றது. ஏனெனில் அது அடிமட்ட மக்களிடம் தான், அக்கலையை உயிர்வாழ முன் வைக்க முடிகின்றது. எனவே சினிமாவில் எல்லாம் தீர்வைத் தாங்கி உள்ளன. அதனால் அது எந்த சமுக அமைப்பைச் சார்ந்தது என எடுத்த எடுப்பிலேயே இனம் கண்டுவிட முடிகின்றது.

மற்றைய கலைகள் அடிமட்டம் என்பதைவிட மேல்மட்டக் கலையாகவே உயிர் வாழ்ந்த வண்ணம் உள்ளது. ஏனெனில் அது அழகியலை தன்னுள் புகுத்தி மக்களின் உழைப்பையும் நடைமுறையையும் நிராகரித்து, மேல்மட்ட அரிப்புக் கலையாக உள்ளது. அதனால் அது தீர்வை பிழையாகத் தன்னும் நேரடியாக வைக்கத் தவறுகின்றது. அல்லது பிழையாக முன்வைக்கும் போது அழகியல் முலாம் பூசப்படுகின்றது.

ஒரு தொழிலாளியின் உடம்பில் எழும் நாற்றம் உழைப்பின் வேர்வையால் தான் எழும். ஆனால் அது நாற்றம் எடுக்கா து. ஆனால் உழைக்காத ஒருவனில் வெளியேறும் நாற்றம் மிதம்மிஞ்சிய தேங்கிய கழிவுகளினால் மேல்லெழும் நாற்றமாகிறது. இதைப் பூசி மெழுக இவர்களுக்கு நறுமனம் (சென்ட்) தேவைப்படுகிறது. இது போன்றுதான் கலைகள். தொழிலாளியின் கலை எப்பொழுதும் அவனின் உழைப்பை நேரடியாகப் பிரதிபலிக்கும். அங்கு அழகியல் வெறும் கழுவும் தண்ணீர் போன்றதே. ஆனால் உண்டு கொழுக்கும் உழைக்காத பன்றிகளின் அரிப்புக் கலையை மூடி மறைக்க அழகியல் தேவை. அதாவது நறுமனம் மூலம் கழுவப்பட வேண்டும். இதுவே இரண்டுக்கும் உள்ள வேறுபாடாகும்.

அடுத்து உயிர்ப்பு தமது கருத்தில் "இன்று நாம் கலை இலக்கிய விமர்சனத்தை ஒரு கொச்சையான உள்ளடக்க வாதமாக மட்டுமே குறுக்கும் போக்கும் இன்னும் ஓய்ந்தபாடில்லை. கலை இலக்கியத்தை சாராம்சத்தில் சில சமூகக் கருத்துக்களின் தொகுதியாக மட்டும் காண்பதே உள்ளடக்க வாதத்தின் அடிப்படையாகும். என்ற உயிர்ப்பின் இக் கருத்து கருத்து முதல்வாத படைப்புக்களை அங்கீகரிக்க அதுவும் மார்க்சிசத்தின் பெயரால் கோரும் ஒரு வேடிக்கையான நிகழ்வே.

> "மனிதன் மீது வெளிப்புற உலகத்தின் தாக்கங்கள் அவனது மூளையில் பதிந்தே அங்கே உணர்ச்சிகள், சிந்தனைகள், இயப்புணர்ச்சிகள், விருப்பாற்றல்களாக - சுருக்கமாகக் கூறுவதென்றால், கருத்தியலான ஆர்வங்களாக - பிரதிபலிக்கின்றன."
>
> -லூட்விக் ஃபயர் பாஹும் மூலச் சிறப்புரை ஜெர்மன் தத்துவ ஞானத்தின் முடிவும்-

ஒரு மனிதனின் சிந்தனை என்பது கலையாக பரிணாமிக்கும் போது பூமியில் காணப்படும் பொருள் சார்ந்தே அது வெளிப்படுகிறது. அப் பொருட்கள் என்பது இன்றை உலக ஒழுங்கில் இரண்டு வர்க்க நிலைகளுக்குள் பிரிக்கப்படுகின்றது. ஒரு காதலைப் பற்றிய ஒரு கலையில் கூட அது வர்க்க இருப்புக்குள்ளானது. அங்கு ஆணாதிக்கம், சுரண்டல் என்ற பல நிகழ்வுகளும், அக் காதலுக்குள் ஊடுருவியும் நிற்கிறது. இதுபோன்று யுத்தப் பிரதேசத்திற்குள் வாழும் மக்கள் சாதரண வாழ்வையும், அதன் அழகியலையும் ரசிக்க முடியாது. இதுபோன்று உயர்ந்த சாதியினர் வாழும் வாழ்வையும், அதன் அழகியலையும் தாழ்தப்பட்ட சாதியினர் வாழவோ அதன் அழகியலை ரசிக்கவோ முடிவதில்லை. வெள்ளை இனத்தவர் வாழும் வாழ்வையும் அதன் அழகியலையும் கறுப்பு இனத்தவர்கள் வாழவோ, அதன் அழகியலை ரசிக்கவோ முடிவதில்லை. வெள்ளை இனத்தவர் நாடுகளில் வெள்ளையர் வாழும் வாழ்வையும், அதன் அழகியலையும் அங்கு புலம் பெயர்ந்த கறுப்பின அகதிகள் வாழவோ அழகியலை ரசிக்கவோ முடிவதில்லை. இது போன்று பாட்டாளி ஒரு முதலாளியின் வாழ்வையோ, அதன் அழகியலையோ ரசிக்க முடிவதில்லை. ஒரு பெண் ஆண்போல் வாழவோ அதன் அழகியலை ரசிக்கவோ வாழவோ முடிவதில்லையே.

இப்படியாக நாம் யதார்த்தத்தில் எவ்வளவோ உண்மைகளைக் காண முடியும். அதேநேரம் கருத்தை முதன்மையாகக் கொண்ட ஒரு கருத்து முதல்வாதி, படைப்புக்கள் சில சமூக கருத்துக்களின் தொகுதி என்பதை மறுக்கின்றான். சமூகத்துக்கு வெளியே கருத்தை முதன்மையாகக் கொண்ட கற்பனைக் கருத்துமுதல் வாதப் படைப்பை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அங்கீகரிக்கக் கோருகின்றான். சமூகத்தை விட்ட படைப்பைக் கோரும் உயிர்ப்பு, சமூகக் கருத்துத் தொகுதியை தாண்டிய படைப்புக்களை மார்க்சிசத்தின் மூலம் அங்கீகரிக்கக் கோருவது திரிபுவாதமாகவும் உள்ளது, அதேநேரம் அது கருத்து முதல் வாதமும் ஆகும்.

இன்று படைப்புக்கள் என நாம் ஆராயும் போது படைப்புக்கள் இரண்டாகப் பிரிகின்றது. இப்பிரிவு என்பது எப்பொழுதும் ஒரு பிரிவால் எதிர்க்கப் படுகின்றது. வர்க்க சமுதாயத்தில் எல்லோருக்குமான படைப்பை குரு சேவ் மற்றும் உயிர்ப்புக் கூறுவதைப் போல யாராலும் படைத்துவிட முடியாது. ஏனெனில் உலகம் வர்க்கங்களாகப் பிரிந்து கிடக்கின்றது. இதை லெனின் வரலாற்றில் கார்ல் மார்க்ஸ் தத்துவத்துக்கு விதிக்கப்பட்ட வருங் காலம் என்ற புத்தகத்தில்...

''வர்க்க மல்லாத சோசலிசம் வர்க்க மல்லாத அரசியல் இவை குறித்த எல்லாத் தத்துவங்களும் அப்பட்டமான அபத்தமே என்பது நிருபணமாயிற்று''

அடிக்கோடு லெனின்

எனச் சரியக லெனின் சுட்டிக் காட்டினார். மேலும் நாம் லெனினின் மார்க்சிசத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும் என்ற நூலை படித்துப் பார்த்தால்...

''மார்க்சிசம் ஒரு வகையான 'நச்சுத் தன்மை கொண்ட குறுங் குழுவாதம்' என்று அது கருதுகின்றது.... வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ள ஒரு சமுதாயத்தில் 'ஒரு சார்பற்ற' சமுதாய விஞ்ஞானம் எதுவும் இருக்க முடியாது.''

என லெனின் அழுத்தம் திருத்தமாகவே கூறியிருக்கின்றார்.

இன்று சார்பற்ற கலை இலக்கியம் என்பது எதுவுமே இல்லை. இதை இருக்கும் என உயிர்ப்பு பிரகடனம் செய்ய அடிக்கட்டுமானம் என்ற பொருளாதாரத்தின் மீது தாக்குகின்றனர். இதன் மூலம் வர்க்கமற்ற அழகியலை கூப்பிட்டு நியாயப் படுத்துகின்றனர். தொடர்ந்து உயிர்ப்பு பூர்சுவா வர்க்கத்திற்காக வாதிடும் விதத்தை சற்றுப் பார்ப்போம்

''நாம் ஒரு புதுக்கவிதையில், சிறு கதையில் ஆழமான சிக்கலான சமூகப் பிரச்சனைகளுக்கு தீர்வைத் தேடும் முயற்ச்சியும், குறிப்பிட்ட ஒரு சமுகப் பிரச்சனைக்கு தீர்வு காண்பது என்பது இலகுவானதல்ல என்பதை பார்க்கத் தவறி விடுகின்றோம்'' என உயிர்ப்பு தனது மார்க்சிச விரோத நிலைக்கு ஒரு நடைமுறைத் தீர்வை வைக்கின்றனர். ஓர் அரசியற் கட்சியின் போராட்டமும், அதன் தீர்வும் மிகத் தெளிவானதாக, அதை வழி நடத்துபவனாகவும் உள்ளது. இதை எப்படி சிறுகதைகளில், கவிதைகளில் கொண்டுவர முடியும் எனக் கேட்பதன் மூலம், படைப்புக்கள் கற்பனையான கருத்துமுதல் வாதமாகவோ வர்க்கமற்ற இலக்கியமாகவோ இருக்க முடியுமென்ற எடுகோளுக்கு வந்து விடுகின்றனர்.

நான்கு வரிக் கவிதை முதல் நாற்பது பக்க சிறுகதை வரை எல்லாமே ஏதோவொரு சமுகத் தீர்வையோ, அதன் சமூக அடிப்படையையோ அது தன்னுள் கொண்டேதான் உள்ளது. உதாரணமாக

திருஞானசம்பந்தர் தேவாரமான நாலு வரியில்..

''பெண்ணகத்து எழில் சாக்கியப் பேய் அமன் தென்னற் கற்பழிக்கத் திருவுளமே'' என்று உள்ளது. இதன் பொருள் சைவத்துக்கு எதிரான சாக்கிய, சமணப் பெண்களைக் 'கற்பழிக்க' எல்லாம் வல்ல பெருமானிடம் திருவுளம் தேடுகின்றார் திருஞான சம்பந்தர். இந்த ஒரு வரி சமுதாயத்தில் பலவற்றை கூறிச் செல்கின்றது.

ஒவ்வோர் வார்த்தைக்கும் அர்த்தம் உண்டு என்பதும், ஒவ்வோர் வார்த்தைக்கும் வர்க்கம் உண்டு என்பதையும் உயிர்ப்பு நிராகரிக்கின்றது. வர்க்கமற்ற படைப்புக்கள் உண்டு (வர்க்கமற்ற புலியைப் போல்) என்கின்றனர்.

ஒரு சிறுகதை, நாலுவரிக் கவிதை கூட இச் சமூகத்தைப் பற்றிய ஒரு பிரதிபலிப் பேயாகும். அது இச் சமூகம் பற்றிய விமர்சனமா? இல்லையா? என்பதே எம் முன் உள்ள கேள்வி. மனிதன் ஆத்தமற்ற புலம்பல் கவிதையாகவோ, சிறுகதையாகவோ இருப்பதில்லை. ஒரு பைத்தியம் பிடித்தவன் மட்டும் தொடர்பற்ற புலம்பலைச் செய்ய முடியும். ஆனால் ஒரு படைப்பு ஒரு தொடர்பற்ற புலம்பலல்ல. மாறாகத் திட்டவட்டமாக இச் சமுகப் படிமானத்தின் வெளிப்பாடுகளே! அது எந்த சமுகத்தைப் பிரதி பலிக்கின்றது என்பதே எமது பிரச்சனை யாகும்.

அடுத்து நாலுவரிக் கவிதையில், சிறு கதையில் ஓர் அரசியல் கட்சியின் முழு மையான தீர்வை வைக்க கோருவது என்ற உயிர்ப்பின் கண்டுபிடிப்பு நகைக்கத் தக்கதே யாகும். ஏன் புரட்சியாளர்கள் தொழிலாளர் விவசாயிகளிடம் செல்லும் போது ஒரு கவிதைபோல், ஒரு சிறுகதை போல பிரச்சனைகளை விரிவாக விளக்கி செல்கின்றனர். கமினிஸ்டுக்கள் திட்டத்தைப் போட்டு இதைச் செய்யுங்கள் எனப் பிரகடனம் செய்வதில்லை. மாறாக அவர்களின் நடைமுறை வாழ்க்கை, அதில் எழும் பிரச்சனைகள் அவர்களின் உழைப்பு என எல்லாவற்றையும் அவர்களிடம் கற்று, பின் அவர்களிடமே எடுத்துச் செல்லப்படுகிறது. இது சிறுகதையாக, கவிதையாக மாறுகின்றது ஆக்கப் படைப்பாகிறது.

## பெருகி வரும் சீரழிவுகள்!

ஓர் அமெரிக்க டொலர் கட்டனமாக செலுத்தினால் ஒரு நிமிடம் வரை தொலைபேசியில் பாலுணர்வு வக்கிரங்களை எதிர் முனையிலுள்ள பெண் கூறக் கேட்கலாம். பல தனியார் கம்பனிகள் கடுமையான போட்டியின் ஊடே வருடம் ஒன்றுக்கு 12,000 கோடி ரூபாய் வருமானம் பெற்றுத் தரும் தொழிலாக இந்த வக்கிர வியாபாரம் தற்பொழுது அமெரிக்காவில் நடைபெற்று வருகின்றது.

குடியேறிய இந்தியர்களும் இத் தொழிலில் உண்டு. ஜப்பானிலோ பயன்படுத்தப்பட்ட பெண்களின் உள் ஆடைகளையும், பாலுணர்வு - ஆபாச புகைப் படங்களையும் விற்க்கும் நிறுவனங்கள் புற்றீசல் போல் பெருத்து வருகின்றன. குறிப்பாக பள்ளிகளின் அருகிலேயே இதற்க்கான கடைகள் திறக்கப்பட்டு வருவதுடன், 15ல் இருந்து 20 வயதுக்கு உள்ளான மாணவ - மாணவிகள் தான் இச் சீரழிவுக்கு முதற் பலி ஆகுகின்றனர்.

நன்றி: புதிய ஜனநாயகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு படைப்பாளி மக்களிடத்தில் கற்றுக் கொள்ளவும், பின் அதைத் திருப்பிக் கொடுக்கவும் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த சமூகம் பற்றிய விமர்சனத்தை அவன் தெளிவாக பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் அவன் எதைப் பற்றிப் படைப்புச் செய்தாலும் அது அச் சமுக அமைப்பை விமர்ச்சிக்கும். அது தனது உள்ளடக்கமாக மாறும். அது ஒரு சமூக மாற்றத்தக்கான ஆக்கங்களைக் கொண்ட ஆக்கப் படைப்பாக மாறும்.

இன்று முற்போக்காக வெளிப்படுத்தும் அனைவரும், எப்போது தம்மை தம் படைப்புக்கள் மூலம் இனம் காட்டுகின்றனர் என்பது முக்கியம். அது அராஜகத்திற்கு எதிராகவே உள்ளது. இது இப் படைப்புக்களில் பொதிந்துள்ளது. அது நாலு வரி முதல் சிறுகதைவரை விரவி நிற்கின்றது. இதுமட்டுமே அவர்களைத் தனித்துவமாக்குகின்றது. இல்லாத வரை அவர்களை இனம் காண முடியாது. இல்லாத படைப்பு வாதிகளையும் உயிர்ப்பு முற்போக்காக அங்கீகரிக்கின்றது. அராஜகததை விமர்சிக்க முடியாதவர்கள் எப்படி முற்போக்கு வாதிகளாவர்?

உயிர்ப்பு மேலும் தமது திரிபுவாதத்தை விளக்க "ஒரு கலைஞனிடம் தீர்வை எதிர் பார்ப்பது என்பது அவசர சக்திக்கு அப்பாற்பட்ட தென்பதோடு, பொறுப்பை அவரது தலையில் வீனே சுமத்துவதாகவே அர்த்தப்படும்." என்கின்றனர். இது தொடர்பாக நாம் மேலே விவாதித்துள்ளோம். யமுனா ராஜேந்திரன் பம்பாய் படத்தை நியாயப்படுத்த இதே கருத்தையே முன் தள்ளுகிறார். ஆனால் உயிர்ப்போ அல்லது இவரோ எல்லாக் கலைஞனும் ஒரு தீர்வை முன்வைத்தே தீருகின்றான் என்பதை அழகியல் மூலம் பூசி மெழுகி மறுத்து நிற்கின்றனர். பம்பாய் படம் ஓர் அரசியல் தீர்வை தன்னகத்தே உள்ளடக்கி நிற்கவில்லையா?

அரசியற் தீர்வை வைப்பது கலைஞனின் வேலையல்ல என்ற சொற்தொடர் ஊடாக வைக்கும் தீர்வின் ஆதரவாளராக உயிர்ப்பு மாறி விடுகின்றது. அத்துடன் கலைஞனின் வேலையல்ல என்ற கூற்றினூடாக ஓர் அரசியல் வாதி தனது அதிகார நிலையை, ஆளும் நிலையை தனனுடன் தக்கவைத்துக் கொள்கின்றான். உயிர்ப்பு அதன் அரசியற் தலைவர்களும் தமது ஆளும் அரசு மட்டத்தை தனிமைப்படுத்தி, எல்லா வற்றிலும் மேலானதாக பிரகடனம் செய்கின்றனர். இப்படி இவர்கள் ➢

# ஜனநாயகத்தின் பரிசு

உலகில் ஜனநாயகத்தை அமுல் படுத்தும் ஏகாதிபத்தியங்கள் எப்பொழுதும் தமது நலன்களை முன் நிறுத்தி இதை ஒரு கூச்சலாக்கி உள்ளனர். இந்த ஜனநாயகம் என்பது எப்பொழுதும் மக்களைப் பலியிடுவதற்கே.

அண்மையில் வெளி வந்த 'யுனி செல்' அறிக்கை ஒன்றின் படி கடந்த பத்து ஆண்டுகளில் 20 லட்சம் சிறுவர்கள் கொல்லப் பட்டுள்ளனர். 50 லட்சம் சிறுவர்கள் அங்கவீனம் ஆகியுள்ளனர். மேலும் 50 லட்சம் சிறுவர்கள் அகதி முகாம்களில் தங்கி உள்ளனர். 120 லட்சம் சிறுவர்கள் வீடு வாசல்களை இழந்து நடுத் தெருவுக்குத் தள்ளப் பட்டுள்ளனர். உணவு இன்றியும், மருத்துவ வசதிகள் இன்றியும் 25 லட்சம் பேர் மரணம் அடைந்துள்ளனர். கடந்த பத்து வருடங்களில் 40க்கு மேற்பட்ட நாடுகளில் மொத்தம் 80 கோடி மக்கள் வருமான வீழ்ச்சியை அடைந்துள்ளனர்.

2ம் உலக யுத்தத்தின் பின்னும், பனிப்போர் முடிந்து இன்றைய நாட்களிலும் முதல் முறையாக சுமார் 40க்கு மேற்ப்பட்ட யுத்தங்கள் தற்பொழுது நடைபெற்ற வண்ணம் உள்ளது. இந்நிலையில் உலக அமைதியையும், ஜனநாயகத்தையும் பற்றி கூச்சல் போடும் ஏகாதிபத்தியங்கள் தமது கொள்ளையை இலகு படுத்த பல வழிகளிலும் முயன்று வருகின்றது. இந்த வகையில் உள் நாட்டு யுத்தங்களை ஏற்படுத்தவும், மத, இன மோதல்களைத் தூண்டி விடவும், நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ நிதி, பொருளாதாரம் , ஆயுதங்களைப் பயன் படுத்தி மூன்றாம் உலக நாடுகளை நவ காலனியாக்கி காலில் போட்டு மிதிக்கிறது.

ஐ.எம்.எவ்(IMF) மூலமும், புதிய வங்கிகள், டங்கல் திட்டம் போன்றவற்றின் ஊடாகவும் உலகை அடைக்கி ஆள்கின்றனர். இதன் மூலம் கடுமையான நிற்பந்தங்களை விதித்து சமூக நலத் திட்டங்கள், மானியங்களை நீக்குவதென எண்ணற்ற வழிகளில் வறிய நாட்டு மக்களை ஒட்டச் சுரண்டி வருகின்றனர். இதன் மொத்த விளைவுகளே மேற் கூறிய சிறுவர்கள் தொடர்பான புள்ளி விபரங்கள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாதிடின் அரசை ஒருக்காலும் ஒழிக்க முடியாது. அரசு ஒரு நிரந்தர அமைப்பாக அங்கீகரிக்கப்படும். வேலைப் பிரிவினை தொடர்ச்சியாக நியாயப் படுத்தப்படும்.

உயிர்ப்பு தனது கருத்தை நியாயப்படுத்த ''..... அவர் தீர்வு முன்வைக்கும் போது அழகியல் தளத்திலிருந்து அரசியற் தளத்தினுள் காலெடுத்து வைப்பதாகவே அர்த்தப்படும்.'' என்று உயிர்ப்பு வாதிட முனைவது அழகியல் படைப்புக்களில் அரசியல் இல்லை என்கின்றனர். அழகியல் உள்ள இடத்தில் அரசியல் இருக்க முடியாது என்கின்றனர். அதாவது தேன் இருக்கும் இடத்தில் வண்டு இருக்க முடியாது என்கின்றனர். நகம் உள்ள இடத்தில் தசை இருக்க முடியாது என்கின்றனர். அழகியல் உள்ள இடத்தில் சமூக யதார்த்தம் இருக்க முடியாது என்கின்றனர். ஆம், அழகியல் உள்ள இடத்தில் அரசியல் இருக்க முடியாது எனின், அது பூர்சுவா அழகியலாகவே உள்ளது. அதில் உள்ள பூர்சுவா அரசியல் அவ் அழகியல் மூலம் மூடப் படுகின்றது. இதையே இல்லையென உயிர்ப்பு நியாயப் படுத்துகின்றது. அழகியல் உள்ள இடத்தில் பெண் விடுதலை இருக் கமுடியாது என்கின்றனர். அதாவது அழகியல் உள்ள இடத்தில் ஆணாதிக்கம் மூடி மறைக்கப் படுகின்றது. இங்கு ஆணாதிக்கம் இல்லையென உயிர்ப்பு நியாயப் படுத்துகின்றது. அழகியல் சுயாதீனமான, சுதந்திரமான, சமுதாயத்திலிருந்து அன்னியப்பட்ட பருப் பொருள் சாராத வகையில் உள்ளதென வதாடுகின்றனர். எனவே தொழிலாளி இந்த படைப்பகளை இட்டு அலட்டிக் கொள்ளாமல் அச்சம் கொள்ளாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கின்றனர். அழகியல் படைப்புக்கள் எதிர் காலத்தில் சமுதாய மாற்றம் ஏற்பட்டு கமினிசமாக மாறினாலும் நிலையான, காலத்தால் அழிய முடியாதது என்கின்றனர். அழகியல் படைப்புக்களான பழைமையோ, புதுமையோ காலத்தால் கூட அங்கீகரிக்கப் படும் என்கின்றனர். இந்த வண்டவாலங்களையே உயிர்ப்பின் அரசியல் கோரிநிற்கின்றது. இது இந்த பூர்சுவா வர்க்கத்தின் அசல் அரசியல் கோரிக்கையே ஆகும். பெண் சமத்துவப் படைப்பு இல்லாத படைப்புக்கள் ஆணாதிக்கம் சார்ந்ததாக இருக்காது என்கின்றனர். இது அழகியல் தளத்தில் பெண் சார்ந்ததே என்கின்றனர். இப்படி எவ்வளவு மோசடி செய்து வருகின்றனர் இந்த உயிர்ப்பு குழுவினர்!

உயிர்ப்புக் கூறும் பிறிதோர் வாதத்தைப் பார்ப்போம்: ''அழகியல் விதிகள் சித்தாந்த வரையறுப்புக்கும், வர்க்க நிலைப் பாடுகளுக்கும் இத்தியாதிகளுக்கும் அப்பாற்பட்ட கலைப் படைப்பின் சொந்த விதிகள் எனலாம்.'' என்ற வாதம் இவர்களின் பூர்சுவா அரசியலை நியாயப் படுத்துவதை தெளிவாக்குகின்றது. இதற்கு மாஓவின் கருத்துக்களில் பதில் அளிப்பதாயின்:

''மனிதனின் சரியான கருத்துக்கள் எங்கிருந்து வருகின்றன? அவை வானத்திலிருந்து விழுகின்றனவா? இல்லை மூளையில் இயல்பாக உள்ளனவா? இல்லை. அவை சமுதாய நடைமுறையிலிருந்து மட்டும் தோன்றுகின்றன. உற்பத்திக்கான போராட்டம், வர்க்கப் போராட்டம், அறிவியல் ஆய்வு என்ற மூவகை நடைமுறையிலிருந்து வருகின்றன.'' என்ற மாஓவின் கூற்று இவர்களின் பொய்யான மார்க்சிய முகத்தையும், பூர்சுவா சிந்தனையையும் தோல் உரித்துக் காட்டுகின்றன.

அழகியல் மனிதனின் உலக நோக்கை மீறி சொந்த விதிகளைக் கொண்டது அல்ல. மாறாக மனிதன் உலக நோக்கிற்கு உள்ளார்ந்ததே அழகியல். மனிதனின் உலக நோக்கு என்பது சமூகம் இரண்டாகப் பிரிந்துள்ளது என்ற எல்லைக்கள் உட்பட்டதே. ஏனெனில் மனிதன் வாழ வேண்டுமெனின் உழைக்க வேண்டும். உழைப்பு என்பது இன்று சுரண்டப்படுகின்றது. சுரண்டப்படும் சமுதாயத்தில், மனிதனின் சிந்தனையும் இரண்டாகப் பிரிகின்றது. இது மனிதனின் எல்லாத் துறைகளிலும் காணப்படுகின்றது.

இதையொட்டி லெனின் எப்படி விளக்குகிறார் எனப் பார்ப்போம்: ''....சிந்தனை உணர்வு என்பவை உண்மையில் என்ன, அவை எங்கிருந்து தோன்றுகின்றன என்ற கேள்வி கேட்டுக் கொள்வோமேயானால் அவை மனித மூளைகளின் விளைவுகளே என்பதும், மனிதன் இயற்கையின் அதன் சூழலில் உள்ளும் உடலும் வளர்ந்து வருகிற ஒரு விளைவே.... இறுதியாக பகுத்தாராயும் போது, மனித மூளையின் விளைவுகள் இயக்கையின் விளைவுகளாகவே இருப்பதனால், அவை இயற்கையின் மற்றெல்லா பரஸ்பரத் தொடர்புகளோடும் முரண்பட்டிருக்கவில்லை.'' (அடிக்கோடு நாம்)

-மார்க்சிசத்தின் வரலாற்று வளர்ச்சியில்-

மனிதனின் சிந்தனை என்பது அவன் வாழும் வாழ்க்கையில் எழுகின்றது. இதனால் இது வர்க்கம்சார்ந்து விடுகின்றது. லெனினின் மேல் குறித்த அதே நூலில் அவர் கூறியதைப் பார்ப்போமாயின்: ''சமுதாயத்தைப் பற்றிய விஞ்ஞானத்தில்.... பொருள் முதல்வாத அடிப்படைக்கு இணக்கமாகக் கொண்டுவந்து, இந்த அடிப்படை மீது அதை மீண்டும் அமைப்பது அவசியமென மார்க்ஸ் கண்டார். வாழ்நிலையில் இருந்து உணர்வு தோன்றுகிறதே யன்றி உணர்விலிருந்து வாழ்நிலை தோன்றுவதில்லை என்ற பொருள் முதல்வாதம்..... வாழ்வு விசயத்திலும் சமுதாய உணர்வு சமுதாய வாழ் நிலையிலிருந்தே தோன்றுகிறது....'' (அடிக்கோடு லெனின்)

என விளக்கும் இம் மேற்கோள் மனிதனின் உணர்வு வாழ்நிலையில் இருந்ததான் தோன்றுகின்றது என்கிற போது அங்கு வர்க்க அடிப்படை அடிப்படையாகிறது. மாறாக உயிர்ப்பு நிலை நாட்ட முயலும் கலைப்படைப்பு சொந்த விதியைக் கொண்டது என்ற வாதம், உணர்வே வாழ்நிலையைத் தீர்மானிக்கின்றது என்ற கருத்து முதல்வாதக் கோட்பாடேயாகும். கலைப் படைப்பு என்பது வாழ்நிலையில் இருந்து தான் தோன்ற முடியுமே ஒழிய வெறும் உணர்விலிருந்து கலைப்படைப்பு தோன்றுவதில்லை! இதைப் பற்றி லெனின் அதே புத்தகத்தில் மேலும் விளக்கும் போது: ''திகைப்பூட்டும் புதிர் போல், குழப்படிபோல் தோன்றும், இதை ஆளும் விதிகள் என்ன என்பதை கண்டு பிடிப்பதற்கான ஒரு வழிகாட்டியை, அதாவது வர்க்கப் போராட்டம் என்னும் தத்துவத்தை, மார்க்சிசம் தருகின்றது... மேலும் வர்க்கங்களாக பிளவுண்டிருக்கின்ற ஒவ்வோர் சமுதாயத்திலும் அந்த வர்க்கங்கள் வசிக்கும் நிலை, வாழ்க்கை முறை ஆகியவற்றிலான வேறுபாட்டில் தான் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும் வேட்கை கிளைத் தெழுகின்றன. என்று விளக்கும் லெனின், உயிர்ப்பின் திரிபு வாதத்தை அன்றே அம்பலப்படுத்தினார்- அதன் ஆணி வேர்களை வெட்டி வீழ்தினார்.



**அழகியல் மனிதனின் உலக நோக்கை மீறி சொந்த விதிகளைக் கொண்டது அல்ல. மாறாக மனிதன் உலக நோக்கிற்கு உள்ளார்ந்ததே அழகியல். மனிதனின் உலக நோக்கு என்பது சமூகம் இரண்டாகப் பிரிந்துள்ளது என்ற எல்லைக்கள் உட்பட்டதே. ஏனெனில் மனிதன் வாழ வேண்டுமெனின் உழைக்க வேண்டும். உழைப்பு என்பது இன்று சுரண்டப்படுகின்றது. சுரண்டப்படும் சமுதாயத்தில், மனிதனின் சிந்தனையும் இரண்டாகப் பிரிகின்றது. இது மனிதனின் எல்லாத் துறைகளிலும் காணப்படுகின்றது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

➢ உயிர்ப்பு தனது திரிபு வாதத்தை அப்பட்டமாக கூறிவிட்டு, அதை அச் சொற் பிரயோகத்தின் முத்திரை குத்துவதென்று கூறி அதை நிராகரிக்க முடியாமல் தம்மீது அநுதாபத்தைத் திசைதிருப்ப முனையும் அவ் வாசகத்தையும் நாம் பார்ப்போம்:

"இதுபற்றி கேள்வி எழுப்பி விட்டால் போதும் திரிபுவாதிகள், மார்க்சிய விரோதிகள், ஏகாதிபத்திய கைக் கூலிகள் என முத்திரை குத்துவதில் இவர்கள் காட்டும் கவனத்தை வேறு உருப்படியான முயற்ச்சிகள் எதனிலும் காட்ட முடியாதவர்களாகவே உள்ளனர்" என உயிர்ப்பினர் அழுது புலம்புகின்றனர்.

முதலில் இப்படிக் கூறுபவர்கள் நாம் தவறான வகையில் திரிபுவாதிகள் எனக் கூறியிருப்பின் அதைத் தெளிவாக விளங்கப்படுத்த வேண்டும். ஏதோ தத்துவார்த்த விவாதம் நடத்திக் கொண்டிருப்பதாக பீற்றிக் கொள்ளும் உயிர்ப்பு, இதுவரை முன் வைக்கப்பட்ட எமது எந்தக் கருத்துகளுக்கும் பதிலளிக்க முடியாமல் இருந்துள்ளனர். பதிலளிப்பின் தமது சொந்தத் தளமே ஆட்டம் கண்டுவிடும் என்ற பயம் இவர்கள் பதிலளிக்க முடியாமைக்கு முக்கிய காரணமாகும். அடுத்து உருப்படியான முயற்ச்சி எதுவும் செய்யமுடியாது உள்ளனர் என கூறும் கூற்று, அடிப்படையில் சரியான மாற்றுக் கருத்தை தமது திரிபுவாத நோக்கின் மேல் வைப்பதைத் தடுக்கும் ஓர் எதிர் விளைவே யாகும்.

உருப்படி என்கின்ற போது நீங்கள் திரிபுவாதத்தை முன் தள்ள, அதை நாம் உருப்படியாக அம்பலப்படுத்தி மார்க்சிச உண்மைகளின் தத்துவத்தை, இந்த வரலாற்றுக் கால கட்டத்தில் நிலைநிறுத்தி வருபவர்களே. மற்றும் உருப்படி என்ற சொல்லின் செயலைக் குறிப்பின், இன்று எமது வரலாறு உங்களையும் உள்ளிட்டு ஒரு தேக்கத்திற்கே நகர்த்தியுள்ளது. நாம் இதை மற்றைய நாடுகளுக்கு விரித்துச் செல்லின், உங்கள் திரிபுவாதக் குரு அ.மார்க்ஸ் உருப்படியாக இந்தியப் புரச்சிக்கு என்ன செய்கிறார்? அவர் புரட்சிக்கு எதிராக எதிர்ப் புரட்சியை நிலைநாட்ட முனையும் அதே நேரம், புரட்சிகர பணியில் கருத்தியல் தளத்தில் எம் நிலையைக் தொண்டவர்கள், பல தியாகங்களுடன் நாள்தோறும் போராடி வருகின்றனர்.

திரிபுவாதிகள், மார்க்சிய விரோதிகள்.... எனக் கூறுவது தவறானது என்றதன் மூலம் திரிபுவாதமோ, மார்க்சிய விரோதப் போக்கோ, ஏகாதிபத்திக் கைக் கூலித் தனமோ மார்க்சிசத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு இருக்க முடியாது என்கின்றனர். அதாவது உயிர்ப்பு அங்கத்தவர்கள் இங்கு எமக்குக் கூறியதைப் போல, ஒருவர் மார்க்சிச வாதி எனச் சத்தியம் செய்யின் பின் அங்கு அவரின் அரசியல் விமர்சனம் அற்ற மார்க்சியவாதி ஆகி விடுகின்றது என்கின்றனர். மார்க்சிசத்தில் எப்பொழுதும் எல்லா விதமான போலிகளும் இருப்பர். இதை லெனின் சோசலிசடும் சித்தாந்தமும்.... என்ற நூலில்

**"எல்லா மர்க்சிய வாதிகளையும் மார்க்சிசத்தின் தத்துவ அடிப்படைகளையும் ஆதார வரையறுப்புக்களையும் பாதுகாப்பதற்காக அணிதிரட்டுவதைக் காட்டிலும் முக்கியமானது எதுவும் இருக்க முடியாது. ஏனெனில் மார்க்சிசத்தில் பல வகைப்பட்ட "சக பிரயாணி" களிடையே முதலாளித்துவ செல்வாக்கு பரவியுள்ளதால் எதிரெதிரான திசைகளில் இருந்து இவை திரித்துப் புரட்டப் படுகின்றன. .......பலர் இப்பொழுது தான்முதற் தடவையாக உண்மையான முறையிலே மார்க்சியத்தைத் தெரிந்து கொள்ள ஆரம்பித்து இருக்கிறார்கள். இது சம்மந்தமாக முதலாளித்துவ பத்திரிகைகள் என்றையும் விட அதிகமாக பொய்யான கருத்துக்களை சிருஷ்டித்தும், மிக விரிவாகப் பரப்பியும் வருகின்றன. இந்த நிலைமைகளிலே மார்க்சியவாதிகளின் அணிகளிலே ஏற்படும் சிதைவு தவிர்க்க முடியாதது என்பதற்குரிய காரணங்களைப் புரிந்து கொள்வதும், இச் சிதைவை எதிர்த்து முரணின்றிப் போராடுவதற்காக அணிகளைத் திரட்டி ஒன்று சேர்ப்பதும் மார்க்சிய வாதிகளுடைய இந் நாளைய கடைமையாகும்."**



## இங்கிலாந்து இளைஞர்களுக்கு தெரிந்தது மதுவே

நேர்முகத் தேர்வு செய்யப்பட்ட 17 வயதுடைய 50 இளைஞர்களில் 90 சத விகிதத்தினருக்கு இங்கிலாந்தை உலக வரைபடத்தில் சரியாகக் காட்டத் தெரியாது. 45 சத விகிதத் தினருக்கு போஸ்னியா எங்கிருக்கிறது என்றே தெரியாது தனது நாட்டின் வரலாறு பற்றியும், 2ம் உலகப் போர் பற்றியும் 60சத விகிதத்தினருக்குத் தெரியாது. இவையெல்லாம் பின்தங்கிய நாடுகளிலுள்ள இளைஞர்களிடம் கேட்கப்பட்ட போது அல்ல விஞ் ஞானத்தில் முன்னேறியுள்ள மேற்குலகைச் சேர்ந்த இங்கிலாந்து நாட்டு இளைஞர்களிடம் கேட்கப்பட்டவை 98சத விகித இளைஞர்களுக்குத் தெளிவாகத் தெரிந்த ஒரே விசயம் மதுவைப் பற்றியது தான்.

நன்றி: புதிய ஜனநாயகம்

## 2 ம் உலகமகா யுத்தத்தில் விலைமாதர்கள் ஆக்கப்பட்ட தென்கொரிய பெண்கள்

இரண்டாம் உலப் போரில் கிட்டத் தட்ட 2 லட்சம் பெண்களை நிரந்தர விலைமாதர்களாக தனது இராணுவத் தினருக்காக பாடி வீட்டில் வைத்திருந்ததை முதன் முறையாக ஒப்புக் கொண்டுள்ளது ஜப்பான் ஏகாதிபத்தியம். இப் பெண்களில் மிகப் பெரும்பாலோனோர் அச் சமயத்தில் ஜப்பானில் காலனி நாடாக இருந்த கொரியப் பெண்களே ஆவர். பலரையும் கட்டாயப் படுத்தி அடக்குமுறையின் மூலமே இதில் ஈடுபடுத்தி உள்ளது ஜப்பான். ஆனாலும் இன்று ஜப்பான் முழுப் பொறுப்பையும் தானே ஏற்றுக் கொள்ள வில்லை. அத்துடன் பாதி உண்மைகளை மறைத்து விட படாத பாடு படுகின்றது ஜப்பான் என்று கொரியப் பெண்கள் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்து உள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என லெனின் இன்றைய எமது நிலையை சரியாகப் படம் பிடித்துக் காட்டியதுடன், எமது செயலையும், அதன் உருப்படித் தனத்தையும் அங்கீகரிக்கின்றார். லெனின் கூடத் திரிபுக்கு எதிராக விட்டுக் கொடுக்காது போராடியவரே. அவர் திரிப்பவரைத் திரிபுவாதி என்றே கண்டித்தார். அடிக் கட்டுமானம் மேற்கட்டுமான உறவின் நோக்கில் பிரச்சனைகளை ஆராயாது நிராகரித்த படி தம்மை மார்க்சியவாதி எனப் பிரகடனம் செய்யின் அவர்களை லெனின் திரிபுவாதி என்றே கூறி அம்பலப்படுத்தினார். இதை நாம் கூறின் எப்படி முத்திரை குத்தலாக மாறிவிடும்? ஆம், திரிபுவாதி என்பது கோட்பாட்டு ரீதியிலானது. தனி நபர் என்ற ஒரு ஜடமல்ல. கோட்பாட்டு திரிபு எனின் அது திரிபுவாதம் தான். அதை எப்படிச் சொல்லி ஒப்பாரி வைத்தாலும் மாற்றிவிட முடியாது.

அடுத்து உயிர்ப்பு "நம்மவர்களான சிவத்தம்பி, நு.'.மான் என்பவர்கள், தமிழகத்தில் அ.மார்க்ஸ் போன்றோர் இச் (இச் என்பது நவீன மார்க்சிய நிலைகளை ஏற்றவர்களை - இது நாம்) சுயவிமர்சனப் போக்கை பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள்." என மாபெரும் கண்டு பிடிப்பை வெளியிட்டுள்ளனர். சிவத்தம்பி, நு.'.மான் பற்றி அ.மார்க்ஸ் தனது ஒரு வெளியீட்டில் இப்படிக் கூறியதுடன், அதை வாந்தி எடுத்து விட்ட உயிர்ப்பு எமது மண்ணில் பலர் தியாகம் செய்த போராட்ட வரலாற்றையே மறந்து போனார்கள். சிவத்தம்பி, நு.'.மான் பற்றி அ.மார்க்ஸ்க்கு தெரிந்ததெல்லாம் தனது கருத்தை நியாயப் படுத்த ஏதாவது இருந்தது என்பது மட்டுமே யாகும். அந்த வகையில் அ.மார்க்ஸ் ஜெர்மனியில் தமிழ்ப் பெண் ஒருவர் 'லெஸ்பியன்' என இந்தியாவில் கட்டுரை ஒன்றை எழுதினார்.

முதலில் அப் பெண் லெஸ்பியன் அல்லர். வெறும் வறட்டுத் தனமான குருட்டுப் பார்வையை மட்டும் கொண்டு தனது திரிபுவாதத்திற்கு சேவை செய்யும் பார்வை கோளாற்றில் எழுந்ததே இக் கட்டுரை.

இதுதான் சிவத்தம்பி, நு.'.மான் வழிகளிலும் ஏற்பட்டது. எம்மண்ணில் நாம் இன்றும் ஜனநாயகத்தை இழந்து உள்ளோம் என்றால், அதில் சிவத்தம்பின் பாத்திரம் குறிப்பிடத் தக்கதுடன், எதிர் புரட்சித் தன்மையும் வாய்ந்தது. எம் மண்ணில் எழுந்த தன்னியல்பான பல ஜனநாயகப் போராட்டங்களில், முக்கியமாக பெரிய போராட்டத்தின் தன்னியல்பை இந்த மாதிரி படித்த புத்திஜீவிகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி, அப் போராட்டத்தை போராடக் கூடாது என்று தடுத்து அழித்தவர்கள். அதற்கு நிறையவே பல சாட்சிகளாக இறந்தவர்களும் உயிருடன் உள்ளவர்களுமாக ஒரு பெரும் வரலாறே சாட்சியாக உள்ளது. பல பேரின் மரணங்களுக்குப் பின் இந்த சிவத்தம்பியின் வில்லங்கமான தலையீடும், அதைத் திட்டமிட்டே காட்டிக் கொடுத்த வரலாற்றுத் துரோகத்தனமும் இவரைச் சார்ந்ததாக உள்ளது. நாள் தோறும் நிறம் மாறிவிடும் ஒரு பச்சோந்தியாக உயிர் வாழும் ஒரு தசைப்பிண்டமே - சிவத்தம்பி.

நு.'.மான் பற்றி நாம் அவரின் நிலைப்பாடுகளை அதிகம் அறிய முடியாததால் கருத்துக் கூறுவதை மட்டுப் படுத்துகின்றோம். இருந்த போதும் அண்மையில் சந்திரிக்காவை முந்திக் கொண்டு ஒரு தீர்வுத் திட்டத்தை கொஞ்ச புத்திஜீவிகள் முன் வைத்தனர். சமர்-16ல் அதற்கு விமர்சனமும் உண்டு. அதில் நு.'.மானும் கையெழுத்து இட்டுள்ளார். ஆம் நு.'.மானின் அரசியல் இந்த பேரினவாத அரசை பொத்திப் பாதுகாக்கும் வகையில், அதன் நோக்கில் இந்த ஏகாதிபத்திய நோக்கத்தை நிலை நாட்டுவதே ஆகும்.

இந்த மாதிரி சுயவிமர்சனம் செய்த அ.மார்க்ஸ் பற்றி நாம் அவர்களின் வெளியீடுகளை விமர்சிக்கும் பொழுது தெளிவாக அம்பலப்படுத்த முடியும். அ.மார்க்ஸின் கருத்துக்களே உயிர்ப்பின் கருத்தாகும். உயிர்ப்பினருக்கான விமர்சனமே அ.மார்க்சுக்கும் ஆனதாகும்.

நாம் மார்க்சிய, லெனினிய, மாவோ சிந்தனைக்கு போராடும் போது மார்க்சிய அடிப்படை உண்மைகளை சார்ந்துள்ளோம். ஆனால் உயிர்ப்பு அ.மார்க்ஸ், சிவத்தம்பி, நு.'.மானைப் போற்றும் போது, யாரோ ஓங்காளித்து வாந்தி எடுத்துவிட்டதை அள்ளி வைத்துக் கொண்டு அதில் எந்த மார்க்சிச உண்மைகளையும் நிலை நாட்ட முடியாது போய் உள்ளனர்.

ஒரு நவீன தத்துவத்தை மாக்சிசத்திற்கு பிரதியீடாக நிலை நாட்ட உயிர்ப்பு முனைந்தால், அவர்களுக்கு நாம் கூறும் ஆலோசனை முதலில் உங்கள் கருத்தை நாம் முன் வைக்கும் கருத்தின் மீது நிலை நாட்டுங்கள்! அப்படி நிலை நாட்டின் அல்லது திரிப்பின் அதை மாக்சியம் எனப் பெயரிடாதீர்கள். புதிய பெயரை மார்க்சியத்தில் இருந்து வேறுபட்ட தன்மையை தெளிவாக முன்வையுங்கள். இதுதான் குறைந்த பட்ச நேர்மையாகும். இல்லாத வரை அது மோசடியுடன் கூடிய கபடத்தனம் கொண்ட சதியாகும்! ○

இந்தச் சதி கடந்த மார்க்சிய வரலாற்றில் எப்படி தோன்றின, கோரின என்பதை அடுத்த சமர் இதழ்களில் உங்கள் சுய தேடலை தூண்டும் வகையில் ஒரு கட்டுரையைத் தருகின்றோம்.

## சீனத்து முதலாளித்துவ மீட்சியாளர்களின் அடக்குமுறைகள்..

சிவப்பு கொடியை ஆட்டியபடி மா-லெ கூறியபடி முதலாளித்துவத்தை மீட்டு எடுத்த சீன முதலாளிகள் சொந்த மக்களையே சுரண்டி, அடக்கி ஆண்டனர்.

இதன் வெடிப்பாக சீன மாணவர்கள் கிளர்ந்து எழுந்தனர். 1989ல் தினமென் சதுக்கத்தில் இடம் பெற்ற போராட்டத்தில் தலைமை தாங்கியவர்களில் 9 பேருக்கு நீண்ட சிறைத் தண்டனைகளை மார்கழி 17ம் திகதி சீன அரசு வழங்கியது.


மக்களைச் சுரண்டி, மக்களை அடக்கி ஆளும் சீன முதலாளிகள் சிவப்புக் கொடியை ஆட்டியபடி மக்களை அடக்கி கொன்று குவித்தனர். ஒரு சோவியத், ஒரு சீனா எல்லாம் நிறம் மாறி இன்று உலக ஏகாதிபத்தியங்களுக்கு சேவகம் செய்து வருகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

செய்திச் சிதறல்

# பிரான்சில் மாபெரும் வேலை நிறுத்தம்!



பிரான்சின் அரசு சார்புத் தொழிலாளர்களுக்கு அடுத்த வருடம் எந்தவித சம்பள உயர்வும் வழங்கப்பட மாட்டாது என வலதுசாரி அரசு அறிவித்த பின் 10.10.95ல் 50 லட்சம் பேர் கொண்ட மாபெரும் பொது வேலை நிறுத்த மொன்றை தொழிலாளர்கள் நடத்தினர். தொடர்ந்தும் புதிய பொது வேலை நிறுத்தம் நடைபெற உள்ளதாக அறிய முடிகிறது.

80களில் இலங்கை - பிரான்ஸ் நாணய மதிப்பு கிட்டத்தட்ட சமமாகவே இருந்தது. இலங்கையின் பண வீக்கம் இன்று ஆதாள பாதாளத்தை நோக்கிச் செல்ல, பிரான்சில் வருடா வருடம் மோசமடைந்து செல்லும் பணவீக்கம் தொழிலாளர் வர்க்கத்தை ஏமாற்றிப் பிழைக்க ஒரு பிச்சைக் காசை எறிவது வழக்கம். இதைச் சம்பள உயர்வு என்று, இது தம்மால் பெறப்பட்டது என்று இன்று உலகிலுள்ள தொழில் சங்கங்கள் காட்டி உயிர்வாழ்ந்தும் வருகின்றது. இந்த வகையில் வழங்கப்பட்ட சம்பள உயர்வுகள் 89ல்-4.8%, 90-2% 91-2.6%, 92-3.3%, 93-3%, 94-1.5%, 95-3% 96-0% என்ற நிலைகளில் உள்ளது.

95ம் ஆண்டு புதிய ஜனாதிபதி ஆட்சிப்பீடம் ஏறிய பின் 3 வீத சம்பள உயர்வை அறிவித்த அதே நேரம் இவ்வளவு காலமும் பொருட்கள் மீது இருந்த வரியை(18.6%) என்றுமில்லாதவாறு 20.6% மாக அதிகரித்துள்ளது. எரிபொருள், குடிவகைகள், வாகனங்கள் என எண்ணியடங்காத பொருட்கள் மீது விலை அதிகரிப்பை அறிவித்துள்ளது. இதவிட போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்தியும், மருத்துவ உதவிகளைக் குறைத்தும் புதிதாக வரியிடப்படும் 1 வீதத்தால் சம்பளத்தைத் துண்டாடி குறைத்தது. இவைகளைக் கூட அமுல் படுத்துவதில் மக்களை ஏமாற்றி பல வழிமுறைகளைக் கையாள்கிறது. இந்தப் போக்கு பொருட்களின் விலையை திடீரென் 2 வீதத்தால் அதிகரிக்கச் செய்துள்ளது.


இன்று ஒருவீத சம்பள உயர்வைக் கொடுக்க 500 கோடி பிராங்குகள் தேவைப்படும் இன்றைய நிலையில், அடுத்த ஆண்டு அணுக்குண்டு செயவதற்கு மட்டும் 20,000 கோடி பணத்தை ஒதுக்கியுள்ளது. இதை விட முதலாளி-களை குசியாக்கும் வகையில் ஒரு-வரை வேலைக்கு அமர்த்தின் அவரின் இரண்டு வருட சம்பளத்தில் கிட்டத் தட்ட அரைவாசியை அரசு முதலா-ளிக்கு அன்பளிப்பாகக் கொடுக்க உள்ளது. இதற்கென 4,000 கோடி பிராங்குகளை 96ம் ஆண்டு பஜட்டில் ஒதுக்கியுள்ளது.

ஒரு தொழிலாளிக்கு ஒருவீத சம்பள உயர்வைக் கூட கொடுக்க மறுக்கும் அரசு 8 வீத சம்பளத்தை முதலாளிக்கு அன்பளிப்பாகக் கொடுக்கிறது இந்த பாவி அரசு. மற்றும் தனியார் வேலை நிலைகளில் பாரிய வேறுபாட்டையும் இவ் ஜனநாயக(?) அரசு கொண்டுள்ளது இதைத்தான் உண்மையான ஜனநாயகம் எனப் பலர் பிதற்றுகின்றனர். உதாரணமாக ஓய்வுக்காலத்தை எடுத்து மதிப்பிட்டுப் பார்த்தால்:

| | அரசு | தனியார் |
|---|---|---|
| வேலைக் காலம் | 35.5 வருடம் | 40 வருடம் |
| ஓய்வூதிய கட்டன வரி | *20% - 25%* | *50%* |
| ஆகக்குறைந்த ஓய்வூதியம் | *5,289 F* | *3,094 F* |

இதுபோன்று பல வேறுபாடுகளை அரசு - தனியார் தொழிலாளர்கள் கொண்டுள்ளார்கள். இன்று ஜெர்மனியில் வேலை நேரம் வாரமஇ ஒன்றுக்கு 35 மணி நேரமாகவும், சில வேலைத் தளங்களில் 32 மணியாகவும் உள்ளது. அதேநேரம் பிரான்சில் வேலை நேரம் 39 மணியாக உள்ளது. இதை 35 மணி நேரமாகக் குறைக்கக் கோரி ஒருபுறம் போராட்டம் நடக்க, இப் பொது வேலை நிறுத்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சுமார் 2லட்சம் தொழிலாளர்கள் 32மணி நேர வேலைவேண்டி சுலோகங்களைத் தூக்கிச் சென்றதைக் காணமுடிந்தது.

இன்று போராட்டத்தை முன்னெடுக்கும் தொழில் சங்கங்கள் வலது-இடது என எல்லோரும் இணைந்துள்ள அதேநேரம், இத் துரோகத் தொழிற் சங்கங்கள் அற்ப பொருளாதாரப் போராட்டங்களைக் கூட நேர்மையாக இன்று செய்வதே கிடையாது○



## சந்திரிகா இனவெறி இராணுவத்தின் கோர வக்கிரம்

மணலாறு வெலிஓயாவில் இராணுவம் புலிகளைச் சுற்றி வளைத்து கொலை செய்திருந்த செய்தி யாவரும் அறிந்த ஒன்றே. இதில் கொல்லப்பட்ட பலரும் பெண் புலிகளே. இப் பெண்களின் உடல்களை இராணுவ ஆணாதிக்க வெறியர்கள் நிர்வாணம் ஆக்கியதுடன். அவ்வுடல்களை நிர்வாணமாகவே மக்கள பார்வைக்கு முன்வைத்தனர்.

இவைகளை உலக, உள்நாட்டுத் தொலைக்காட்சிச் சேவைகள் பச்சையாக நிர்வாணமாகவே ஒளிபரப்பியிருந்தன. வக்கிரம் பிடித்த ஆணாதிக்க உணர்வுகள், பெண்கள் இறந்த பின்பும் கூட தனது கோர வெறியாட்டத்தை நிகழ்துவதை நாம் காணமுடியும். இவ் ஆணாதிக்க உணர்வு சிங்கள பேரினவாத நோக்கில் மலினப்பட்டு, சிங்கள மக்களின் மனங்களில் நிர்வாணமான ஒரு பேரினவாதச் செய்தியை ஆணாதிக்க நோக்கிலும் பறைசாற்றியுள்ளது○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பால்குடித்த பிள்ளையாரும் படித்த காச்சட்டை போட்ட முட்டாள்களும்

உண்மையில் உலகெங்கும் பால் குடிக்கும் பிள்ளையார் பற்றிய கதைகள் வானொலி. தொலைக்காட்சி, பத்திரிகை, ரெலி-போன் என அனைத் தையும் நிறைத்திருந்தன. பலகோடி விரயமான சொத்து இழப்புக்குப் பின் னும் சில சாதாரண விஞ்ஞான உண்மைகளைக் கூட காணமுடியாத படித்த காச்சட்டை போட்ட முட்டாள் கள் பால்போத்தல் ்களுடன் மணிக்கணக்காக நீண்ற வரிசையில் நின்றதை என்னென்று சொல்ல.

அண்மையில் இத்தாலியில் மாதா சிலை ரத்தக் கண்ணீர் வடிப்பதாகக் கூறி பல ஆயிரம் பேர் திரண்டு வரிசை யாக நின்று தங்கள் இயலாமையை முட்டாள்தனமான வெளிப்படுத்தினர். பின்னர், இச் சிலையினுள் செயற்கை யாகவே உருவாக்கப்பட்ட இரத்த வித்தைகளை விங்ஞானிகள் கையும் மெய்யுமாக நிறுவினர்.

பிரன்சில் பால்கொடுக்க வரிசையில் நின்ற போது, வேறு சில உருவங்க ளும் நீர், பால் போன்றவற்றைக் குடித் தன. சிலைகளாய் பல்வேறு வகைக-ளில் இருந்த வெவ்வேறு உருவங்கள் பால், நீர் உறுஞ்சுவது நடக்கத் தொடங்கியவுடன் பலருக்குச் சலிப்புத் தட்டிவிட்டது.

இந்த வித்தைகளை இன்று விஞ்ஞா னிகளோ அதன் விஞ்ஞான - பௌதீக காரணிகளைச் சுட்டிக் காட்டி அம்பலப் படுத்தியுள்ளனர். படித்த காச்சட்டை போட்ட முட்டாள்கள் இன்று மௌன-மாக இன்னுமொரு முட்டாள் காரி யத்தைச் செய்தபடி, கொஞ்ச நாளைக்கு முன்பு படு முட்டாள்தனமா க வாயாடியதை மறந்து விட்டு ஒருெ-சாட்டும் மூளையைப் பாவிக்காது மண்டுகளாக வெட்கம் ரோசமில்லாமல் வாழ்கிறார்கள்.

இந்த மாதிரி முட்டாள் தனத்தின் வெளிப்பாடே பிழைக்கத் தெரிந்த மதப் பூசாரிகள், அதையொட்டிய பல்வேறு பிழைப்புவாதக் கும்பல் இயந்திரமாக உழைத்த பணத்தை ஒரே அமுக்கில் அமுக்கி ஏப்பம் விட்டுத் திரிகின்றனர்.

## எண்ணைக் குத எரிப்பும் அதில் எழும் சந்தேகங்களும்

கொலன்னாவை, உறுகொடவத்தை. மற்றும் மட்டக்களப்பு எண் ணைக் குதங்கள் மீதான தொடர்ச்சியா ன தாக்குதல்கள் நடந்து வருகின்றது. இத் தாக்குதல்கள் அரசை பொருளாதா ர ரீதியில் நெருக்கடிக்கு உள்ளாக்கும் என்ற அடிப்படை பலமாக எல்லாப் பக் கத்திலும் எதிரொலித்தது. இந்த நோக் கில் தான் புலிகளும் இதைச் செய்திருப்பர் என அனைவரும் அபிப்பி ராயப்பட்டனர்.

ஆனால் இதன் பின்னணியில் இலங் கை பெற்றோலியம் கூட்டத் தாபனத்தை தனியார் மயமாக்கக் கோரும் அமெரிக் காவின் நோக்கமும், இத் தாக்குதலின் மூலமாக நிறைவேற்றப் பட்டதாக எண்ணத் தோன்றுகின்றது. அதற்காக வே இத் தாக்கதல் வழி நடத்தப்பட்ட தா? என்ற சந்தேகத்தை அமெரிக்க நிறுவன அதிகாரியின் அறிக்கை மெல்ல எழுப்பியிருக்கின்றது.

கொலன்னாவை எண்ணைக் கூட்டுத் தாபனத்துக்கு அருகில் இருந்த அமெரிக் பெற்றோலிய நிறுவனமான 'கால்ரெக்ஸ்' எந்தவித பாதுகாப்பின்றி இருந்த போதிலும் அது தாக்குதலில் இருந்து தப்பியிருப்பது, அல்லது தாக்கப்படால் விடப்பட்டது மேலும் சந்தேகத்தை வலுவாக்குகின்றது.

1985ஆம் ஆண்டு அநுராதபுர சிங்கள பொதுமக்கள் மீது புலிகள் இனப் படு கொலையை நடத்திவிட்டு அதை நீண்ட காலமாகவே உரிமை கோராது மறைத் து வந்தனர். பின் 88ல் இந்தியாவின் சொற்படியே தாம் இதைச் செய்ததாக புலிகளின் அன்ரன் பாலசிங்கம் உரி மையுடன் பிரகடனம் செய்திருந்தார். இதுபோன்று பெற்றோலியத் தாக்குத லும் நடந்திருக்க வாய்ப்புகள் உண்டா? என்ற கேள்வி இன்று எழுந்து நிற்பது புலிகளின் அரசியல் வர்க்க நிலைப் பாடு சார்ந்ததே.

எண்ணைக்குதத் தாக்குதலைத் தொடர்ந்து 'கால்ரெக்ஸ்' நிறுவன உப தலைவர் இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத் தாபனத்தை தனியார் மயமாக்க அறைகூவல் விடுத்துள்ளார்.

எரிந்துபோன நிறுவனத்திற்கு அரசி னால் மீள முதலீடு செய்ய முடியாது என்ற காரணத்தை முன்வைத்தே தனி யார் மயமாக்க முயலலாம் என்ற இன்றைய நிலையில், 'கால்ரெக்ஸ்' அமெரிக்க நிறுவன உபதலைவர் தமது நிறுவனத்தில் 10வீத பங்கை இலவசமா க ஊழியர்களுக்கு வழங்கியதன் மூலம் பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழி யர்களுக்கு மறைமுகமாக தனியார் மய மாக்கக் கோரும் தமது கோரிக்கைக ளுக்கு பக்கபலம் சேர்க்கும் முகமாக ஆசைகாட்டியும் உள்ளார். இத் தாக்குத லின் மூலம் பெற்றோலியக் கூட்டுத்தாப னம் தனியார் மயமாகும் என்பது எதிர் பார்க்கக் கூடியதே!

### அடுத்த இதழில்...

'நவீன மால்தூஸ் வாதமும் தொழிலாளி வர்க்கமும்'

கருச்சிதைவு, தருத்தடை பற்றிய ஓர் கட்டுரை. இக் கட்டுரையானது 16 ஜுன் 1913ல் பராவ்தா இல் பிரசுரமானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரான்சின் அணுக்குண்டு சோதனையும் அதற்கு எதிரான போராட்டங்களும்




பிரான்சில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த அணுகுண்டு பரிசோதனை முயற்ச்சி மீளத் தொடங்கியதைத் தொடர்ந்து பல பாகங்களிலும் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பியது. ஆராம்பத்தில் இப் போராட்டத்தை 'பச்சைக் கட்சி' (Green peace) இனரால் முன்னெடுக்கப் பட்டது. பின்னர் இது சாதாரண மக்களின் போர்க் குணமுள்ள போராட்டமாக வளர்ச்சி அடைந்தது.

பிரான்சில் இன்று ஜனாதிபதி, பிரதமர் போன்றோரின் செல்வாக்கு 5 மாதத்தில் திடீரென குறைந்து 10 வீதமாக மாறியுள்ளது. அணுகுண்டு செய்யும் நாடுகள், பரிசோதனையை நடத்தும் நாடுகள் எல்லாம் உலகைக் கொள்ளை அடிக்கவும், உலகை ஆளும் ஒரு கருவி என்ற நோக்கில் இதைத் தேவையான போது ஆதரிக்கவும், எதிர்க்கவும் செய்கின்றன. அணுகுண்டு பற்றிய எதிர்ப்பில்

- **ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் ஆதிக்கக் கனவுகளுக்கு இடையில் இதை எதிரக்கும் போக்கு**
- **ஏகபதிபத்தியத்துக்கும் அணுத் தொழில் நுட்பம் தெரிந்த அதைச் செய்ய முனையும் நாடுகளுக்கு இடையிலான முரண்பாடு**
- **அதுபற்றி எந்தத் தொழில் நுட்பமும் தெரியாத - தெரிந்த நாடுகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடு**

இந்த வகையில் பிரான்சில் அணுகுண்டு பரிசோதனை ஆரம்பத்தில் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடாக அதை நிறைவு செய்ய பச்சைக் கட்சியினர் போராட்டத்தை அரங்குக்குக் கொண்டு வந்தனர். பின் இப் போராட்டம் சாதாரண மக்களின் கைகளுக்கு இன்று சென்றுள்ளது.

பிரான்சில் பாரிய பொது வேலை நிறுத்தங்கள் நடந்து வரும் இந் நிலையில் கூட, உலகை ஆளும் தித்திப்புக் கனவுடன் அணுகுண்டு பரிசோதனையை நடத்துவதன் மூலம் ஐரோப்பாவில் முதன்மையான ஆதிக்கத்தைத் தக்க வைக்கவும், அமெரிக்காவுடன் போட்டி போட்டு உலகை பங்கு போட்டுக் கொள்ளவும் இவ் அணுகுண்டு பரிசோதனைகளை பிரான்ஸ் செய்து வருகின்றது.

இதுவரை கிடைத்த புள்ளி விபரங்களின் படி அமெரிக்கா 1,030 அணு பரிசோதனையையும், ரஷ்யா 715 பரிசோதனைகளையும், பிரான்ஸ் 204 பரிசோதனைகளையும், பிரிட்டன் 45 பரிசோதனைகளையும், சீனா 43 பரிசோதனைகளையும், இந்தியா 1 பரிசோதனையையும் செய்ததாக அறிய முடிகிறது.

மூன்றாம் உலக நாடுகள் மற்றும் 2ம் உலக நாடுகள் அதுபற்றி ஏதாவது தொழில் நுட்பத்தை கண்டு அறிய முடிந்தாலே உடனடியாக அணுகுண்டு செய்பவர்கள் மிரட்டல், பொருளாதாரத் தடை, குண்டு வீசுதல் என எல்லா வகையான ஆக்கிரமிப்பு நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றனர். அதே நேரத்தில் தாம் செய்வதை நியாயப் படுத்தவும், அதை எதிர்ப்பவர்களை அடக்கி ஒடுக்கவும் தயங்காது எல்லாவித ஒடுக்குமுறையையும் கையாள்கின்றனர்.

பிரான்ஸ் அறிவித்த படிக்கு முதல் குண்டு வெடிப்பை நிகழ்த்தியவுடன் உலகெங்கும் பாரிய ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. ஜெர்மனியில் 12,000 பேரும், சிலியில் 10,000 பேரும் ஆர்ப்பாட்டங்கள் செய்தனர். மிக மோசமான ஆர்ப்பாடடத்துடன் கூடிய வன்முறை பிரான்சின் காலனியான ராசிற்றி தலைநகர் பப்பிற்றியில் நடைபெற்றது.➢

www.tamilarangam.net





சர்வதேச விமான நிலையம் முற்றாகச் சேதமானதுடன் பல கட்டிடங்கள் சாம்ப லானது. அத்துடன் பொலிஸ் உயிருக்கு பயந்து தப்பியோடியது. சிலியும், நியூஸ் லாந்தும் தமது தூதரைத் திருப்பி அழைத்தது. நஹூறு என்ற சிறிய நாடு பிரான்சுடன் தனது ராஜதந்திர உறவை முறித்துக் கொண்டது. தென் பசுபிக் நாடுகள் உடன் நடக்க இருந்த பிரான்சின் பேச்சு வார்த்தையை தடைசெய்தது. உலக மருத்துவ சங்கத்தில் (W.M:A) அங்கம் வகித்த பிரன்சு வைத்தியர்கள் ராஜினாமா செய்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். பிரன்சு மக்கள் 63 வீதம் பேர் தமது எதிர்ப்பை வெளிக்காட்டி உள்ளனர். ஐரோப்பிய வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்ட சுவீடன் உதைபந்தாட்டக் குழு தனது எதிர்ப்பை திடீரென மைதானத்தில் சுலோகம் எழுதிய திரைச் சீலையை உயர்த்தி எதிர்ப்பை வெளிக் காட்டியது. உலகெங்கும் இவை போல பல எதிர்ப் புக்களை உலகமக்கள் வெளியிட்டு வரும் நிலையில் பிரான்ஸ் தொடர்ந்து பரிசோதனையையும் செய்து வருகின்றது.

பிரான்சுக்கு எதிராக ஒரு பொருளாதார தடையையோ, பகிஸ்கரிப்புக்களையோ இப் போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் கோராது மந்தப் படுத்தப்பட்ட எதிர்ப்பையே வெளிக்காட்டி வருகின்றனர். அதேநேரம் பிரான்சில் இதையொட்டி ஒரு பிரச்சாரத்தை முன்னெடுத்து செல்வது தவிர்க்கப் பட்டுள்ளது.

அணுகுண்டு பரிசோதனை முடிந்த பின் அதைப் பரிசோதிக்க விஞ்ஞானிகளுக்கு போதிய நேரங்கள் வழங்காது ஏமாற்றிய தாக விஞ்ஞானிகள் பிரான்ஸ் அரசை சாடியுள்ள அதேநேரம் அணுசக்தி விஞ்ஞானி ஒருவர் பிரான்ஸ் ஜனாதிபதி மக்களுக்கு பொய் கூறியதாக குற்றம் சாட்டியுள்ளார். அணுகுண்டு பரிசோதனையின் விளைவுகளை குறைத்துப் பிரச்சாரம் செய்ததாக அணு விஞ்ஞானத் தலைவர் மிஷேல் றிவாசி தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் அரசு இவ் அணுகுண்டை பிரான்சுக்குள் செய்யாமல் தனது காலனி நாடொன்றில் செய்து வருவது என்பது தனது சொந்த மக்களின் எதிர்ப்பை மட்டுப்படுத்தவும், அதன் கொரூரமான விளைவுகளை காலனி மக்களின் தலைகளில் சுமத்தி விடுவதற்கு இவ் ஏகாதிபத்திய வாதிகள் பின் நிற்க தயங்கவில்லை.



இன்று தேவை அணுகுண்டுகளை முற்றாக அழிப்பதும், அதன் முழுப் பரிசோதனை முயற்ச்சியை நிறுத்துவ தும் அதை ஒட்டி புரட்சிகரமான வழிமுறைகளில் போராட முனைவது மே ஆகும். எல்லா ஏகாதிபத்தி யங்களிட மிருந்தும் அணுகுண்டுகளை அழித்து ஒழிப்பதும், இதைச் செய்ய பரிசோதிக்க விளைபவர்களை குற்ற வாளிகளாக கூண்டில் ஏற்றி பிரகடனம் செய்யவும் வேண்டும்.

அடுத்த வருடம் அணு பரிசோத னைகளை நிறுத்தல் என்ற கபடம் நிறைந்த ஏகாதிபத்திய நோக்கம் தங்களது உயர் ஆளுமைகளைத் தொடரவே ஆகும். இவர்கள் பெற்ற தொழில் நுட்ப வசதியுடன் இரகசிய பரிசோதனைகள் மூலம் மேலும் அணுகுண்டுகளை செய்து குவித்து உலகை சல்லடையிட உள்ளனர். இந்த வகையில் பிரான்ஸ் 1996 ம் ஆண்டு 15 அணுகுண்டுகளைச் செய்ய ஆயத்தமாக 20,000 கோடி பிராங்கு களை ஒதுக்கியுள்ளது.

மக்கள் பட்டினியில் கிடந்தாலென்ன. செத்தா லென்ன யுத்தங்களையும் அதற்கு என்று ஆயுதங்களையும் செய்து குவிக்க இவ் ஏகாதிபத்தி யங்கள் பின்னிற்கப் போவதில்லை என்பதை இவ்வரசின் வரவு செலவு திட்டமே படம்பிடித்துக் காட்டுகின்றது. இவ் 20,000 கோடி F பணத்தைக் கொண்டு பிரான்சு மக்களின் சம்பள வீதத்தை 40 வீதத்தால் உயர்த்த முடியும். இது தற்போது பெறும் சம்பளத்தைப் போல் கிட்டத்தட்ட ஒன்றரை மடங்காகும். ஆனால் யுத்தமும் அதன் மீதான வெறியும், அதனால் பெறும் கொள்ளை இன்பமும் அதன் மீதான இவ் ஏகாதிபத்தியத்தின் கனவுகளும் மக்களை சாம்பல் மேடுகளாக்கும் செயலாகும். O

---

### ஒரு நிமிடம்

வாசகர்களே,

இடம் பற்றாக் குறை காரணமாக இம்முறை '2 ம் உலக மகா யுத்தத்தின் 50 - வது வருட கொண்டாட்டங்களின் ஊடாக மறைக்கப்பட்டு வரும் உண்மைகள்' என்ற தொடர் கட்டுரை இவ் இதழில் இடம் பெறவில்லை. அடுத்த இதழில் தொடரும். வாசகரின் சிரமத்துக்கு மனம் வருந்துகின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்ற இதழ் தொடர்

# உலக ஒழுங்கமைப்புக்கு உட்பட்ட உலகமானது, மீண்டும் ஏகாதிபத்திய காலனியாக..

## அமெரிக்க, ருசிய மேல்நிலை வல்லரசுகளின் வலிமை

அமெரிக்க மூலதனக் குவிப்புகள் பூதாகரமாக மாறத் தொடங்கின. 17.500 கோடி ரூபாய்களுக்கு மேல் வர்த்தகம் செய்த 12 பூதாகரமான தொழில் கழகங்கள் அமெரிக்காவிலுள்ள 500 பெரிய தொழில் கழகங்களின் மொத்த சொத்துக்களின் மதிப்பில் 27 வீதத்தையும், வர்த்தகத்தில் சமார் 29 வீதத்தையும் 1970 ஆம் ஆண்டே பிடித்து வைத்திருந்தன. நாட்டிலுள்ள 50 பெரும் வர்த்தக வங்கிகளின் சொத்து, மற்றும் வைப்புத் தொகையில் 61 வீதத்தை பத்து பென்னம் பெரிய வங்கிகள் கைப்பற்றின.

வெளிநாடுகளில் அமெரிக்காவின் நேரடி மூலதனம் இடல் 1950 களில் 20,550 கோடி ரூபாய்களாக இருந்தது. இது சுமார் 25 வருடங்களின் பின் அதாவது 1976ம் ஆண்டு 2,40,100 கோடியாக உயர்ந்தது. ஏகாதிபத்திய நாடுகளின் மொத்த மூலதன ஏற்றுமதியில் அமெரிக்காவின் பங்கோ 52 வீதமாகும். 76ல் இருந்த உலகிலுள்ள மிகப் பெரிய முதலாளித்துவ தொழில் கழகங்கள் 500 இல் 260 அமெரிக்காவின் கைவசம் வந்துவிட்டது.

1977ல் தேசம் கடந்த தொழில் கழகங்கள் ஏற்றுமதி செய்த மூலதனம் 2,11,750 கோடி ரூபாய்களாகும். ஆனால் இவை அந்நிய நாடுகளில் தொழில் வர்த்தகம் மூலம் கட்டுப் படுத்திய வரவு செலவு 11,34,000 கோடி ரூபாய்களாகும். அதாவது 5 மடங்குக்கு மேலாகும். ஏகாதிபத்தியங்களின் மொத்த வர்த்தக ஏற்றுமதியில் அமெரிக்காவின் பங்கு 76ல் 12.8 வீதமாகும். அதாவது 1,34,100 கோடி ரூபாய்களாகும். அந்நிய வர்த்தகத்தில் அமெரிக்கா 35,000 கோடி ரூபாய்களை நிகர உபரியாகச் சம்பாதித்தது. தொழில் நுட்பம், சேவைத்துறை, போன்றவற்றில் வர்த்தக உபரியாக 1,00,725 கோடி ரூபாய்களை அமெரிக்கா 77 களிலேயே சுருட்டிக் கொண்டது.

அமெரிக்க தேசம் கடந்த தொழில் கழகங்கள் தமது நேரடி முதலீடுகளின் மூலம் வெளி நாடுகளில் இருந்து 76ல் கொள்ளையிட்ட தொகையோ 39,200 கோடி ரூபாய்களாகும்.

மறுபுறத்தில் ருசிய ஏகாதிபத்திய தலைமையில் அதன் முன்னாள் சோசலிச நாடுகள் ஒரு போட்டி முகாமை உருவாக்கின. அத்துடன் சீ.எம்.ஈ.ஏ என்ற அமைப்பை உருவாக்கியது. உலக நாடுகளின் தேசிய வருவாயில் கால் பங்கையும், உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கையும், அடிப்படை எரி சக்தியில் 30 வீதங்களையும் இந் நாடுகள் பெற்றிருந்தன.

1976ல் அமெரிக்காவின் மொத்த தேசிய உற்பத்தி 28,58,500 கோடி ரூபாய்கள் எனவும், ருசியாவினுடையது 16,27,500 கோடி ரூபாய்கள் எனவும் இருந்தன. 1975ல் அமெரிக்காவை விடவும் ருசியாவின் இராணுவத்தில் ஆட்பலம் இரண்டு மடங்காக மாறியது. 400 யுத்த தந்திர ரீதியிலான அணு ஆயுத வாகனங்களை ருசியா பெற்றிருந்தது. இது அமெரிக்காவை விட கூடுதலாகும். தாக்குதல் பலம் வாய்ந்த கடற்படையை ருசியா நிறுவிக் கொண்டது. ருசியா தேசிய உற்பத்தியில் 15 வீதத்தை இராணுவத்திற்க்கு என்று ஒதுக்கியது.

அதாவது இது 2,22,250 கோடி ரூபாய்களாகும். இது அமெரிக்காவின் ஒதுக்கீட்டை விடவும் 24 வீதம் அதிகமாகும்.

## புதிய வல்லரசுகளின் தோற்றம்

ருசியாவின் தொங்கு தசை நாடுகளில் ஆட்சி மாறியதுடன், ருசியா பலவீனம் அடைந்தது. இதே நேரம் அமெரிக்காவின் இடத்தை ஜப்பான் கைப்பற்றியது. இந்நிலையில் ஜப்பானும், ஜெர்மனியும் முன்னிலைக்கு முன்னேறியது.

1988களில் ஜப்பானின் மொத்த தேசிய உற்பத்தி 35 லட்சம் கோடி ரூபாய்களை எட்டியது. இது ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டனின் மொத்த தேசிய உற்பத்திகளின் கூட்டுத் தொகைக்கு சமமானதாகும். இது அமெரிக்காவின் தேசிய உற்பத்தியையும் விஞ்சி நின்றது. 1987களில் ஜப்பானின் மொத்த வெளிநாட்டுச் சொத்து மதிப்பு 42 லட்சம் கோடி ரூபாய்களாக இருந்தது.

அமெரிக்காவின் ஆண்டு வர்த்தகப் பற்றாக் குறை 2,62,500 கோடி ரூபாய்களாக மாறிய போது, ஜப்பானில் 1,75,000 கோடி ரூபாய்கள் உபரியக அதிகரித்தது. அத்துடன் அமெரிக்காவின் இறக்குமதியில் 40 வீதம் ஜப்பானுடையதாக மாறியது. அமெரிக்காவின் பற்றாக் குறையைச் சரிக்கட்ட அதில் மூன்றில் ஒரு பங்கு மூலதனத்தை ஜப்பான் அமெரிக்காவில் முதலீடு செய்தது. 1987ல் 435 அமெரிக்கத் தொழில் கழகங்கள் ஜப்பானின் கைகளுக்கு மாறியது.

உலகில் மிகப் பெரிய கடன் வழங்கும் நாடாக இருந்த அமெரிக்கா மிகப்பெரும் கடனாளி நாடாக மாறி விட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறுபுறத்தில் ஜப்பான் மிகப்பெரும் கடன் கொடுக்கும் நாடாக மாறிவிட்டது. உலகில் மிகப் பெரிய வங்கிகளில் 4 மட்டுமே அமெரிக்காவின் கைகளில் உள்ளது. 1984ல் உலகில் மிகப் பெரிய வங்கியாக இருந்த அமெரிக்காவின் வங்கி 1990ல் 12வது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.



ருசியாவில் கொப்பச்சேர்வின் வருகையுடன் ருசியாவின் சந்தையோ ஏகாதிபத்திய விளைநிலமாக மாறியது. 1987 களுக்கு முன்பே பெரும் எடுப்பில் துவங்கிய தேசம் கடந்த தொழில் கழகங்கள் 250 கூட்டுத் தொழில்களைத் தொடங்கின. மேலும் 1400 கூட்டுத் தொழில்களுக்கு 1990 களுக்கு முன்பே கையொப்பமும் இடப்பட்டன. இத் தேசம் கடந்த தொழிலில் அமெரிக்காவே ருசியாவில் முதல் இடம் வகிக்கின்றன.

உலகிலேயே மிகப் பெரிய சரக்கு - பயணி விமானப் போக்குவரத்தான ஏர்ரோ.ஃப்பிளட் உலகில் அதிக பயணிகளையும் சரக்குகளையும் ஏற்றிய அதேநேரம் அதிக தூரம் பறந்து செல்லக் கூடியது. 1989ல் 342 கோடி ரூபாய் தான் லாபம் கிட்டியது. இந்த ஏகபோக கம்பனியை 5 ஆகப் பிரித்து வெளிநாட்டு நிறுவனங்கள் கூட்டுச் சேர்ந்துள்ளன.

---

## ☆ பனிப்போரின் முடிவுகள் மேலாதிக்கத்துக்கான முரண்பாடுகளைத் தீர்க்கவில்லை

அமெரிக்கா கிரமமான இராணுவத்தில் 20 லட்சம் பேரைக் கொண்டு இருந்தபோதும் சேமிப்பு இராணுவத்தில் 10 லட்சம் பேரையே கொண்டுள்ளது. இது 30 லட்சங்களாக மாறி உலகில் மிகப் பெரிய இராணுவமாக உள்ளது. அமெரிக்க இராணுவத் தலைமையான பெண்டகன் 10 லட்சம் சிவிலியன் ஊழியர்களைக் கொண்டுள்ளது. அமெரிக்காவின் வெளிநாட்டு இராணுவத் தளங்களை 1500 ஆக ரீகன் உயர்த்தினார். 1985 ன் இறுதியில் 3,22,000 துருப்புகளை ஐரோப்பாவிலும், 1,15,000 துருப்புகளை பசுபிக் தூர கிழக்கு நாடுகளிலும் நிறுத்தி மொத்தமாக வெளிநாடுகளில் 5,13,000 துருப்புகளை அமெரிக்கா குவித்து வைத்துள்ளது.


Ronald Reagan

1987 டிசம்பரில் ரீகன்-கொப்பச்சேவ் ஒப்பந்தத்தின் படி கொப்பச்சேவ் தானாகவே 5 லட்சம் துருப்புகளை கிழக்கு ஐரோப்பாவில் இருந்து 1988 டிசம்பரில் விலக்குவதாக அறிவித்தார். முதலில் ஐரோப்பாவில் இருந்து அமெரிக்காவை விட கூடுதலாக 3லட்சம் துருப்புகளை ருசியா விலக்கிக் கொள்ள சம்மதித்தது. ஆனால் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் பின்னர் இவ் ஒப்பந்தம் செயல் இழந்து அமெரிக்கா மேல் நிலையை அடைந்தது.

இரசாயன ஆயுதக் குறைப்பு அமெரிக்காவுக்கு சாதகமாகவே கைச்சாத்தானது. 24,000 தொன் காயலாங்கடை இரசாயன ஆயுதத்தை அமெரிக்கா அழிக்க, ருசியாவோ 44,000 தொன்களை அழிக்க ஒப்பந்தம் கோரி வழி அமைத்தது. அத்தோடு அமெரிக்கா புதிய ரக இரசாயன உற்பத்தியில் ஈடுபட அனுமதியும் அளித்தது. யுத்த தந்திர அயுதக் குறைப்பில் அமெரிக்காவை விட 2,000 அணு ஆயுத முனை ஏவுகனைகளை ருசியா அழித்து விட வேண்டும். இதன் மூலம் ருசியா அமெரிக்காவை தாக்கும் வலிமையை இழந்துவிடும். இந்த வகையில் கொப்பச்சேவ் அமெரிக்காவுக்கு சாதகமாகவே இயங்கினார். அமெரிக்காவும் ருசியாவும் உலகிலுள்ள அணு ஆயுதங்களில் 97 வீதங்களை ஏகபோகமாக வைத்துள்ளன.

---

## ☆ ஜப்பானிய மேல்நிலை..

1965 வரைக்கும் நிரந்தர பற்றாக் குறையைக் கொண்ட ஜப்பான் 1973-75 மற்றும் 1979-80 ஆகிய இரண்டு எண்ணெய் நெருக்கடி ஆண்டுகளைத் தவிர 1965 ல் உபரியாக இருந்த 1,900 கோடி ரூபாயை பத்து ஆண்டுகளில் 90 மடங்குகளால் உயர்த்தியுள்ளது.

1954ல் கொழும்புத் திட்டத்தில் பங்கேற்ற ஜப்பான் இரண்டாம் உலகப் போருக்கான நட்டஈட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. உலகப் போருக்கான நட்டஈடு என்ற முறையில் 190 கோடி ரூபாயை தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு வழங்கியது. இது ஜப்பானின் பொருட்களை ஆசியப் பிராந்தியங்களில் விற்பதற்கு பயன்பட்டது.

1964ல் ஐ.எம்.எ.ஃவ் இல் உறுப்பு நாடாக ஜப்பான் இணைந்து கொண்டது. 66ல் தென்கிழக்கு நாடுகளின் அமைச்சர்களைக் கூட்டிய ஜப்பான் ஆசிய வளர்ச்சி வங்கியை உருவாக்கியது. 1973-75ல் ஏற்பட்ட எண்ணை நெருக்கடியை, அமெரிக்க டொலர் வீழ்ச்சி, ஐ.எம்.எ.ஃவ் நெருக்கடியை ஜப்பான் சிறப்பாகப் பயன்படுத்தியது. இதைப் பயன்படுத்தி ஜப்பானானது நிதிமூலதனத்தை முடக்கி விட்டது. அயல் நாடுகளுக்கான கடன்- மூலதன ஏற்றுமதியில் 1984ல் பிரான்சையும், 85ல் பிரிட்டனையும் விஞ்சிய ஜப்பான் 88ல் அமெரிக்காவையும் விஞ்சியது.

'இன்றைய உலகப் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு புதிய பொருளாதார அமைப்பு' என்கிற பெயரில் மூன்று தவணைகளின் பெயரில் கடன்- முதலீட்டு நிவாரணங்களுக்கான வாக்குறுதியை அளித்தது. இதன்படி இரண்டே ஆண்டுகளில் ஜப்பான் அதிகாரபூர்வ வளர்ச்சி உதவியை இரண்டு மடங்காக்கியது. மூன்று ஆண்டுகளில் 38,000 கோடி ரூபாய் அளவு புதிய கடன் முதலீடு வழங்கியது. மூன்றே ஆண்டுகளில் 950 கோடி ரூபாய் அளவு ஆபிரிக்க நாடுகளுக்கு மானியமாக ஜப்பான் வழங்கியது. இதைத் தவிர 15,200 கோடி ரூபாய் அளவு தொகையை மிகமிக ஏழை நாடுகளின் கடனை தள்ளுபடி செய்தது. "அடகு வைத்த பொருட்களை மீட்டு மறு அடகு வைப்பதற்கு கடன்" என்கிற திட்டத்தைப் போல அமெரிக்கா மற்றும பிற ➢



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏகாதிபத்தியங்களிடம் ஏழைநாடுகள் பெற்றுள்ள கடன்களுக்கு டொலரில் ஈடுகட்டிவிட்டு உள்நாட்டு நாணயத்தில் கடன் பத்திரங்களைப் பெற்று மறு முதலீடும் செய்கிறது ஜப்பான்.

1947ல் ஜப்பான் இரண்டாம் உலகப் போரில் தோற்றுவிட்டதைத் தொடர்ந்து உருவான அரசியல் நிர்ணியச் சட்டமும் அமுலில் உள்ளது. இதன் 9வது பிரிவின் படி ஜப்பான் யுத்தம் தொடுக்கவோ, யுத்தத்தில் பங்கேற்கவோ, யுத்தத்திற்கான முப்படைகளை வைத்துக் கொள்ளவோ எதுவித உரிமையும் கிடையாது.

ஜப்பான் தற்பாதுகாப்புக்கு வைத்திருக்கும் படை, ஆயுதங்களுக்கு எல்லை வரம்புண்டு. ஜப்பானின் தேசிய வருவாயில் 1சத வீதமே இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும். வெளிநாடுகளுக்குப் படை அனுப்பவோ, அணு ஆயுதங்களை வைத்திருக்கவோ - தயாரிக்கவோ தடையுண்டு. தொலைதூர ஏவுகனைகளை வைத்திருக்கவோ, கமினிச நாடுகளுக்கோ அல்லது ஐ.நா சபை தடை விதித்துள்ள நாடுகளுக்கோ, அன்றேல் போரிடும் நாடுகளுக்கோ ஆயுத ஏற்றுமதி செய்யவும் தடையுண்டு.


ஆனால் இவைகளெல்லாம் கடந்த பத்து வருடங்களில் மாற்றம் பெற்று வருகின்றது. 1988ல் லட்சம் பேரைக் கொண்ட இராணுவமே இருந்தது. இதில் எந்த நேரமும் இராணுவத்தைப் பெருக்க பெருமளவு இராணுவ அதிகாரிகளைக் கொண்டுள்ளது. 1990 விபரப்படி 3,000 கி.மீ தூரம் தாக்கக் கூடிய ஏவுகனைகள், நீர்மூழ்கி, ருசில் எதிர்ப்புத் தாக்குதல் விமானங்கள், 840 கி.மீ தூரம் சென்று தாக்கக் கூடிய எ.்.ரக அமெரிக்க விமானங்கள் பல நூறும், விமானத் தாங்கிக் கப்பல்களும், ஆயிரக்கணக்கான பீரங்கிக் கவச வண்டிகளும் ஜப்பானிடம் கைவசம் உள்ளது.

இன்று மின்னணு மற்றும் தொலைத் தகவல் நுட்பங்கள், இராணுவ ஆயுத நவீன கட்டமைப்பில் ஜப்பானானது மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. ரக்கெற் ஏவுகனை - உந்துவிசைக் கருவிகள் முதல் கொண்டு லேசர் ஒலிக்கூதிர் நுண்கருவிகள் வரைக்கும் ஜப்பானின் தொழில் நுட்பங்களையே உலக இராணுவத் தொழில் கழகங்கள் சார்ந்துள்ளன. மற்றும் அணு உலை, கப்பற் கட்டுமானம், இரும்பு - எ.்.கு, மோட்டார் வாகனங்கள் உட்பட விண்வெளி நுட்பத்திலும் ஜப்பன் மிதப் பெரியதாய் கொடிகட்டிப் பறக்கிறது.

ஆயுத வெடிமருந்து உற்பத்தியில் ஜப்பான் பெரிய அளவில் போட்டியிடுகிறது. மிகப் பெரிய தொழில் கழகமான மிட்சுபிசி கனரக ஆலை தனது மொத்த உற்பத்தி வரவு செலவில் 25 சத விகிதம் ஆயுத வெடிமருந்தில் சாய்ந்துள்ளது. ஜப்பானின் நிசான் மோட்டார் கம்பனி ஆயுத உற்பத்தியை பத்து சத விகிதங்கள் உயர்த்தியதுடன், தாக்கும் ஏவுகனைக்கு முக்கித்துவம் அளிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளது. தேசிய வருவாயில் ஒரு வீதம் என்பதையும் மீறி ஜப்பான் 87களில் 47,000 கோடி ரூபாய்களை இராணுவத்திற்கு என்று ஒதுக்கியது. இது மொத்த தேசிய வருவாயில் 7 சத விகிதம் ஆகும். இது அமெரிக்கா, ரசியாவுக்கு அடுத்த இடமாக ஜப்பானை வைத்துள்ளது.

ஜப்பான் தனது கடற் பரப்பின் தற்காப்பு எல்லையை 1000 மைல்கள் என நீட்டியுள்ளது. 1987ல் சர்வதேச அவசர நிவாரண - அதிரடிப்படை அனுப்பவது, இராணுவ முகாம்களில் நிறுத்தவது பற்றி ஜப்பானிய தடைச் சட்டத்தைத் திருத்தியதுடன் மருத்துவர்கள் - இராணுவத்தைக் கொண்ட அவசர அதிரடிப் படையையும் ஜப்பான் கட்டியுள்ளது.


இரண்டாம் உலகப் போரின் குற்றவாளிகளை அமைச்சர்கள் பாராட்டி, இராண்டாம் உலகமகா யுத்தத்தைப் பற்றிய கருத்துக்களை பாடப்புத்தகங்களில் திருத்தி அமைத்து ஜப்பான் நியாயப்படுத்துகின்றது.



1988ல் உலக மொத்த தேசிய உற்பத்தியில் அமெரிக்க, ஐரோப்பிய சமூக நாடுகளின் பங்கு 25 சத விகிதமாகும். இதில் ஜப்பானின் பங்கு 15 சத விகிதமாகும். இது 88களின் பின் முதல் மூன்று ஆண்டுகளில் அதிகரித்துச் சென்றது. புதிய சர்வதேச ஒழுங்கை நிறுவ தனது பங்கை ஜப்பான் கோருகின்றது. ஆசியாவில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தத் தயாராகி வருகின்றது. அத்துடன் தேவையான ஒரு நிலையில் மிகப் பெரிய இராணுவ வல்லரசாக மாறும் வகையில் தன்னை தகவமைத்துள்ளது ஜப்பான்.

**வளரும்**


உங்கள் தொடர்புகளுக்கு



'SAMAR'
87, RUE DE COLOMBES
92600 ASNIERES SUR SEINE
FRENCE

**சந்தா தாபற்கணக்கு**

2.674.73 M
Centre de chequees postaux
75900 Paris chequees
FRANCE

**சந்தா அன்பளிப்புக்கான விபரங்கள்**

| | | |
|---|---|---|
| பிரான்ஸ் | 6 பிரதிகள் | *60F* |
| | 12 பிரதிகள் | *120F* |
| ஐரோப். நாடுகள் | 6 பிரதிகள் | *100F* |
| | 12 பிரதிகள் | *200F* |
| ஏனைய நாடுகள் | 12 பிரதிகள் | *225F* |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5ம் பக்கத் தொடர்...

இப்படி நாம் எழுதுவதைக் கண்டு சினந்து ''ஐயோ இது புலி ஆதரவு'' என முத்திரை குத்தும் போர்வழிகள் புலி அழிப்பில் எதிரியைக் கூட சாந்தமாக மனதளவில் பாராட்டு கின்றனர்.

இவர்களுக்கும் துரோகிகளுக்கும் இடையிலுள்ள ஒரோ ஒரு வேறுபாடு நடைமுறை தொடர்பானதே ஒழிய அரசியல் ரீதியாது அல்ல. இந்த வகையில் ஐரோப்பிய இலக்கிய சந்திப்பு பங்காளிகள் அண்மையில் தமக்குள் இரண்டாகிப் போய் உள்ளதைக் காணமுடியும்.


இன்று ஒரு மாற்றுக் கருத்துத் தளம் என்பது புலிகளை மட்டும் எதிர்ப்பது அல்ல. அரசையும் எதிர்ப்பதாகும். புலிகள் அழிக்கப்படும் போது அரசைத் தீவிரமாக எதித்துப் போரா டுவதும், புலிகளை நோக்கி ஜயநாய கத்தைக் கோருவதுமே ஆகும் இதுதான் தமிழ்த் தேசியத்தின் சுயநிர் ணயத்துக்குப் போராடும் ஒரு முற போக்குவாதியின் செயலூக்கமுள்ள சரியான கடமையும் நிலைப் பாடுமாகும். ○

# கொங்கொங்கில் வீதிக்கு வரவுள்ள தொழிலாளர்கள்

புதிய உலக அமைப்பின் கீழ், டங்கல் ஒப்பந்தத்தின் மூலம் கொங்கொங்கில் தொழிலாளாகளை வேலை நீக்கம் செய்ய உத்தரவு இடப்பட்டுள்ளது.
இதன் மூலம் 2000ம் ஆண்டளவில் 270 மில்லியன் தொழிலாளர்கள் வேலை நீக்கப்பட்டு வீதிக்குத் துரத்தப்படுவர்.


புதிய உலக அமைப்பில், டங்கல் ஒப்பந்தத்தில் உலகம் சொர்க்க புரியாக மாறுமென்ற ஜனநாயகத்தின் காவலன் அமெரிக்காவின் கொக்கரிப்புக்கள் மக்களைப் பட்டினிக்குள்ளும், அவர்களை வீதிகளுக்குத் துரத்தி கொன்று குவித்தும் தனது புதிய உலக அமைப்பை நகர்த்திச் செல்லவுள்ளது.

# ஐக்கிய நாடுகள் சபையின் 50 வது கொண்டாட்டங்கள் தொடர்பாக..




ஐக்கிய நாடுகள் சபை உருவாகி 50 வது வருட பூர்த்திக் கொண்டாட்டங்களில் உலகத் தலைவர்களான எல்லாக் கொள்ளைக் காரர்களும் ஒன்றாகச் சேர்ந்து கூடிக் குலாவினர்.

ஐ.நா என்பது அதன் வரலாறு நெடுகிலும் உலகிலுள்ள மக்களுக்கு சமாதானத்திற்குப் பதில் ஒடுக்குமுறையையே பரிசாகக் கொடுத்து வந்துள்ளது. வல்லமை மிக்கவன், பொருளாதாரப் பலம் உள்ளவன் ஐ.நாவை தனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்து உலகில் தமக்குக் கட்டுப் படாதவர்கள் மீது ஆக்கிரமிப்புக்களையும், அடாவடித் தனங்களையும் கட்டவிழ்து விட்டு, எல்லா வகையான மிரட்டல்களின் ஆயுதமாக ஐ.நா செயற்படுகின்றது.



ஐ.நா 2ம், 3ம் உலக நாடுகளின் உள்நாட்டில் தலையிடுவதும், சர்வதேச பொருளாதார புதிய உலக ஒழுங்கை உருவாக்க பல்வேறு மக்கள் விரோத ஒப்பந்தங்களை மூன்றாம் உலக நாடுகளின் விருப்பங்களை மீறி அவர்கள் மீது திணித்தது. இவற்றைச் செய்து விட மிரட்டல் என எல்லாவித போக்கிரி நடவடிக்கையிலும் இறங்கியுள்ளது. ஐ.நா என்பது இன்று அமெரிக்காவின் இராணுவ மையமே. இந்த ஐ.நாவிடம் மூன்றாம் உலக நாடுகள் எந்த அற்ப சலுகைகளைக் கூட அமெரிக்க நலனை மீறி பெற்று விட முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பீக்கிங்கில் பெண்கள் மாநாடு

பெண் விடுதலை என்ற உலகலாவிய பெண்கள் கோரிக்கையை இன்று அரசுகளும் அதன் அடிவருடிப் பெண்களும், அதன் மீட்பாளர்களாக மாறியதே சீனாவின் இரு பெண்கள் மாநாட்டுக் கூத்தடிப்புகளாகும்.

பெண் விடுதலை என்ற பெயரால் மேல் தட்டு ஆளும் வர்க்கப் பெண்கள் தனியாகவும், அதற்க்கு சேவை செய்யும் பெண்கள் தனியாகவும் கூடி பெண் விடுதலையை கேலி செய்துள்ளனர். வரலாற்றில் மே தினத்தை தொழிலாளர் கொண்டாடுவதற்குப் பதில் இன்று அரசுகளே கொண்டாடுவது போல பெண் ஒடுக்கு முறையின் அச்சு யந்திர அரசே கொண்டாடுவதால் அதன் தார்ப்பரியத்தை எவரும் இலேசில் புரிந்து கொள்ள முடியும்.

கம்மினிசத்தை குப்பைத் தொட்டியில் வீசிய டெங் முதலாளித்துவக் கும்பல், சீனாவில் பத்து லட்சம் பெண் சிசுக்களை வருடா வருடம் கொன்றழிக்க ஒத்துழைக்கும் டெங் கும்பல், பெண்களை விபச்சாரிகளாகவும் ஏலம் விடவும் அனுமதிக்கும் டெங் அரசு இம் மாநாட்டை நடாத்த உதவியது வரலாற்றில் பெண் விடுதலையை கொச்சைப் படுத்தி கேலி செய்து வருவதையே காட்டி நிற்கின்றது.

அங்கு கூடிய மேற்கு நாட்டு சீரழிவு பெண்நிலை வாதிகளும், வெள்ளை இனப் பெண்நிலை வாதிகளும் மூன்றாம் உலக மற்றும் கறுப்பின பெண்நிலை வாதிகளது குரல்களை அடக்கிய படி தமது சீரழிவுக்கு அங்கீகாரம் கோருகின்றனர். சரியான பெண் விடுதலையின் பால் குறைந்த பட்சக் கோரிக்கை மூன்றாம் உலக நாட்டுப் பெண்கள் சிலரால் எழுப்பப் பட்டன. அதை வறட்டு வாதம் எனவும், பின் தங்கிய கலாச்சாரம் எனவும் அவர்கள் குரல்கள் ஒதுக்கப்பட்டு, ஏகாதிபத்திய கலாச்சாரச் சீரழிவை பெண் விடுதலையென மாநாடு போற்றியது.

இன்று உலகில் சரியான பெண்நிலை வாதக் கருத்துக்கள் மூன்றாம் உலக நாடுகளில் இருந்தே (மாநாட்டில் கலந்து கொண்ட பெண் அமைப்பாளர்களிடம் அல்ல) வர முடியும் என்பது, இந்த ஏகாதிபத்தியக் கலாச்சாரப் பின்னணியில் அதிகமாகவே உணர்த்திவிட்டது இம் மாநாடு.

# ஜனநாயக அமெரிக்கா ஒரு குற்றவாளி நாடு!

இன்று அமெரிக்காவில் 50 லட்சம் சிறைக் கைதிகளை சிறைகளில் அடைத்து வைத்துள்ளது ஜனநாயக அமெரிக்க அரசு. ஆயுதக் கலாச்சாரமும், வெள்ளை - கறுப்பு நிற வெறியும், ஏழை - பணக்கார இடைவெளியின் கோர முகமும் அமெரிக்காவை ஒரு குற்றவாளிகள் கொண்ட தேசமாக மாற்றியுள்ளது. 50 லட்சத்தை விட இன்று அமெரிக்க ஆதிக்கத்தில் உள்ள குற்றவாளிகள் ஜனநாயக வேடமிட்டு பல லட்சமாகத் திரிகின்றனர். பல லட்சம் பேர் கொண்ட CIA பல லட்சம் கொண்ட இராணுவமென பல்வேறு வகையில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அமெரிக்கா பயங்கரவாத வன்முறைகளில் ஈடுபடுகின்றது. இவர்கள் உண்மையில் மக்கள் விரோத நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் பாரிய குற்றவாளிகளும் ஆவர். ஆனால் இவர்களே இன்று ஜனநாயகக் கவலரென்று கூச்சலிடுகின்றனர் ஒரு சொட்டும் வெட்கம் இல்லாமல்!

**வாசகர்களே! உங்களிடமிருந்து தரமான ஆக்கங்களையும் ஆரோக்கியமான விமர்சனங்களையும் எதிர் பார்க்கின்றோம்.**

சமர்-17 வெளியீடு - தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம் ஆடி,ஆவணி,புரட்டாதி பதிவு 3 16956

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்